UNIVERSAL
LIBRARY
OU_208019
UNIVERSAL
LIBRARY

கழக வெளியீடு—௲௪௬.

# ஔவையார் திருவுள்ளம்

கழகப் புலவர் :
திரு. தி. சு. பாலசுந்தரம் பிள்ளை அவர்கள்
(இளவழகனார்)
எழுதியது.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி சென்னை.

*rst Edition : April 1943.*

*[All Rights Reserved]*

*Published by :*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
TIRUNELVELI • & MADRAS

APRIL 1945

The Central Art Press, Madras
Q. H., M S /95-B, 700 Copies. 30-9-45

# பதிப்புரை

தமிழ் மொழியில் நீதி நூல்கள் தகுதியாக அமைந்திருக்கின்றன. ஊழி ஊழியாக வாழ்ந்து, வாழ்க்கை நுகர் வினைச் சிறப்பாக எய்திய நாட்டிலேதான் நீதிகள் நன்முக உருப்பெறும். தமிழ் நாடு அத்தகைய தொன்மையான நாகரிக வாழ்க்கையுடையதாகலின், தக்க நீதி நூல்கள்தமிழ் மொழியில் தோன்றியுள்ளன. நீதிகள் ஒவ்வொன்றும் நம் முன்னோரது நல்வாழ்க்கையின் நிம் பிழிவே எனலாம்.

ஔவைச் செல்வியார் இவ்வகையில் 'ஆத்திசூடி' 'கொன்றை வேந்தன்' 'மூதுரை' 'நல்வழி' என்னும் நான்கு அழகிய நீதி நூல்களை நமக்கு இயற்றிக் கொடுத்திருக்கின்றார். கருத்தில் இந் நான்கும் ஒத்த முடிபுடையவையாயினும், நூல் நெறியில் வேறு வேறு போக்கும் அமைப்பும் உடையனவே. வாழ்க்கைக்கு இன்றியமையாத நிறைந்த பொருள் நுட்பங்களும், பயிற்சிக்கு இன்றியமையாத உயர்ந்த புலமை நுட்பங்களும், உலகிற் செயல்வன்மைக்கு ஏதுவான சிறந்த கலைத் திட்பங்களும், வாழ்க்கையை முடிவில் அருள் நிலைக்கு ஏற்றி உய்விக்கும் விரிந்த ஞான ஒட்பங்களும் இவை உடையன.

மேலும், 'ஆத்திசூடி' முதலிய நான்கு நூல்களும், இளம்பருவத்தோர் முதல் எல்லாப் பருவத்தோராலும், கற்றோர் முதல் கல்லாதார் ஈறாக எல்லா நிலையினராலும் விரும்பி இனிதாகப் படித்துப் பயிலும் வகையில் அமைந்திருக்கின்றன. ஔவையார் இவற்றை அதற்கேற்றபடி அழகிளம் நூல்களாக எளிய செந்தமிழ் நடையில் இயற்றி வழங்கியிருக்கின்றனர். இதனால், ஔவையார் என்னும் பெயரையும், அவர் நூல்களுள் ஏதேனும் ஒன்றையுமாயினும் அறியாதவர்கள் இத் தமிழ் நாட்டில் எவரும் இரார் என்று துணிந்து கூறலாம்.

அத்தகைய நிலைத்த புகழ்படைத்த நல்லிசைப் புலமை மெல்லியலாரான இவ் ஔவையார் பெரும்பாலும் சோழ

நாட்டின்கண் இருந்தவரென்பது ஆராய்ச்சியாற் புலனாகின்றது. இவர், சங்ககாலத்து ஔவையார் அல்லர். ஆயினும், புலமையும், துணிவும் தொண்டியற்கையும், அருள் நிலைமையும் ஒருங்கு வாய்ந்தவராகவே இவருங் காணப்படுகின்றார். ஆதலால், இவர் அறிவுறுத்துங் கருத்து முடிபுகள் எல்லோராலும் விரும்பி ஏற்று, நாளுங் கடைப்பிடித்து ஒழுகுதற்குரியனவாய், நிலையாக விளங்கிவருகின்றன. இவர் காலத்தில் இவர் தெய்வத் தன்மையுடன் மிக்க புகழோடு விளங்கியவராவர். தொல்காப்பிய உரையில் கொன்றை வேந்தனின் கடவுள் வாழ்த்துத் தொடர்களும், "அட்டாலும் பால் சுவையின்" என்னும் மூதுரைச் செய்யுளும் பேராசிரியர் முதலிய உரையாசிரியர்களால் மேற்கோள்களாக எடுத்து ஆளப்பட்டிருப்பதிலிருந்தும் இவர் திருமொழிகளின் பெருமை விளக்கமாகின்றது. இதனாலும், நல்வழியின் இறுதியில் இவர் 'மூவர் தமிழ்' என்று தேவாரத்தை எடுத்துச் சுட்டியிருப்பதனாலும், சுந்தரமூர்த்தி நாயனார் காலமாகிய கூ-வது நூற்றாண்டுக்குப் பின்னும், பேராசிரியர் காலமாகிய கஉ-வது நூற்றாண்டுக்கு முன்னும், அதாவது இற்றைக்கு ஏறக்குறைய அ00-ஆண்டுகட்கு முன் இவ் ஔவையார் விளங்கியவர் என்று அறியலாம்.

தமிழ்மொழியில் நூல்களின்மேல் தனித்தனி ஆராய்ச்சி நூல்கள் மிகுதியாக வெளிவரவேண்டும். கழகப் புலவர் இளவழகனாரவர்களால் இந்நூல் ஒரு புதிய வகையாக எழுதப் பெற்றிருக்கின்றது. 'ஆத்தி சூடி' முதலிய நீதி நூல்கள் மேல் இதுவரையில் இத்தகைய ஆராய்ச்சி நூல் வெளிவந்ததில்லை. தமிழ்மக்கள் அனைவரும், ஆசிரியர்களும், சிறப்பாகக் கலைப்புலமை பயிலும் மாணவர்களும், இதனை ஊன்றிக் கற்று நுண்பொருள்கள் அறிந்து இன்புறுகவெனவிரும்புகின்றோம். தமிழ் விளங்குக!

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| க. | ஆத்தி சூடி | ... க |
| உ. | கொன்றை வேந்தன் | ... கூ |
| ங. | மூதுரை | ... உரு |
| ச. | நல்வழி | ... ருகூ |

# கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே.

—ஆத்திசூடி

கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே.

—கொன்றை வேந்தன்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

—மூதுரை

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

—நல்வழி

# ஔவையார் திருவுள்ளம்

## ௧. ஆத்தி சூடி

குழந்தை மலர் :

தமிழ் நூல்களில் 'ஆத்தி சூடி' தொடக்க நூல். குழந்தைகள் மனப்பாடஞ் செய்துகொள்ளும் பொருட்டுச் சிறு சிறு தொடர்களால் அது செய்யப்பட்டிருக்கின்றது.

சின்ன குழந்தைகள் மனப்பாடஞ் செய்துகொள்வதற்குப், பழுத்து மூத்த ஔவையார் நூல் செய்வதுதான் நல்லது. மேலும், அவர் ஒரு பெண்பாலா யிருப்பது இன்னும் நல்லது. குழந்தைகள உள்ளத்தை அவர் நன்றாய் அறிவார்.

குழந்தையுள்ளம் பெற்றவர்களே, குழந்தைகளுக்கு நூல் செய்வதற்குரியவர்கள். அறிவிலும் உலகியலிலும் மெய்யுணர்விலும் நன்றாய்ப் பழுத்த முதியோர்க்கு அந்த உள்ளம், இயல்பாகவே உண்டாகின்றது. அந்நிலை கைவந்த பின்பே, ஔவையார் இந்நூலை இயற்றியிருக்கின்றார்.

'ஆத்தி சூடி' இயற்றியருளியவர் சங்க காலத்து ஔவையார் அல்லர்; பிற்காலத்தவர்; 'கொன்றை வேந்தன்' 'மூதுரை' 'நல்வழி' என்பனவும் இவர் இயற்றினவே. 'நல்வழி'யின் முகப்பில், "சங்கத்தமிழ் மூன்றுந் தா" என்று இவர் பாடியிருப்பதனால், இவர் சங்க காலத்தவர் அல்லர் என்பதை அறியலாம்.

என்னவோ, ஔவையார் என்னும் பெயருடையோரெல்லாரும் அருமைப்பாடு உடையவராகவே விளங்குகின்றனர். சங்க காலத்து ஔவையாரும் அப்படியே; இவரும் அப்படியே. பெண்பாலாரில் வயது மூத்தவராய்ப் புலமையும் மெய்யுணர்வும் உடையவரா யிருந்தால், அவர் 'ஔவையார்' என்று அழைக்கப்பட்டிருத்தலைக் காண்கின்றோம்.

ஔவையார் என்போர், அவர் எவராயிருந்தாலும், தமிழுக்கும் தமிழ் மக்கட்கும் நல்ல தொண்டு செய்திருக்கின்றனர். அவர், பொருள் கருதித் தமது வாழ்க்கையைச் செலுத்தினவரல்லர். 'அகசிசு' என்னும் மேனாட்டுச் சான்றோர் ஒருகால், நிறைந்த பொருளுதவியுடன், சில விரிவுரைகள் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். அதற்கு அவர், 'பொருள் தேடுவதில் எனது காலத்தை நான் வீணாகச் செலவழிக்க விரும்பவில்லை,' என்று சொல்லி மறுத்துவிட்டாராம். இதனை அவருடன் நெருங்கிப் பழகியிருந்த 'எமர்சன்' என்னும் அறிஞர் அருமையாகப் புலப்படுத்தியிருக்கின்றார். ஔவையார் அத்தகையோரே யாவர். நாட்டில் உணர்வுநலங்கள் வளர்வதற்குப் பாடுபடுவதே அவர் முழு நோக்கம். நினைத்த இடங்களில் உண்டு, நினைத்த இடங்களில் உறங்கி, நினைத்த இடங்களிற் சென்று தமிழையும் உணர்வையும் வளர்த்த பெரியோர் அவராவர்.

அத்தகைய பழுத்த அருளுள்ளம் உடையோர்க்கே ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்பவை போன்ற குழந்தை மலர்களை எழுதியுதவும் அரிய எண்ணம் உண்டாகும்.

இக்காலத்திற் குழந்தைகட்காக நூல் எழுதுவோர்க்குச் சிறிது தொகை கிடைக்கக்கூடும்; அந்தக் காலம் அங்ஙனமன்று; இரக்கக் காரணமாகவே ஔவையார் இந்நூல்களை இயற்றியிருக்கின்றார்.

இந் நற்செயலால் ஔவையாருக்கு ஒரு தனித்த பெருமை தமிழகத்தில் நிலைபெற்றிருக்கின்றது. முன்னோர் நூல்களில், இவரொருவர் எழுதிய இந் நூல்களே, குழந்தை மலர்களாயிருக்கின்றன. குழந்தைகள் விரைவில் நினைவு கொள்ளவேண்டு மென்னுங் கனிவினால் ஆத்திசூடி கொன்றை வேந்தன் என்னும் நூல்கள் அகர வரிசையில் தொடுக்கப்பட்டிருக்கின்றன.

குழந்தைகளின் பருவத்துக்கேற்பப் பயன்படவேண்டுமே என்னும் இரக்க குணம் மேலும் உந்த, ஆத்திசூடியை

மிகச் சிறிய தொடராகவும் கொன்றைவேந்தனை அதனினுஞ் சற்றுப் பெரிய தொடராகவும் இவர் இயற்ற நேர்ந்தது.

குழந்தைகளின் கல்வி வகையில் ஔவைப் பெருமாட்டியார் காட்டியருளிய ஊக்கத்தைத் தமிழ்நாடு என்றும் மறப்பதற்கில்லை; எப்படி மறக்கும்! தமிழ் நாட்டுக் குழந்தைகளின் உள்ளங்களிலெல்லாந்தாம் ஔவைத் தாய் அருமையாய் விளங்குகின்றாரே! தமிழர்களின் உள்ளங்களை இப்படிக் குழந்தைப் பருவத்திலிருந்தே கவர்ந்துகொண்டு, இறுதி வரையிலுஞ் சிறப்பாக நிலவும் அருமைப்பாடு இவர்க்கன்றி வேறு யாருக்கு உண்டு!

அணுக்க காலத்திலேதான் இவர் நூல்களைப் பின்பற்றிப் பிறரும் நூல் செய்யத் தொடங்கினர்.

## சின்ன வேதம் ;

'ஆத்தி சூடி' அமைந்திருக்கும் நிலைமையைப் பார்த்தால், அதனை ஒரு சின்ன 'வேதம்' என்று சொல்லலாம் போலத் தோற்றுகின்றது. ஔவையாருடைய பெரிய உள்ளமே, அச் 'சிறுமுது நூல்' இங்ஙனம் அமைவதற்குக் காரணம்.

இம்மையிற் செவ்வையாய் வாழ்ந்து மறுமையிலும் நன்னிலைமையை அடைவதற்கான வழி வகைகள், ஆத்தி சூடியில் நன்றாய் எளிமையாய் இனிமையாய் விளக்கப்பட்டிருக்கின்றன.

## இம்மை நலம் :

இம்மை நலங்களில். விளையாடுவது குளிப்பதுமுதல் உயர்ந்த அரசியல் நுணுக்கங்கள் காதல் நுட்பங்கள் வரையிற் கருத்துக்கள் திறமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

"சனிநீ ராடு'
'நீர்விளை யாடேல்"

எனவும்,

"புகழ்ந்தாரைப் போற்றிவாழ்'
'மேன்மக்கள் சொற்கேள்"

எனவுமெல்லாம் வருவன மேல் உண்மையை அறிவிக்கக் கூடும். "புகழ்ந்தாரைப் போற்றிவாழ்" என்றார், தன்னிடம் பதிப்புடையோரை விரைந்து தெரிந்து அரசன் தன்னவராக் கிக் கொள்ளுதல் இன்றியமையாதது என்றற்கு. அயலோரா யிருப்பவரை இங்ஙனம் நண்பராக்கிக்கொண்டே போதல் பகைவர் அஞ்சுதற்குரியதோர் ஆண்மைச் செயலாகும். "வழிபடுவோரை வல்அறிதீயே" என்று புறநானூற்றில் (௧0) வரும் அரச முறைமையும் இது.

மறுமை நலம் :

மறுமை நலங்களில், நல்வினை தீவினைகள் முதல் வினையற்ற வீடுபேற்று நிலைமைவரையில் ஔவையார் அருமையாக அறி வுறுத்தி யிருக்கின்றார். பல பெரிய அருள் நூல்களிலு, பாலினுள் வெண்ணெய்போல மறைபொருளா யிருக்கும் கருத்துக்கள் சிலவும், இக் குறுகிய நூலில், மேர்மேல் வெண்ணெயெனத் தெளிவாகத் திரட்டித் தரப்படுகின்றன.

> 'வேண்டி வினைசெயேல்'
> 'வீடுபெற நில்'

என்பவைபோன்ற திருமொழிகள் அத்தகைய வெண்ணெய்த் திரள்களேயாம். 'வேண்டி வினைசெயேல்' என்பதற்குப் 'பயன் விரும்பிச் செயல் புரியாதே' என்பதும், 'வீடுபெற நில்' என்பதற்குப் 'பற்றில்லாமல் இரு' என்பதும் பொருள். இவை எவ்வளவு நுட்பமும் முத்தமுகும் உள்ளவை!

இனி, இவ்விம்மை மறுமை நலங்களைப் பெறும் முறை மைகளும், ஆத்தி சூடியில் எவ்வளவோ நன்றாக அறிவுறுத் தப்படுகின்றன.

உலக நடை :

இம்மை நலங்களை அடைவதற்கும் அதனை ஆளுவதற்கும் தகுந்த உலகியலொழுக்கம் இன்றியமையாதது. ஔவையா ரின் பழுத்த உலகியல் நுகர்வுகள், ஆத்தி சூடியில் அவர் அவ்வொழுக்கம்பற்றிக் கூறும் தொடர்களிற் சிறந்த காட்சி யளிக்கின்றன!

"கிழமைப் படவாழ்'
'கைவினை கரவேல்'
'சான்றோ ரினத்திரு'
'செய்வன திருந்தச்செய்'
'சொற்சோர்வு படேல்'
'தொன்மை மறவேல்'
'நிலையிற் பிரியேல்'
'நேர்பட வொழுகு"

முதலிய எத்தனையோ தொடர்கள், உலகியலொழுக்கங்களின் பிழிசாறே என்னும்படி அழகழகாக விளங்குகின்றன. 'கிழமைப்பட வாழ்' என்பதற்குப் 'பிறர் உன்னிடம் உரிமையாக நடந்துகொள்ளும்படி அவ்வளவு கலந்த மனப்பான்மையுடன் வாழ்' என்பது கருத்து. 'சொற்சோர்வு படேல்' என்பதற்குச், 'சொன்ன சொல்லின்படி பின் நடந்துகொள்வதில் தளர்வு கொள்ளலாகாது' என்பது கருத்து. உலகியல் வெற்றிக்கு இவை எவ்வளவோ தேவை. பிறவும் இங்ஙனமே.

தொழில் முறை:

தொழில் முறை, கலை நுட்பம் முதலியவையெல்லாமும்,

"பருவத்தே பயிர் செய்'
'இலவம்பஞ்சில் துயில்"

என்பவைபோன்ற தொடர்களால் எடுத்துக்காட்டப்படுகின்றன.

உடம்பையும் உணர்வையும் ஓம்பும் வகைகள், இயல்பான எளிய முறைகளால் வகுத்தோதுதலும்,

"மீதூண் விரும்பேல்'
'மிகைபடச் சொல்லேல்"

என வருவனவற்றிற் காண்கின்றோம்.

முறை வைப்பு:

இனி, "எண்ணெழுத் திகழேல்"
'வித்தை விரும்பு'
'இளமையிற் கல்'
'ஓதுவ தொழியேல்"

என்னுந் தொடர்கள்போல்வன, கல்வி என்னும் ஒருபொருளின் தொடர்பாகவே வரினும், அவை கூறியன கூறலாக மாட்டா. எண்ணெழுத்து என்பவை, பொருளும் மொழியும்; 'வித்தை' யாவது கலை; இளமையிற் கற்றற்கு 'இளமையில்' எனவும், இடைவிடாமற் பயிலுதற்கு 'ஓழியேல்' எனவுங் கூறினார். ஒவ்வொரு தொடரால் ஒவ்வொரு கருத்தை விளக்கினபடியாம்.

> "அரவ மாட்டேல்'
> 'பாம்பொடு பழகேல்"

என்பனவும் அத்தகையனவே. முன்னது சிறியோர் விளையாட்டையும், பின்னது பெரியோரானபின் பழகும் பழக்கத்தையுங் குறித்தன.

ஆத்தி சூடியைக் குழந்தைப் பருவத்தில் மனப்பாடஞ் செய்துகொண்டால், பின் வயதேற ஏற மக்கள் அதன் கருத்துக்களை விளக்கிக்கொள்ளக்கூடும் என்று ஔவையார் கருதியிருக்கின்றார். குழந்தைப் பருவத்திலேயே பயன்படுத்திக் கொள்ளும்படி,

> "இளமையிற் கல்'
> 'கண்டொன்று சொல்லேல்"

எனவெல்லாம் அருளிச்செய்தவர், இனிப் பெரியவர்களான பின் ஒழுகுவதற்குரிய,

> "இடம்பட வீடெடேல்'
> 'தையல்சொற் கேளேல்"

என்பவைபோன்ற பல முறைமைகளையும் விளக்கிச் செல்வதனால், ஔவையாரது கருத்து நன்கு விளங்குகின்றது. ஆகவே, மக்கட்கு எந்நிலையிலும் பயன்படவேண்டுமென்று கருதியே ஆத்தி சூடியை அவர் அருளிச்செய்திருக்கின்றார் என்பதில் ஐயமில்லை.

சொல் நுட்பம்:

ஆராய ஆராய, மேன்மேலும் ஆழ்ந்து தோன்றும்படியான சொற்பொருள்களும் இவற்றில் இல்லாமலில்லை.

பெரியாரைத் துணையாகக் கொள்ளவேண்டும் என்னுங் கருத்தில்,

“பெரியாரைத் துணைக்கொள்”

என்றருளிச்செய்த ஔவையார், சிறியாரோடு இணங்காதே என்னும் பொருளில,

“பையலோடு இணங்கேல்”

எனவும் அருளிச்செய்திருக்கின்றார். பெரியோராயிருப்பவர் சிறியோரோடு இணங்காவிட்டால், சிறியோர், பெரியோரது துணையை எப்படி அடைவது என்று சிலர்க்கு ஐயம் நேரக் கூடும். ஔவையார் வரம்புபடவே இயற்றியிருக்கின்றார். ‘துணைக்கொள்’ ‘இணங்கேல்’ என்னுந் திறமான சொற்களில அவ் வரம்பு ஆழங்காட்டி மிளிர்கின்றது.

துணை செய்பவர் எப்போதும் ஆற்றலிற் பெரியோராகவே இருத்தல்கூடும். இடுக்கண் நேரங்களில் அவர் துணையே பெரிது உதவும். அதனைத் தவறாமற் கொள்ள வேண்டுவது மற்றவர் கடமை.

ஔவையார் அருளிச்செய்த மற்றொரு நூலான மூதுரையில், ‘நல்லாரைக் காண்பதுவும் நன்றே’ என்னும் முதற் குறிப்புடைய செய்யுள் ஒன்று வருகின்றது. அச் செய்யுளில் ‘நல்லாரைக் காண்பதுவும் நன்று; அவர் சொல் கேட்பதுவும் நன்று; அவர் குணங்கள் உரைப்பதுவும் நன்று; அவரோடு இணங்கியிருப்பதுவும் நன்று’ என்னுஞ் சொற்பொருள்கள் வருகின்றன. காண்பது கேட்பது உரைப்பது என்னுஞ் செயல்களுக்கு வேறாக, இணங்குவது என்னுஞ் செயல் ஒன்றும் அதன்கண் வருதலைக் காணலாம். இதனால் ஒருவரைக் காண்பதும் கேட்பதும் உரைப்பதும் செய்த அளவிலேயே, அவரோடு இணங்கிவிட்டதாகக் கருதலாகாது என்பது தெரிகின்றது. ஒருவர் கொள்கைப்படி ஒருவர் நடந்துகொள்ளுதலே இணங்கிய செயலாகும். ஒருவருக்குத் துணைசெய்வதற்கு அவரோடு அங்ஙனம் இணங்கவேண்டு மென்பதில்லை; அவரைப் பார்ப்பதும், அவர் சொல்வதைக் கேட்பதும் போல்வன போதும்.

இன்சொற் பொருளின் அழுத்தம் இங்ஙனமெல்லாம் இருத்தலின், ஔவையார், 'பையலைப் பாராதே, கேளாதே' என்னுங் கருத்திலெல்லாம் பேசாமல், 'பையலோடு இணங்காதே' என்னுங் கருத்திற் பொருளாழந் தோன்ற அருளிச் செய்வாராயினர்.

இத்தகைய சொற்பொருளழுத்தங்கள் 'ஆத்தி சூடி'யிலும் அவர் நூல்கள் பிறவற்றிலும பலப்பல இடங்களில் வருகின்றன.

எதற்கும் ஔவையார் கருத்துப்படி, அவர் நூல்களைக் குழந்தைகள் இளமையிலேயே மனப்பாடஞ் செய்துகொள்ளும்படி ஏற்பாடு செய்துகொள்வது நல்லது.

# உ. கொன்றை வேந்தன்

எளிய நடை :

'எளிய சிறு சிறு தொடர்களே குழந்தைகளின் தேவையைக் குறித்துணர்த்தும் ஆற்றல் வாய்ந்தவை' என்று *வால்டர் பேட்டர் என்னும் ஆசிரியரும் கருதுகிறார். ஒளவையாருக்கு இவ்வாற்றல் நன்றாய்க் கைவந்திருக்கின்றது. அவ்வகையில் இப் பெருமாட்டியாருக்கு இணையானவர் தமிழாசிரியரிற் பிறரெவரும் இல்லை என்று துணிந்து சொல்லலாம்.

மேலும், இவர் இயற்றியிருக்கும் அறிவுத்தொடர்கள் எவ்வளவு எளிமையாயிருக்கின்றன! சிறுவர்கள் நயமாக வழங்குவதற்கு ஏற்றபடி இத்துணை எளிமையாக இயற்றியுதவிய ஆசிரியர் பிறர் எவர் உளர்? நல்ல தமிழ்ச்சுவையும், இயல்பான சொற்பொருளொழுக்கமும், உண்மையும், நுண்மையும், திருத்தமும், பொருத்தமும் வாய்ந்து இனிமை கனிந்து இயலுவதோடு, நடை இவ்வளவு எளிமையாகவுந் திகழவேண்டுமானால், அந்த ஆற்றல் ஆ! ஒளவையாரைப் போன்ற கனிந்த பெரிய தாய்மை யுள்ளம் வாய்ந்த அருட் சான்றோர்க்கேயல்லாமல் மற்றவர்க்குக் கிட்டுதல் அரிதம்ம அரிது! பெரிதரிது, அரிது!

வாழ்க்கையில் எளிமையுடையோரே இந் நடை வெற்றியினையும் எய்துதற்குரியர். உள்ளம் எவ்வளவுக்குப் பண்பட்டுப் பிறவுயிர்கண்மேல் இரக்க வடிவாய்த் தள தளவென்று உருகித் திகழ்கின்றதோ, அவ்வளவுக்கு அவ்வுள்ளத்திலிருந்து புறம் வரும் சொல்லும் பண்பு இரக்கம் முதலியன வாய்ந்து எளிமையாயிருக்கும். உள்ளந் தெளிவாயிருந்தால் நடையும் தெளிவாயிருக்கும். உள்ளம் குளிர்ந்தாற் சொல்லுங் குளிரும்.

---

* Walter Pater.

"உள்ளங் குளிர என் கண் குளிர்ந்தனவே"

என்னுந் திருவிசைப்பாத் திருமொழி இக் கருத்தை எவ்வளவு உண்மையாய் எடுத்துக் காட்டுகின்றது!

இங்ஙனம் அகமானது பண்பாட்டுப் புறம் நோக்கும் போதுதான் புறமுயற்சிகளெல்லாம், அவை எவையாயிருப் பினும், அங்ஙனம் நோக்குவார்க்கும் பிறர்க்கும் எளிமையா யிருக்கும்.

இளமையிலேயே கற்கவேண்டும் என்னும் அறிவுமொழி உள்ளத்திருத்தத்தை முதலிற் பெறவேண்டு மென்னும் இப் பெருநோக்கத்தையும் உட்கொண்டிருக்கின்றது. இங்ஙனம் நற்கலைகளை ஓதி உள்ளத் திருத்தம் அடைந்தோர்க்குப், புறத்தே உண்மை உணர்வும் அதற்கேற்ற ஒழுக்கமும் நன் கமைந்து நடைபெறுமாதலின்,

"நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு'
'ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்"

என்னுங் கொன்றைவேந்தன் தொடர்களினும், மேல் உண் மைகள் பெறக்கூடியனவா யிருக்கின்றன.

ஔவையார் சிறந்த புலமையும் திருந்திய உள்ளமும் எளிய வாழ்க்கை நலமும் உடையவர். உலகமக்கள் எஞ் ஞான்றும் நலமா யிருக்கவேண்டு மென்னுங் குழைந்த கனி வும் உடையவர். அதனால் அவர்க்கு இவ்வளவு எளிய இனிய நடையில் எழுதும் இயல்பான வல்லமை சிறப்பாகப் பொருந்துவதாயிற்று.

'உலக நீதி' என்னும் நீதிநூல் எளிய நடையில் அமைந் திருந்தாலும், அதனினும், 'கொன்றை வேந்தன்' முதலிய ஔவையார் நூல்களில் தமிழ்ச்சுவை முதலியன நன்கமைந் திருக்கின்றன. அதிவீரராம பாண்டியர் இயற்றிய 'வெற்றி வேற்கை' என்னும் நூலில் தமிழ்ச்சுவை முதலியன சில நன்றாகவே பொருந்தியிருந்தாலும், அதனினும் இக் கொன் றைவேந்தன் என்னும் நூலே அழகிய எளிமையுடன் திகழ் கின்றது. மேலும், 'உலகநீதி' 'வெற்றிவேற்கை' என்னும்

இரு நூல்களினும் பார்க்கக், கொன்றைவேந்தனில். இயல்பான சொற்பொருளொழுக்கம் முதலியன சிறந்து காணப்படுதல் பெரிதுங் கருத்திருத்துதற்குரியது.

ஒளவையாரது நாவின் நுனியில், சொற்களின் எளிமையழகும் சுவைத்திறம் முதலியனவும் இயல்பாகவே திரண்டு தேங்கி நிற்கின்றன. இது பெரிதும் வியத்தற் குரியது. ஒளவையார், கொன்றைவேந்தனிற், பேச்சுநடையின் இயல்பினை நன்றாகப் பின்பற்றி யிருக்கின்றார். 'இரு' 'செய்' 'அறிவு' 'தேடு' 'இல்லை' 'உதவி' 'அழகு' 'முடியும்' 'வரம்பு' 'கொள்' என்பனவைபோன்ற சொல் முடிபுகளும், 'வெட்டென மற' 'தாழ உரை' 'காற்றுடன் நெருப்பு' 'வேதனை செய்யும்' 'கோபமு மில்லை' 'போராமுடியும்' 'கேடொன்று மில்லை' 'சீராகாது' 'புண்ணியந் தெரியும்' 'காரியமில்லை' 'பின்னுக்கு மழை' என்பனவை போன்ற தொடர்முடிபுகளும் இயல்பான பேச்சுநடையில் அமைந்திருப்பது, வழங்குவதற்கு எவ்வளவு எளிமை தருகின்றது! இம் முடிவுகளை அவை வருந் தொடர்களிலேயே வைத்துக் காணும்போது, இவ்வெளிமை யழகு பளிச்சிட்டுத் தோன்றும்.

அன்றி நோக்கினால், ஆத்தி சூடியினும் பார்க்கக், கொன்றைவேந்தனே மிகவும் எளிமையாயிருப்பது காணலாம். ஆத்தி சூடி மிகச்சிறிய தொடர்களால் ஆனதாகலின், அது சற்றுச் செறிவாயிருக்கின்றது. 'கொன்றை வேந்தன்' அப்படி இல்லை. இயல்பான பேச்சு முறைமையில் அமைந்திருக்கின்றது. செறிவும் இல்லை; தளர்வும் இல்லை.

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'
'கீழோ ராயினும் தாழ உரை'
'பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்'
'ஒத்த விடத்து நித்திரை கொள்"

என்னுந் தொடர்களை உற்றுநோக்கி இவ்வுண்மையை அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம், 'இயல்பாக இருத்தல்' என்பதுதான் உண்மை நிலை: உண்மை நடையுமாகும். ஔவையார் அந்நிலையில் நின்றவர். கொன்றை வேந்தன் அந்நிலையில் அருளிச் செய்யப்பட்டதேயாகும்.

இயல்பாயிருத்தலுக்கு எல்லாக் கவர்ச்சியும் உண்டு. முயற்சியில்லாத எளிமையின் அழகு அவ் வியல்பான நிலைமையின் சீர்மையேயாம். ஆற்றலும் அதற்கே. முடிவில், பெரும் பயன் விளைதலும் அந் நிலைமைக்கேயாகும்.

புதிய ஆற்றல் :

அந் நிலைமையில் நிற்கும் ஆசிரியன்மாரால் மொழிக்கே ஒரு புதிய ஆற்றல் பிறக்கின்றது! பழைய சொற்களெல்லாம் வேறு வேறு கருத்துணர்த்தும் புதிய புதிய செஞ்சொற்களாய் மின்னி மின்னிப் பிறக்கின்றன; பொலிகின்றன! பொருளுணர்த்தும் முறைகள் பற்பலவாகக் கிளைத்துப் பயன் தருகின்றன. மலர்கள் தோன்றும்போது அவற்றிற்கு அழகும் உருவும் மணமும் உடன்தோன்றுவது போலச், சான்றோர் வழியாகச் சொற்கள் தோன்றும்போது அவற்றிற்கு ஒரு தனித்த அழகும் வடிவும் ஆற்றலும் உடன் உண்டாகின்றன. சொற்கள், தம்மைப் பயன்படுத்துஞ் சான்றோர்களின் இசைவுக்குத் தக்கபடி பற்பல அழகும், பற்பல வடிவும், பற்பல ஆற்றலும் பெற்று மேலும் பற்பல சொற்களாய்ப் பல்கி நிறைய நிறைய, அவ்வாற்றால், ஒரு மொழியானது இறவாத வன்மையையும் செழித்த தன்மையையும் நிலையாக அடைகின்றது. சொல்வளமும், பொருளாழமும், வழங்கு முறைமையும் இங்ஙனம் பெருகிவருதலின், நாளடைவில் 'நிகண்டு' முதலியனவும் 'இலக்கணம்' முதலியனவும் பெருகி, மொழியும் உணர்வும் பரவுதற்கும் நிலைப்பதற்கும் இடமுண்டாகின்றது. சிறந்த தன்மையில் வளரும் 'மொழி வளர்ச்சி' யென்பது இதுவன்றோ!

சான்றோர்களால் நாட்டுக்கு உண்டாகும் அளவிறந்த நன்மைகளுள் மொழிக்கு உண்டாகும் இந் நன்மையும்

சிறந்த தொன்றும், மொழிக்குத் திருந்திய வளர்ச்சியை யுண்டாக்குவோர் சான்றோரேயாவர். இவ் வகையில் ஒளவைப் பிராட்டியாருந் தமிழுக்குப் பேருதவி புரிந்திருக்கின்றார். தமிழ் மொழிக்கே ஒரு புதிய ஆற்றலை உண்டாக்கியிருக்கின்றாரென்று திட்டமாகச் சொல்லலாம்.

சங்க காலச் சான்றோர்களால் தமிழ் நங்கை நல்ல அரண்மனை வாழ்க்கையில் அரசர்க்கரசியாய்ப் பெருமிதமாய் வாழ்ந்து திகழ்ந்தனள். அவளை அதே அரச நிலைமையில் ஆனால் எளிய வாழ்க்கை முறைமையில்—எல்லாரோடுங் கலந்து அளவளாவுதலான மனப்பான்மையில்—தாராளமாய் வாழக் கற்றுக் கொடுத்து, அந்நிலையில் நன்கு பழக்கியும் வைத்திருக்கின்றார் ஒளவையார். சங்ககாலங்களிற் கன்னிமை எழிலுடன் இளமை வீறு தோன்ற நிலவிய தமிழ் நங்கை, இப்போது ஒளவைப் பிராட்டியாரால் அவ்விரண்டின் நிறைவோடு தாய்மைக் கனிவுந் திகழுமாறு கண்ணியமாய் விளங்குகின்றனள்! பெண்பால் என்னும் இனத்திலெவ்வளவு இசைவு ஒளவையார்க்கு! 'ஒளவை' என்னுஞ் சொல்லுக்குத் 'தாய்' என்றும் பொருள் உண்டு. இள நங்கைக்குத் தாய்மையுள்ளம் வருவிக்கும் வகைமையை ஒளவையார், நன்கறிவார்!

இங்ஙனம் ஒரு புதிய முறையில் தமிழ் நங்கையை இயங்கச் செய்தமையால், ஒரு நிலையான உயிர்ப்பாற்றலை நாட்டில் ஒளவையார் உண்டாக்கியவராகின்றார்.

'கொன்றை வேந்த'னில் மேலும் அவர் செய்திருக்கும் இயக்க முறைகளும் பற்பலவாம். 'சிறைத் தேடின்' 'துடியாப் பெண்டிர்' 'நாடெங்கும் வாழ' 'நிற்கக் கற்றல்' 'நீரகம் பொருந்திய' 'நோய்ய உரையேல்' 'பண்ணிய பயிர்' 'பேற்றோர்க் கில்லை' 'பின்னுக்கு மழை' 'பொருந்திய ஒழுக்கம்' என்பவற்றிற் 'சீர்' முதலிய சொற்கள் ஒளவையாரது பெரிய உள்ளத்தினின்றுந் தோய்ந்தெழுந்து, மின்னும் வகையில் ஒரு புதிய அழகும் ஒளியும் பொருளும் ஏற்றுக் கதிர் விட்டு விளங்குதல் கண்டுகொள்ளப்படும். 'சீர்' என்பது

பொதுவாக இங்கே 'நலம்' என்னும் பொருளில் வருகின்றது. 'வாழ' என்பது 'வளமாயிருக்க' என்னுங் கருத்துடையது. 'நீரகம்' என்பது 'நீரில்லை' என்று உணர்த்தும் ஒரு சொல்லமைப்பாகும். 'பெற்றோர்' என்பது பொதுவாகத் தாய் தந்தையரையே உணர்த்துமேனும், இங்கே மெய்யுணர்வு பெற்றோரைக் குறியாநின்றது. பிறவும் இங்ஙனமே தனியான ஒரு புதிய ஒளியுடன் மின்னித் திகழ்தல் காணலாம். இவையெல்லாம் ஔவைப் பிராட்டியாரது உள்ளச் சீரின் நறுஞ்சாயலே யல்லாமல் வேறில்லை.

தமிழ்மொழி 'இயற்கைமொழி' என்பதற்கு ஈதும் ஒரு காரணமாம். சான்றோர்களின் இயல்பான உள்ளங்களில் தோய்ந்து எழாத மொழிகள் எங்ஙனம் 'இயற்கை மொழி' என்னும் மாட்சிமைக்கு உரியவை யாகும்?

உள்ளச் சாயல் :

இனி, ஔவைப் பெருமாட்டியின் உள்ளச் சாயலை இக் கொன்றைவேந்தன் வழியாக நன்றாய்க் காணலாம். உயிரும் உடலும்போல அச் சாயல் நிழலாடுகின்றது. அங்ஙனம் நிழலாடும் நூல்களே உண்மையில் 'நூல்' எனத் தக்கவை; அத்தகைய நூல்களிலேதான் அச் சாயலையும் நன்றாய்த் தெரிந்துகொள்ள முடியும்.

கொன்றைவேந்தன் தொடர் ஒவ்வொன்றும் ஔவையின் ஒவ்வோர் எண்ணச் சுடரேயாம். ஔவையின் ஒளியுருவை அவை நன்கு விளக்குகின்றன.

ஔவையார் 'ஆத்தி சூடி'யை இயற்றிய பின்பே, 'கொன்றை வேந்தனை' இயற்றியிருக்கின்றார். ஏனென்றால், ஆத்தி சூடியிற் பொதுவாகச் சொன்ன சில கருத்துக்கட்குக் கொன்றைவேந்தனிற் காரண காரியங்களுடன் விளக்கங்கள் வருகின்றன.

"அறனை மறவேல்"

என்று ஓர் அறிவு மொழி பொதுவாக ஆத்தி சூடியிற்

சொல்லியிருக்கின்றது. அதைப் படிக்கும்போது, 'அறம்' என்பது எது என்று ஓர் ஐயம் எழும். அதற்கு விடை,

"பிறன்மனை புகாமை அறமெனத் தகும்"

என்று கொன்றைவேந்தனில் வருகின்றது. ஔவையாருக்குச் சிறப்பாகத் தோன்றிய அறக் கருத்து இது. இதனால் ஔவையார் உள்ளம் எத்தகையதென்பது நமக்குத் தெரிகின்றது.

திருவள்ளுவர் "ஒன்றாக நல்லது கொல்லாமை" என்றால், ஔவையார் 'ஒன்றாக நல்லது பிறன்மனை புகாமை' என்னுங் கருத்திற் பேசுகின்றார். இதனால், இருவருள்ளச்சாயலும் வேறு வேறு என்பது தெரிந்துகொள்ளலாம். ஆடவர் பிறன் மனை புகுதலால், பெண்கட்கு உண்டாகும் இடர்கள் இன்னவென்பதைப் பெண்பாலாரான ஔவையார் நன்கறிவார். பொதுவாகத் திருவள்ளுவரும், ஔவையாரும் ஒத்த கருத்தினரேயாயினும், மிக நுண்ணிய நிலைகளில் அவரவர் உயிரியற்கைகள் வேறுபட்டே நிற்குமாகலின் அவைபோல்வன எவையென்பது அவரவர் நூல்களால் கூர்ந்தறியக்கூடியதேயாம். "பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறன்" என்று திருவள்ளுவரும் கூறினாரேனும், அவரதற்கு முதன்மை தந்திலர்.

இங்ஙனமே, 'இல்லறம்' 'துறவறம்' என்னும் இருவகை அறங்களைப்பற்றிச் சொல்லும்போதும் திருவள்ளுவர் ஔவையாரைப் போல இல்லறத்துக்குத் துணிவாக ஒரு முதன்மை கொடுத்தாரல்லர். "இல்வாழ்க்கை வாழ்பவன் ...முயல்வாருள் எல்லாந் தலை" "இல்வாழ்க்கை...நோற்பாரின் நோன்மையுடைத்து" "அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை" என்று திருவள்ளுவர் இல்வாழ்க்கையைச் சிறப்பித்தாராயினும், துறவறத்திலும் முதன்மை தோன்றுதவாறு "முயல்வாருள்" "நோன்மை" "அஃதும் (துறவறம்) பிறன்பழிப்பதில்லாயின் நன்று" என்று அங்கங்கும் சில சொற்களை அவர் இட்டுச் சென்றிருக்கின்றார். அவர் கருத்

தறிந்து உரையாசிரியர் பரிமேலழகரும் அவ்வவற்றிற்கேற்ற வாறு உரைவிளக்கிச் செல்லுதல் பெரிதும் வியத்தற்குரிய தாகவேயிருக்கின்றது. ஆனால் ஔவையாரோ, ஒரே தீர் மானமாக,

"இல்லற மல்லது நல்லற மன்று"

என்று இயற்றி, 'இல்லறமே நல்லறம்; அதுவல்லாத துறவறம் நல்லறமாகாது' எனத் துணிந்து கூறினார்.

ஏதொன்றிலுந் துணிவு தேற்றும் இயல்பு, ஆடவரினும் பெண்பாலார்க்கு இயல்பாகவே யிருந்திருக்கின்றது. மேலும், மகளிரைத் தனியே விடுத்து ஆடவர் புறஞ்செல்லு வதான துறவு நிலைக்கு ஔவையார் சிறிதேனும் ஒருப் படுவரோ! பெண்டிரின் இடர்ப்பாடான நிலைமைகள் அவருக்கு நன்றாகத் தெரியுமன்றோ!

திருவள்ளுவருக்கும் ஔவையாருக்கும் இவ் வேறுபாடு இங்ஙனம் மிக நுண்ணிய நிலையிலேனும் இருத்தலாலன்றோ, துறவற நோன்புகளிற் சிறந்ததான 'கொல்லாமை'யையே சிறந்த அறமாகத் திருவள்ளுவர் கொள்ளவும், இல்வாழ்க்கை யறங்களிற் சிறந்ததான 'பிறனில் விழையாமை'யையே சிறந்த அறமாக ஔவையார் கொள்ளவும் இடமுண்டா யிற்று! இங்ஙனம் ஔவையாரின் உள்ளச் சாயல்கள் பலப் பலவாகக் கொன்றை வேந்தனில் விளங்குகின்றன.

இனி, ஆத்தி சூடியில்,

ஆறுவது சினம்
இயல்வது கரவேல்
ஊக்கமது கைவிடேல்
ஔவியம் பேசேல்
சக்கர நெறிநில்
சொற்சோர்வு படேல்
இணக்கமறிந் திணங்கு
தெய்வ மிகழேல்
பூமி திருத்தியுண்
ஊருடன் கூடிவாழ்

என்று வருந் தொடர்களுக்குக் கொன்றை வேந்தனில் ஏற்ற விளக்கங்கள் முறையே,

தீராக் கோபம் போரா முடியும்
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை
நிற்கக் கற்றல் சொல்திறம் பாமை
நல்லிணக்க மல்லது அல்லல் படுத்தும்
தெய்வஞ் சீறின் கைதவம் ஆளும்
மேழிச் செல்வம் கோழை படாது
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

என்று வருதலும் நினைவுகூர்தல் வேண்டும். ஆத்தி சூடி இருசீர் இயைந்த அடிகள்; அவற்றோடு பின்னும் இரண்டு சீர்கள் கூட்டிக் கொன்றை வேந்தன் தொடர்களை ஔவையார் இயற்ற நினைந்தபோது, அவ்விரண்டு சீர்களையும் வீணுகக் கூட்டிவிடாமல், ஒருவகையில் இங்ஙனங் காரண காரிய விளக்கங்கட்காகப் பயன்படுத்திக் கொண்டமை பெரியதொரு விரகேயாம்.

## பொருள் இயைபு:

பொருள் முடிபுகளில் மாறுபாடில்லாமல் சொற்களை எவ்வளவு பொருத்தமாகவும் விழிப்பாகவும் இவர் பயன் படுத்துகின்ருரென்பதற்கு, மற்றும் ஓர் அரிய திறத்தை இங்கெடுத்துக் காட்டலாம். ஆசிரியர் திருவள்ளுவரது அறத்துப்பாலில் துறவறவியலில் 'விரதப் பகுதி' என்று ஒரு பிரிவு காணப்படுகின்றது. அதன்கண், எட்டுவகை 'விரதங்' கள் கூறப்படுகின்றன. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக ஒவ்வோரதிகாரம் உண்டு. 'விரதம்' என்பதற்கு 'நோன்பு' என்பது பொருள். திருவள்ளுவர், தொடக்க நோன்பாகப் 'புலால் மறுத்தல்' என்பதை அறிவுறுத்தியருளினுர். முடிந்த நோன்பாகக் 'கொல்லாமை' என்பதைக் கூறிக்

கடைசியில் நிறுத்தினார். இடையில் தவம், கூடாவொழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை என்னும் ஆறு வகையான நோன்புகளை இயைத்து விளக்கியிருக்கின்றார். இவற்றுள், புலான் மறுத்தல் அதிகாரமும் கொல்லாமை அதிகாரமும் ஒன்றற்கொன்று காரணகாரியமாயிருத்தலின், அவை யிரண்டும் ஒன்றன் பக்கத்தே ஒன்று அமைதற்குரியன. அப்படியிருந்தும் திருவள்ளுவர், அவை யிரண்டையும் வெவ்வேறாகப் பிரித்து முதலிலுங் கடைசியிலுமாக நிறுத்தி அவற்றிற்கிடையில் வேறு நோன்புகள் சிலவற்றை அமைத்தடக்கி அவ் 'விரதப்' பகுதியை முடித்திருக்கின்றார். இதனால், இடையே நிறுத்தப்பட்ட தவம் முதலான ஆறு வகை 'விரதங்'களையுந் தம்முள் அடக்கிக் கொண்டு, 'விரதம்' என்னும் பெயருக்கு முதன்மை வாய்ந்தனவாய் விளங்கிநிற்பவை, 'புலான் மறுத்தல்' 'கொல்லாமை' என்னும் இரண்டுமேயாம் என்பது தெற்றெனவிளங்காநிற்கும். திருவள்ளுவர் இங்ஙனம் விரித்துக் கூறிய 'விரதப்' பகுதி யுண்மைகளை ஔவையார்,

"நோன்பென் பதுவே கொன்று தின்னாமை"

என்று நான்கே சொற்கள் கொண்ட ஒரே அடியில் மிகப் பொருத்தமாக விளக்கியருளிய அருள் வல்லமையை என்னென்பது! இதன்கண் புலால் மறுத்தலும் வருகின்றது; கொல்லாமையும் வருகின்றது.

## நூற் கருத்து :

கொன்றைவேந்தனில் வரும் ஔவையார் திறங்கள் பலப்பலவாய் மிகுவல்லமையுள்ளனவாயிருக்கின்றன. எல்லாம் எடுத்துக்காட்டப் புகுந்தால் இது மிகவும் விரியும். ஆயினும், பின்வருஞ் சில குறிப்புக்களேனுங் கொடுத்து இதனை முடிப்பது நல்லதென்று தோன்றுகின்றது.

ஔவையார் கொள்கைகள் இன்னவை என்பதும், அவர் விரும்பிய சீர்திருத்தங்கள் இன்னவை யென்பதுமெல்லாம் இக் கொன்றை வேந்தனிலும் பெறக்கூடியனவா யிருக்கின்றன.

ஔவையார் உருவ வணக்கத்தைச் சிறப்பிப்பவர். திருப்பதிதோறுஞ் சென்று வழிபடுதலிலுங் கருத்துடையவர். இன்றேல்,

" ஆலயம் தொழுவது சாலவும் நன்று '
' வையந் தோறுந் தெய்வந் தொழு "

என்று அருளிச் செய்திரார்: முதலடியில் வருகின்ற 'சாலவும்' என்னுஞ் சொல் மிகவும் பொருட்பேறுடையது. ஆலயந் தொழுதலால் உயிர்கள் எங்ஙனமெல்லாந் தெய்வத்தன்மையை அடையக்கூடும் என்னும் முறைமைகளை அது குறிக்கொண்டிருக்கின்றது. தொடரின் மூதற் கருத்தையும் அது நன்ருய் வற்புறுத்துகின்றது.

ஔவையார் உள்ளொளியில் நின்று எழுதுவோர். அகக்கண் அருள் இருப்பவர்க்கு அவர் எழுத்து நன்கு விளங்கக் கூடும். இப் பொருண்மொழி நிழல்களை அம் முறைமையில் ஆழ்ந்து நோக்கி இன்பங் காண்பதே உயர்ந்த இன்பம். *'கச்தேவ் பிளாபார்டு' என்னும் இலக்கியச் சுவையாளர், இங்ஙனமே இச் சொற்பொருட் பேறுகளை நன்குணர்ந்து மகிழ்பவர். ஒருவர் வாய்மொழியை ஆர நுகர்ந்து இன்புற வேண்டுமாஞல், இங்ஙனம் பொருள்கள் தேங்கி நிற்குஞ் சொல்லூற்றுகளைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது அவர் கருத்து. அப்போதுதானே அப் பொருள் நீர்மைகளிற் குளிர நீராடி இன்புறலாம்!

ஔவையார் சிறந்த பெண்மைநலம் உடையவர்; அதனாலேதான்,

" வீரன் கேண்மை கூரம் பாகும் "

என்று வீரத்தன்மையை இவ்வளவு சுவைத்துக் கூற நேர்ந்தது. ஆயினும், அப் பெண்மை என்னும் மென்மையிலேயே உள் உரமும் உடையவர்.

" உரவோ ரென்கை இரவா திருத்தல் "

என்பது அவர் வீரவுரையன்றோ!

* Gustave Flaubert.

ஔவையார் எளிய வாழ்க்கை நிலையை உடையவராயி னும், தன் மதிப்பு மிகுதியுமுடையவர்.

" தோழ னோடும் ஏழைமை பேசேல் "

என்று எத்துணைக் கண்ணியமாய் ஒரு தொடர் அவர் திரு வுள்ளத்தினின்றும் எழுகின்றது!

இங்ஙனமே, உரிமைவாழ்விலும் அவர் கருத்துள்ளவரா யிருக்கின்றார்.

" தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது "

என்பதனால் அது தெளியப்படுகின்றது.

இனி,

" நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை "

என்று இவர் ஒரு சிறந்த அறிவுத் தொடரையும் அருளிச் செய்திருக்கிறார். இது பொதுவுடைமைக் கருத்துப் போன்றது. பரந்த நோக்கமுடையது. எல்லார்க்கும வாழ்வு உண்டாக்க ஆணையிடுகின்றது.

இந் நோக்கத்துக்கு, நாட்டின் மக்கள் தொகை எவ்வள வாயினும் ஊனமில்லை. கருத் தடைக்காக மலடு செய்து கொள்ளுங் கருத்துக்களில் ஔவையாருக்கு உடன்பாடில்லை.

" சந்ததிக் கழகு வந்திசெய் யாமை "

என்று அவர் கருதுகின்றார்.

மக்கள் தொகை எவ்வளவாயினும் அவரவரும் உழைத்தே உண்பது என்று வைத்துக்கொண்டால், தொகைப் பெருக் கத்தால் இடருண்டாகாது.

" போனக மென்பது தானுழந் துண்டல் "

என்பதனால், உழைப்பை அவர் நன்கு வற்புறுத்துகின்றார்.

உழைப்புகளிற் சில, பொது உழைப்புகளாய் நிகழ்ந்து அரசறிய விளங்கவேண்டுமென்பதும் அவர் எண்ணம்.

" கொற்றவ னறிதல் உற்றிடத் துதவி "

என்பது அவர் திருமொழி. 'நல்வழி' யென்னும் மற்றொரு

நூலிலும், 'அரசறிய வீற்றிருக்கும் வாழ்வை' இவர் எடுத்தோதுவர்.

மறுவுலக வாழ்வுக்காக இவ்வுலகவாழ்வை வருத்திக் கொள்ள வேண்டுமென்பது ஔவையாரின் கருத்தன்று; இழந்துவிட வேண்டுமென்பதுமன்று; வாழுமுறையில் நன்ருய் வாழவேண்டுமென்பதுதான் அவர் கருத்து.

"அஃகமும் காசும் சிக்கெனத் தேடு'
'திரைகட லோடியும் திரவியம் தேடு'
'நீரகம் பொருந்திய ஊரகத் திரு'
'பாலோ டாயினும் கால மறிந்துண்'
'மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு"

என்னுந் தொடர்கள் அக் கருத்தை நினைவுகூர்விக்கும். 'பொருள் தேடவேண்டும்; நீர் வசதியுள்ள ஊராகப் பார்த்துக் குடியிருந்துகொள்ள வேண்டும்; பாற்சோறும் காலத்தில் உண்ணவேண்டும்; மெத்தையிற் படுத்துக்கொள்ள வேண்டும்' எனவெல்லாம் ஔவையார் அருளிச்செய்வதைப் பார்த்தால், அவரையே இவ் வுலக இயக்கங்களுக்குத் தலைவராகத் தெரிந்தெடுத்துக் கொள்ளலாமோ எனவுந் தோன்றும்.

ஆனால், அவர் இவ் வுலகவாழ்வை ஒரு சுமையாக ஆக்கிக் கொள்ளவும் இடந் தரவில்லை யென்பதைக் கருத்திருத்த வேண்டும். மக்கள் இனிதாகவும் எளிதாகவும் நல்வாழ்வில் வாழவேண்டுமென்றே அவர் விரும்புகின்ருர். அதற்கு நல்ல உள்ளப் பண்புகள் வேண்டும்.

"செய்தவம் மறந்தால், கைதவம் ஆளும்"

என்பர். 'செய் தவம்' என்பது இங்கே நற்பண்புகள் என்று ஓர் அளவுக்குப் பொதுவாக வைத்துக்கொள்ளலாம். நல்ல உள்ளப் பண்புகள் தாமே உண்டாகமாட்டா. அதற்கு, அவ்வியற்கையையுடைய திருவுருவத்தோடு உள்ளத்தை அடிக்கடி இயைத்துக்கொள்ளவேண்டும். செம்மையானவரோடு உள்ளம் படரும்போதுதான் உள்ளமும் செம்மை

யடையும். 'செம்மை' என்றாலும் 'சிவம்' என்றாலும் ஒன்றுதான்.

"சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு"

என்று பல சிறந்த பொருள் நுட்பங்கள் பொதுள ஔவையார் அருளிச்செய்ததும் இதன்பொருட்டாகும்.

அப்போது, உண்மையான அறிவுநிலை கைக்கூடும்; அந்நிலையிற் செயலடக்கம், சொல்லடக்கம், மன அடக்கம், என்னும் மோன நிலை மேலிட்டு, அச்செயலும் சொல்லும் நினைவுமெல்லாம் நடைபெறவேண்டிய அளவுக்குத், தக்க காலங்களில் தக்க இடங்களில் தக்க முறைகளில் நடைபெறும். இம் மோன நிலைமையே ஞான எல்லையை அடைந்ததற்கு அடையாளம்.

"மோன மென்பது ஞான வரம்பு"

என்று ஔவையார் எத்தனையோ ஆழமாக அருளிச் செய்திருக்கின்றார்.

இந் நிலை கைவரும்போதுதான் இவ்வுலகவாழ்வு ஒரு சுமையாகத் தோன்றாமல், இனிதாகவும் எளிதாகவும் நடைபெற்று உண்மை இன்பம் தருவதாயிருக்கும். கொன்றை வேந்தனில் வரும் நுட்பதிட்பங்கள் இங்ஙனமெல்லாம் எவ்வளவோ அருமையாயிருக்கின்றன.

"ஐயம் புகினும் செய்வன செய்'
'கிட்டா தாயின் வெட்டென மற'
'கெடுவது செய்யின் விடுவது கருமம்'
'கேட்டில் உறுதி கூட்டும் உடைமை'
'தேடா தழிக்கின் பாடா முடியும்'
'நுண்ணிய கருமமும் எண்ணித் துணி'
'பையச் சென்றால் வையந் தாங்கும்'
'மொழிவது மறுக்கின் அழிவது கருமம்'

என்பவை போல்வனவெல்லாம், வாழ்வைத் திறமையாகவும் இன்பமாகவும் நடத்திச் செல்வதற்கான நன்முறைமைகளைத் திருத்தமாகவும் ஆணித்தரமாகவும் வெளியிடுகின்

றனவாயிருக்கின்றன. ஒவ்வொன்றும் "மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்த" மேயாம். இவற்றைக் கடைப்பிடித் தொழுகினால் வாழ்க்கை திறமானதாயிருக்கும்; கவலையிராது.

கொன்றை வேந்தன் ஒரு சிறிய நூலாயிருந்தாலும் வாழ்வின் பல்வகை நுணுக்கங்களும் அதன்கண் எடுத்து ஆராயப்பட்டிருக்கின்றன. திட்டமாகவும் உறுதியாகவும் ஐயுறவின்றித் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. எல்லாம் பொருந்திய சிறந்த வரையறுத்த முடிபுகள்; முடிந்த நிலையில் முடிக்கப்பட்ட முடிபுகள்.

ஔவை துணிவு :

திருவள்ளுவர் நூலுக்கும ஔவையார் நூலுக்கும் ஒரு முதன்மையான வேறுபாடு உண்டு. கூர்ந்து நோக்குவார்க்குத் திருவள்ளுவர் கருத்துக்கள் இன்னவை யென்பது திட்டமாகவே வெளிப்படுமாயினும், சில இடங்களில், பொதுமைக் குரிய சொற்களைப் பெய்து அக் கருத்துக்களை அவர் எளிதிற் புலப்படவொட்டாதபடி ஆழத்தில் இருத்திவிடுவர்; எல்லார்க்கும் பொதுவாக உரைக்கும் பொறுப்புடையவராதலின் அவர் திருக்குறள் மொழிகள் அங்ஙனம் அமைந்திருக்கின்றன. ஔவையார் அப் பொறுப்பினை மேற்கொள்ளாதவர். தமதுள்ளத்தில் முடிக்கப்பட்ட கருத்துக்களை அவற்றிற்கேற்ற திட்டமான சொற்கள் கொண்டு திறப்பாக வெளியிடுதலையே அவர் விரும்பினார். அவர் யார் பொருட்டும் மயங்கவில்லை. அதனால் அவர் வாய்மொழிகள் வெட்டு ஒன்று துண்டு இரண்டாயிருக்கின்றன. அன்றேல்,

"இல்லற மல்லது நல்லறம் அன்று"

என்று திருவள்ளுவரினும் துணிவாக இல்லறமே சிறந்ததென்று திட்டமாக வெளியிடுவரோ?

"சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை"

என்று திருவள்ளுவர் சிறைக்காப்புக்கும் பைய இடங் கொடுத்துச் சென்றாராக, ஔவையார்

"காவல் தானே பாவையர்க் கழகு"

என்று அதனைத் திறப்பாகவும் உறுதியாகவும் வலியுறுத்திச் சொல்ல முன்வருவரோ? தம் கருத்துக்களை இவர், தாராள மாக வெளியிடுகின்றவரா யிருக்கின்றார்.

"உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு'
'கற்பெனப் படுவது சொல்திறம் பாமை'
'காவல் தானே பாவையர்க்கு அழகு"

என்று பெண்கள் வாழ்க்கை முறையைப் பற்றி மிகவுந் திட்டமான கருத்துக்களை இவ்வளவு துணிவாக ஆடவர் வெளியிடுதல் சிறக்குமோ? 'உண்டி' என்பதற்குப் பொது வாக 'நுகர்ச்சி' என்பது பொருள்.

ஔவையார் மிகவுங் கண்டிப்பானவர்; தெளிவும், யாரையும் எதிர்பாராத எளிய வாழ்க்கை நிலையுமே அதற் குக் காரணம். ஆ, அவர் போன்றார், உலகுக்கு எத்துணை இன்றியமையாதவர்!

இனி,

"வளவ ளாயினும் அளவறிந்து அழித்து உண்"

எனவும் ஒரு தொடர் கொன்றை வேந்தனில் வருகின்றது. இதிலிருந்து, ஔவையார் சோழநாட்டிலேயே மிகுதியாய் இருந்தவர் என்பதும், இவர் காலத்திற் சேர பாண்டிய அரச ரினுஞ் சோழ மன்னனே வளம் மிகுந்து சிறந்திருந்தான் என்பதும் உன்னியறிதல் கூடும்.

# ௯. மூதுரை

ஔவையார் சிந்திய அருந்தமிழ்த் தேன்களுள் மூதுரை என்பதும் ஒன்று. 'மூதுரை' என்பதற்கு 'அறிவுரை' என்று பொருள் கொள்ளலாம். தமிழில் உள்ள முழுமுதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தின் உரையில், இந் நூல் 'மூதுரை' என்னும் பெயரினாலேயே வழங்கும். பிற்காலத்தில் 'வாக்குண்டாம்' என்னும் பெயராலும் இது வழங்குகின்றது. "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது" என்று இந் நூலின் முதலில் கடவுள் வாழ்த்துச் செய்யுள் தொடங்குவதனால், முதலில் வரும் 'வாக்குண்டாம்' என்னும் சொல்லே நூலின் பெயராக வழங்க நேர்ந்தது. இதுபோலக் கொள்ளப்படுவதை 'முதற் குறிப்பாற் பெற்ற பெயர்' என்று இலக்கண ஆசிரியர்கள் சொல்லுவார்கள். பாட்டுக்களை மனப்பாடம் பண்ணும் பழக்கம் இருந்ததனால், நினைவுக்காக இங்ஙனம் முதற் குறிப்பினால் பெயர் கொள்வது வழக்கமாயிற்று.

கடவுள் வாழ்த்து :

இந் நூலின் கடவுள் வாழ்த்துச் செய்யுளில் சில நுட்பங்கள் மின்னிக்கொண்டிருக்கின்றன. அவ்வளவும் ஔவைப் பெருமாட்டியினது பேருள்ளத்தின் அடையாளமேயாம். 'இறைவன் திருவடியைத் தப்பாமல் சார்கின்றவர்களுக்கு, வாக்கு உண்டாகும் ; நல்ல மனம் உண்டாகும் ; திருமகள் நோக்கு உண்டாகும் ; உடம்பும் வாட்டமுறாது' என்று ஔவையார் அருளிச்செய்கின்றார். மக்கள் பெற வேண்டிய நலங்கள் இவையென்பது இதனால் நன்கு தெரிகின்றது.

'வாக்கு' என்பது பொதுவாகக் கல்வியைக் குறிக்கும்; 'நல்ல மனம்' என்பது நற்குண நற்செய்கைகளை உணர்த்தும் ; 'மாமலராள் நோக்கு' என்பது செல்வாக்கை அறி

விக்கும். 'மேனி நுடங்காது' என்பது உடம்பின் நலத்தை விளக்கும். கல்வியும் நற்குணமும் செல்வாக்கும் உடம்பு நலமும் ஒருவன் உடையவனானால், இன்னும் அவன் அடைய வேண்டியது என்ன இருக்கின்றது!

கல்வியும் குணமும் வளமும் இருந்தால் இருக்கும் வரையில் உடம்பும் வாடாமல் நலமாயிருக்கக்கூடும். இதனால், உயிரும் நலமாயிருக்கும். கல்வி, கலைமகள் நோக்கு; மனநலம் மலைமகள் நோக்கு; செல்வம் அலைமகள் நோக்கு. இறைவனைச் சார்ந்திருப்பவர்களுக்கு அவன் இப்படி மூவகை நோக்குகளாய் விரிந்து அருள்கின்றனன்.

'கல்வி நலம் உள்ளவர்களுக்கும் கடவுள் வழிபாடு உள்ளவர்களுக்கும் பெரும்பாலும் செல்வ நலம் உண்டாவதில்லை; உடம்பு நலமும் உண்டாவதில்லை' என்ற ஒரு கருத்து, எப்படியோ தவறுதலாய் உலகத்தில் உலவுகின்றது. ஔவையார் இந்த எண்ணம் உடையவராகத் தெரியவில்லை. அதற்கு மாறாகக், 'கடவுள் வழிபாடு உள்ளவர்களுக்குக் கல்வியும் உண்டாகும்; கல்வி நலம் வாய்ந்த அவர்களுக்கே செல்வ நலமும் உண்டாகும்; உடம்பு நலமும் உண்டாகும்' என்று தமது கருத்தை இச் செய்யுள் வாயிலாக விளக்கமாகவே புலப்படுத்துகின்றார். உடம்பில் ஒரு மேனியும் அவர்களுக்கு ஒளிவிடும் என்பது, 'மேனி நுடங்காது' என்று அவர் கூறுவதனால் தெளியப்படும். மின்னுவது மேனி; மெருகிட்டதுபோலப் பளப்பளப்பான ஒளியுடன மின்னிக்கொண்டிருக்கும் உடம்புகளுக்கே 'மேனி' என்னும் பெயர் பொருந்தும். அப் பளபளப்புத்தானும் கலக்கமடைந்து மங்காது என்பதற்கு 'நுடங்காது' எனப்பட்டது. நுடங்குதலாவது, சாயல் சுருங்குதல்.

யாராவது கல்வி நலமும் கடவுள் வழிபாடும் உடையவர்கள், மேனி நலமும் செல்வநலமும் இல்லாதவர்களாயிருந்தால், அவர்களுடைய கல்வி முறையிலும் கடவுள் வழிபாட்டு முறையிலும் ஏதோ தவறு இருக்கவேண்டும். கற்றபடி ஒழுகாமை, மூன் தவமில்லாமை முதலியனவும் காரணங்

களாம். ஆகவே, நல்ல மனம் இருக்கவேண்டுவதும் இன்றியமையாதது என்று கருதியே 'நல்ல மனமுண்டாம்' எனவும் இப் பாட்டில் அருளிச் செய்யப்பட்டிருக்கின்றது.

மக்கள் இம்மை மறுமைக்குரிய எல்லா நலங்களோடும் வாழ்வாங்கு வாழவேண்டுமென்பதே ஒளவைப் பிராட்டியாரின் திருவுள்ளமாதலால், தமது கருத்தை அவர் இங்ஙனம் கடவுள் வாழ்த்துச் செய்யுளிலேயே விளங்க விளக்கி வைத்துக் கொண்டார். இவ் வாழ்த்துச் செய்யுள் நீங்கலாக மூதுரையில் முப்பது செய்யுள் உள்ளன. மக்கள், கல்வியும் குணமும் செல்வமும் என்னும் இம் மூன்றும் உடையவராய் இனிது வாழ்வதற்கான முறைமைகளே அப் பாட்டுக்கள் முழுமையும் விளக்கப்படுகின்றன.

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்று தாம் வகுத்துக்கொண்ட இக் கருத்துக்கள் மூன்றையும் ஒருங்கு தொகுத்துத் தொகுத்து, ஒளவையார், நூலுள்ளும் இரண்டிடங்களில் நினைவு கூட்டுகின்றார். ஒரு பாட்டு உடன்பாட்டு முகமாகவும், மற்றொரு பாட்டு எதிர்மறை முகமாகவும் வருகின்றன.

"நீரளவே யாகுமாம் நீராம்பல், தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு;—மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்;
குலத்தளவே யாகும் குணம்"

என்பது உடன்பாட்டு முகத்தால் வந்தது. இதில் 'நீரளவே யாகுமாம் நீராம்பல்' என்பது உவமை. நுண்ணறிவு, செல்வம், குணம் என்பவை, அவ்வுவமை கொண்டு விளக்கப்பட்ட பொருள்கள். 'நூலளவே யாகுமாம் நுண்ணறிவு' என்றமையால் அது கல்வியை உணர்த்திற்று. வாழ்த்துச் செய்யுளில் வந்த கருத்துக்கள் இதன்கண்ணும் வந்தன. இக் கருத்துக்களையே தொகுத்துக்கொண்டு மற்றொரு பாட்டு,

"கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொல்கூற்றம்;
அல்லாத மாந்தர்க்கு அறம்கூற்றம்;—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்; கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்"

என்று எதிர்மறை முகத்தால் வருகின்றது. இதில் வந்த உவமை 'மெல்லிய வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்' என்பது. மற்ற மூன்றும் முறையே கல்வியில்லாதவரையும் நற்குணமில்லாதவரையும் செல்வமில்லாதவரையும் விளக்கிக்கொண்டு நின்றன.

இல்லாளும் இல்லமும் செல்வப்பேற்றுக்கு அடையாளம். ஔவையார் இங்ஙனங் கருதுபவர் என்பது, "இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்று இந்நூலிலேயே அவர் மற்றோரிடத்திற் கூறியது கொண்டு தினைத்தனையும் ஐயுறவின்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்.

மனைவிக்குக் கணவனும் கணவனுக்கு மனைவியும் இருவர்க்கும் மக்களும் மற்றுமுள்ள சுற்றங்களுமெல்லாம் செல்வங்களேயாம். செல்வம் என்பது, மனைவி மக்கள் வீடு வாசல் நிலம் நீர் பேர் புகழ் களஞ்சியங் காவல் வாழ்வு வரவு முதலிய வாழ்க்கைப்பேற்றுக்குரிய அனைத்தும் ஆம். மக்கள் இங்ஙனம் வசதியான வாழ்க்கைப் பேற்றைத் திருமகள் அருளால் அடைந்து இன்புறவேண்டுமென்பதே அம்மையின் எண்ணம். வற்றிய வாழ்க்கைக்கு அவர் நூல்களிற் சிறிதுமே இடமில்லை. இவையெல்லாந் திருமகள் நோக்கே யாம் என்பது,

"மருவினிய சுற்றமும் வான்பொருளும் நல்ல
உருவும உயர்குலமு மெலலாம் — திருமடந்தை
ஆம்போ தவளோடும் ஆகும் அவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம்"

என்று இந்நூலில் வேறோரிடத்திலும்,

"நீரும் நிழலும் நிலம்பொதியும் நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும் — ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான்"

என்று இவர் இயற்றிய மற்றொரு நூலான 'நல்வழி'யில் ஓரிடத்திலும் வருவனவற்றால் தெளிந்துகொள்ளப்படும்.

ஆதலால், இல்லாளும் இல்லமும் முதலியன செல்வப்பேற்றின் அறிகுறிகளேயாம் என்பது நன்கு வலியுறும். வலியுறவே, முன், 'இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்' என வந்தது. செல்வப்பேறில்லாதவரது இரங்கத்தகுந்த எளிய நிலையைக் காட்டுவதேயாமென்பது மயக்கமின்றித் துணிந்து கொள்ளப்படும். ஆகவே ஔவையார், மூதுரையிற் கூற நினைந்த கருத்துக்களை வாழ்த்துச் செய்யுளில் புறிவாக நிறுத்துக் கூறிக்கொள்ளும் உண்மை, ஏரியாணைய நீர்போல விளக்கமாகவே தேங்கித் தெரிகின்றது.

இங்ஙனம், நூலுள் வருகின்ற கருத்துக்கள் முதலியன வாழ்த்துச் செய்யுளிலும் சுருக்கமாக வருமாறு செய்வது, தொன்றுதொட்டு வருகின்ற நூன்மரபேயாகும். ஆசிரியர் மாதவச் சிவஞான முனிவரர், தமது அரிய சிவஞானபாடியத்தில் சிவஞான போதத்தின் முதலில் வரும் வாழ்த்துச் செய்யுளுக்கு விளக்கங் கூறுகின்றபோது, நூலுள் வரும் பொருட் கூறுகள் அச் செய்யுளிற் குறிப்பாக அடங்கிக் கிடக்கும் முறைமையை எடுத்து விளக்கி அதன் இறுதியில், "இங்ஙனம் நூல்நுதல் பொருளெல்லாம் குறிப்பால் தன்னகத் தடக்கி நிற்றல் மங்கல வாழ்த்துக்கு இலக்கணமென்றுணர்க" என்று மரபும் உரைத்து முடித்தமை இங்கு நினைவு கூர்தற்குரியது.

இனி, நன்னூல் இயற்றிய பவணந்தியார் "பூமலி அசோகின் புனைநிழல் அமர்ந்த நான்முகன் தொழுது நன்கியம்புவன் எழுத்தே" என்று கூறினாற்போலச், சிலர், தாம் விளக்கப்போகும் நூற்கருத்தை வாழ்த்துச் செய்யுளில், தெளிவாகவே இணைத்துக் கூறுதலும் உண்டு.

மூதுரை வாழ்த்துச் செய்யுள், சிவஞானபோத வாழ்த்துச் செய்யுள் போன்றது.

கல்வி :

கல்வியைப்பற்றி ஔவையார் கருதுங் கருத்துக்கள் மிகவும் ஊக்கந் தருவனவாயிருக்கின்றன; கல்வியாவது என்ன என்பதை முதலில் அவர் வரையறுக்கின்றார்; ஒரே பாட்டில்

இதைப்பற்றிய பல கருத்துக்களையும் பொருந்தச்செறித்துக், காட்சிக் கழகாய் அமைந்திருக்கின்றார். வழக்கப்படி அவருடைய எளிமையும் இனிமையும் நுட்பதிட்பங்களும் இதன் கண்ணும் ஒளிவிடுகின்றன. நகைச் சுவையையும், அதே நேரத்தில் மிக்க கண்டிப்பையும் இது தருவதாயிருக்கின்றது.

'கல்வி' யென்பது பிறர்க்குப் பயன்படுகின்ற திறமையும், பிறர் குறிப்பை அறிந்துகொள்கின்ற திறமையுமாகும் என்பது அவர் கருத்து.

நூல்களைப் படித்துவிடுவதுமட்டுங் கல்வியாகாது; பிறர் வாழ்க்கையைச் செப்பஞ் செய்யத்தக்க திறமையைப் பெறுகின்றபோதுதான், கல்வி நிறைவுடைகின்றது. பலரெதிரிற் 'கல்வி' பயன்படவில்லையானால், அது கல்வியே ஆகாது. பிறர் குறிப்பை அறிந்துகொள்ளுந் திறமையும் ஒருவனுக்கு இல்லையானால், அவன் எப்படி அவர்களுக்குப் பயன்படக் கூடும்? ஆகவே இவ்விரண்டு கருத்துக்களும் ஒருவன் கல்விக்கு உயிர் நாடிகளா யிருக்கின்றன. ஔவையார் இக் கருத்துக்களை அமைத்து அருளிச்செய்த மூதுரைச் செய்யுள்,

> "கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
> அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
> நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
> மாட்டா தவன்நல் மரம்"

என்பது. 'கிளைகளும் வளார்களுமாகத் தழைத்துக் காடுகளில் இடம் பரவி நிற்கும் அவையல்ல நல்ல மரங்கள்; சவை நடுவில், நீட்டிய ஏட்டை வாசிக்கத் தெரியாமல் நின்றவனும், பிறர் குறிப்பை அறியமாட்டாமல் நின்றவனுமே நல்ல மரங்களாவர்' என்று அவர் அறிவிக்கின்றார்.

பலர் முன்னிலையில் பணியாற்ற இயலாதவன் என்னுங் கருத்தில், அவ்வகையிற் கடைசித் தரமானவனை, எழுதிய ஓலை யொன்றைதானும் வாசிக்கமாட்டாதவனை இங்கே சுட்டிச் சொன்னார்.

பிறர்க்குப் பயன்படும்படி அவையில் ஒன்றைப் பேசும் வல்லமையில்லாமல், ஒன்றைப் படிக்கவுங்கூடத் தெரியாத

நிலைமையில், ஒருவன் உயரமாய் நிற்பதை நோக்க, உடனே அவருக்கு மரத்தின் நினைவு எழுந்தது, ஒப்பிட்டுப் பார்த்தார்; கப்புங் கிளையுமாக இருக்குங் காட்டுமரங்கள் அவருக்கு நல்ல மரங்களாகத் தோன்றவில்லை. சிறிதுங் கோணலில்லாமல் நேராய் நெட்டையாய் நிற்கும் இவன் போன்றோரே அவருக்கு நல்ல மரங்களாகத் தோன்றினர். இப்படி நகைச் சுவை தோன்ற, இச் செய்யுளை ஔவையார் அருளிச் செய்திருக்கின்றார்.

ஆசிரியர் திருவள்ளுவர் முதலியோர் கல்வியில்லாதவரை விலங்குகளோடு ஒப்பிட்டுக் கூறினால், அம்மையார் அவர் எல்லாரினும் கண்டிப்பாக, அக் கல்லாதவரை 'நல்ல மரங்கள்' என்றே துணிந்து கூறுகின்றார்.

இங்ஙனம் இச் செய்யுளிற் கல்வி யென்பது இன்னது என்று பிறிதொரு வடித்துக் கூறி, அதனைக் கல்லாதவர்களைக் கண்டிப்பாக இழித்துக் கூறுமுகத்தால், கல்வி கற்றுக் கொள்ள வேண்டியதன் கட்டாயத்தை நன்கு வலியுறுத்து வாராயினர்.

இனி, அத்தகைய கல்வித் திறமையும் ஒருவருக்குச் சொந்தத் திறமையாக அமையவேண்டுமென்றும் அவர் கருதுகின்றார். ஒருவரைப்பார்த்து மற்றொருவர் நடிக்கமுயலுதல், வழியல்லாத வழியிற் செல்லுதல்போல ஆகும். அதனால், அவரவர்க்கே உரிமையாக அவரவருள் மறைந்துகிடக்கும் ஆற்றல்கள் வீறுடன் வெளிவந்து விளங்குதற்கு இடமில்லாமற் போகின்றது. பிறர்பால் அவர்க்கே உரிமையாக விளங்கிநிற்குந் திறமைகள் மேலுமேலும் ஓங்கிப் பயன்படுதற்கும் தடையாகின்றது. உலகத்தாரும், கற்றோர் பலருடைய பலவேறு திறமைகளையும், அவற்றால் உண்டாகும் பலவேறு பயன்களையும் இழந்துவிடும்படி நேர்கின்றது. ஆதலால், கல்விகளை அவரவரும் முறையாகப் பயின்று அவரவர்க்கே உரியவாய் அவரவர் உயிரறிவினுள் மறைந்து கிடக்குந் தனித்திறமைகளை மேலெழுப்பி உலகுக்குப் பயன் படும்படி வளரவைக்க வேண்டும். கல்விப் பயிற்சிகள் இங்

ஙனம் நடைபெறுவது நன்றாயிருக்கும். அப்படிச் செய்யா மல், தாம் முறையாகக் கல்லாமலே கற்றாரைப்போல் ஒருவர் நடக்க முயல்வது, மேலே காட்டியபடி கல்வியில் உயர்ந்து வரும் சான்றோரையும் தடைசெய்து தாமுந் தோல்வியுறு தற்கே ஏதுவாகும். இயற்கையே அழகாக இருக்கும் நீல மயில், அதற்கேற்ற பசுமையான இடமாகிய ஒரு கானகத் தில் மேகங்கள் தவழ்ந்து வருகின்ற குளிர்ந்த நேரத்தில இயல்பாகத் தனக்குள் தோன்றிய உள்ளமகிழ்ச்சியினால் நீலமான தனது தோகையை மலர விரித்துக் கண்ணியமாக வும் கவர்ச்சியாகவும் அடி பெயர்த்து நடம் ஆடுகின்ற இன் பக் காட்சியைக் கண்டு, எல்லாப் படியாலும் அதனோடு ஒப்புமையில்லாத ஒரு வான்கோழி தன்னையும் அம் மயில் போலப் போலியாகக் கருதிக்கொண்டு வறண்ட பாலைவனத் தில் வெயிலில் தலைக்குள் எழுந்த செயற்கை யெழுச்சியினால் தானும் தனது பொல்லாத சிறகை விரித்து ஆடினால் எப்படி யிருக்கும்! இயல்பான கல்வித் திறமையில்லாதவர், கற்றா ரைப்போல நடிக்க முயல்வது இவ் வான்கோழியின் செயல் போன்றதே யாம். ஔவையார் இவ்வழகிய உவமையை மிகவும் அமைவாகப் பொருத்திக்,

> "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
> தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
> பொல்லாச் சிறகைவிரித் தாடினற போலுமே
> கல்லாதான் கற்ற கவி"

என்று ஓர் எளிய இனிய மூதுரையை அருளிச் செய்வது, எவ்வளவு நன்றாயிருக்கின்றது!

கல்வி இங்ஙனம் பயிற்சியினால் மாட்சிமைப்படுதலோடு குணத்தினாலும் மாட்சிமைப் படுதல் வேண்டும். குணத்தி னால் மாட்சிமைப்படும்போதுதான் கல்வி பெருமையடை கின்றது. அதற்கு, அம் மாட்சிமை வாய்ந்த கற்றாரோடு மேலுமேலும் மனங்கலந்து பழகுதல் இன்றியமையாத தாகும். நல்ல தோற்றமும் மணமும் வாய்ந்த தாமரை மலர் கள் நிறைய மலர்ந்துள்ள தெளிநீர்க் குளங்களில் நல்ல அன்

னங்கள் சேர்ந்து வாழ்வதுபோலத், திறமையுங் குணமும் மிக்க பெருங்கல்வியாளரோடு, ஏனையோர் நெருங்கிக் கலந்துகொள்ளவேண்டும். குணமாட்சிமை யில்லாதவர்களோடு கலந்துகொள்ள லாகாது. அது மூர்க்கரது செயல். இங்ஙனம் அறிவுரை கூற விரும்பும் ஒளவையார்,

“ நன்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் — கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை உகக்கும் பிணம் ”

என்று தெளிவுபடுத்தி விளக்குகின்றார். பின் இரண்டடிகளில் மூர்க்கரைப்பற்றிய குறிப்பு வருவதனால் முன் இரண்டடிகளிற் கூறிய ‘கற்றார்’ என்பவர், திறமையோடு குணமாட்சிமையு முடையவராவர் எனக் கொள்ளுதல்வேண்டும். மலர்ந்து மணக்கும் நீர்ப்பொய்கைக்கும் கரிந்து நாறும் இடுகாட்டுக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறது! அப்படியே, அழகிய வெண்ணிறமான மலருகக்கும் அன்னமெங்கே! இருண்ட கருநிறமான பிணமுகக்குங் காக்கையெங்கே! அணுவுக்கும் மலைக்கும் உள்ள வேறுபாடன்றோ இவற்றிலுந் தெரிகின்றது! ஆகவே, கற்றார், நிறைவடைந்த பெருங்கல்வியாளரோடு சேர்ந்து விளங்குவது எவ்வளவு இனிமையும் பெருமையுமுடையதா யிருக்கின்றது!

இங்ஙனம் மாசறக் கற்று நிறைவடைந்தால், அக் கற்றாருக்கு இணையானவர்கள் இவ்வுலகத்தில் யாரிருக்கிறார்கள்? அவர்களுக்கு இங்கே குறையென்பதுதான் என்ன இருக்கின்றது? எல்லா வளங்களும் ஒருங்கு நிரம்பிய மன்னனும் அவருக்கு நிகராகமாட்டான். ‘மன்னனையும் மாசறக் கற்றோரையும் சீர் தூக்கிப் பார்த்தால், மன்னனைவிடக் கற்றோரே சிறப்புடையவராவர். ஏனென்றால், மன்னனுக்குத் தன் தேசமல்லாமல் சிறப்பில்லை; கற்றவர்க்கோ சென்ற இடமெல்லாம் சிறப்பு (௨௬); காரணம், களங்கமற்ற உயர்ந்த பொதுமை மனப்பான்மை, கற்றவர்களுக்கு உண்டு; அவர்களுக்கு யாதும் ஊர்; யாவருங் கேளிர். ஆத

லால், நிறைவடைந்த பெருங்கல்வியாளருக்கு இவ்வுலகத்தில் ஒரு குறையுமில்லையென்றே தீர்மானிக்கவேண்டும்.

பிறர்க்குப் பயன்படுந் திறமையும், பிறர் குறிப்பை அறிந்து கொள்ளுந் திறமையும், தனக்கே உரிய உயிர்த் திறமையும், குணமும், யாதும் ஊரே யாவருங் கேளிர் என்று பொதுமையாகக் கருதும் மனப்பான்மையும் என்னும் இத் திறமைகளே ஒருவனுக்குக் 'கல்வி' எனப்படுமென்பது இம்மூதுரைச் செய்யுட்களால் திட்டமாக விளங்குகின்றது. "வைத்தவொரு கல்வி மனப் பழக்கம்" என்னும் ஔவையாரது தனிப்பாடலொன்றும் இங்கு நினைவுகூர்தற்குரியது. ஆகவே இச் சிறந்த மனப்பழக்கங்களாகிய மக்கட் பண்புகளை ஒருவன், கல்வியெனக் கருதிப் பயிலாமல், சில நூல்களை ஏட்டளவாகக் கற்றுக்கொண்டு அதனையே கல்விப் பயிற்சியெனக் கருதிக்கொள்வனாயின், அவனது நிலை எவ்வளவு ஏழைமையானதாயிருக்கின்றது! கல்வியின் உண்மை நிலையை ஔவையார் இம் முறைமையில் நுட்பமாக உணர்த்துவது, அவர்க்கே உரியதான ஒரு பெருந் தனித் திறமையாகும்.

கல்வியை இம் முறைமையிற் பயின்று மாட்சிமைப் பட்டவர்களுக்கு உலகத்தில் ஏன் குறைவுவரும்? வெறும் ஏட்டறிவையே கல்வியறிவாகக் கருதிக்கொண்டு, எவரையும் உலக முறைமையையும் பொருள் செய்யாமல் முறை தவறிச் செல்வோர்க்கு, எங்ஙனம் எல்லா நலங்களும் உண்டாகும்? நலங்களுக்குரிய காரணங்கள் அவர்கள்பால் இல்லையே! அத்தகையோர் கற்றோருமாகார்; திருவள்ளுவரும் இவர்போன்றோரைக் "கல்லார் அறிவிலாதார்" என்று தெளிவாகவே கூறுகின்றார்; ஆகவே அத்தகைய கல்லாதாரைக் கற்றோராக நினைத்துக்கொண்டு, அவர்க்குச் செல்வம் முதலிய நலங்கள் உண்டாகாமையைக் கருதிக், 'கல்விச்செல்வம் உடையவர்களுக்குப் பொருட்செல்வம் உண்டாவதில்லை' என்று ஒரு தவறான எண்ணத்தைப் படைத்துக் கூறுவது எப்படிப் பொருந்தும்? உண்மையான கல்வியாளர்க்கு உலகத்தில் எல்லாச் செல்வங்களும்

உரியவாகவே இருக்கின்றன. கூர்ந்து நோக்கினால், உண்மையான கல்வியறிவு உடையவர்களே உலகத்தில் நல்ல செல்வமுடையவர்களாக இருக்கக் காண்கின்றோம். மேலைத் தவமுடையவர்கள் இப் பிறவியில் ஏற்ற கல்வி நலம் உடையவராய், அக் கல்வியறிவின் வாயிலாக நிரம்பப் பொருள் நலம் படைப்பவரா யிருக்கின்றனர். இதனாலன்றோ ஆசிரியர் திருவள்ளுவர், கல்வியறிவினாலேயே ஒருவன் உலகிற் பொருள்படைப்பது கூடும் என்னுங் கருத்தால், கல்வி, கேள்வி, அறிவு முதலான அதிகாரங்களைத் தமது திருக்குறளிற் பொருட்பாலின்கண் நிறுத்தி அறிவுறுத்துவாராயினர்!

> "இருவே றுலகத் தியற்கை : திருவேறு
> தெள்ளிய ராதலும் வேறு"

என்னுந் திருக்குறளில், 'பொருளே நோக்கமாக வாழும் உலக வாழ்க்கை ஒன்று, தெளிவே நோக்கமாக வாழும் அருள் வாழ்க்கை ஒன்று; இங்ஙனம் இருவேறு நோக்கமாக உலகம் நடைபெற்றுச் செல்கின்றது' என்று அறிவுறுத்தப் பட்டிருக்கின்றதேயல்லாமல், 'கல்வி'யைப் பற்றி இங்கே குறிப்பது ஏதுமில்லை, 'கல்வி' இவ்விருவகை வாழ்க்கைக் கும் பொது. கல்வியறிவு கொண்டு பொருளே நோக்கமாக வும் உயிர் வாழலாம்: தெளிவே நோக்கமாகவும் உயிர் வாழலாம். உண்மை இங்ஙனம் இருப்பதனாலேதான், ஔவையார் இம் மூதுரையின் வாழ்த்துச் செய்யுளில், 'வாக்குண்டாம்' என்பதனாற் கல்வியறிவைக் குறிப்பித்து, 'நல்ல மனமுண்டாம்' என்பதனாலும் "மாமலராள் நோக்குண்டாம்" என்பதனாலும் முறையே 'அக் கல்வி யறிவுகொண்டு தெளிவையும் பெறலாம், திருமகள் நலத்தையும் பெறலாம்' என்று தெளிவுற அருளிச் செய்திருக்கின்றார். கல்வி இவ்விரண்டுக்கும் பொது என்பது இதிலிருந்தும் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம். ஏதாவது ஒரு நோக்கமாக வாழ்க்கை செலுத்துகிறவர்களுக்கு மற்றொரு நலம் குறைவதுபோலத் தோன்றலாம்; ஆனால் கல்வியாளர்கள் முயன்றால் அவர்கட்கு உண்டாகாத நலங்கள் எவையு

யில்லை; இரண்டும் ஒருங்கே பெற முயன்றாலும் அந் நோக்கத்துக்கேற்ற அளவில் அவ்விரண்டும் அவர்கட்கு ஒருங்கே உண்டாவதிலுந் தடையில்லை.

கல்வியின் மெய்ந்நிலைமையைப் பயன்படும் முறையில் ஔவையார் இம் மூதுரைச் செய்யுட்களில் எவ்வளவு நுட்பதிட்பமாக நன்றாக அருளிச்செய்திருக்கின்றார்! உலகத்தார் மாட்டு வைத்த அவரது பேரருளுக்கு எல்லையே இல்லை. தெளிவடைந்த நிலையிலுள்ள சான்றோர்கள் இங்ஙனமெல்லாம் மெய்ப்பொருள்களைத் தாமே உளங்குழைந்து அருளிச் செய்யாவிட்டால், உலகத்தில் ஏனையோர் உய்வதற்கு, வேறு முறைகளில் வழியுண்டோ?

செல்வம் :

இனி, ஔவைப்பிராட்டியார், மக்கள் அனைவரும் வளத்தோடு வாழவேண்டுமென்னும் அருளுள்ளங் கொண்டு அறிவுறுத்துந் தெளிவான நல்லுரைகள் சிலவுங் கருத்திருத்துதல் வேண்டும்.

முதலில் வளம் என்பதே யாதென்று அறியவேண்டுமாகலின், பழகுதற்கு இனியரான சுற்றத்தவரும், மேன்மை வாய்ந்த செம்பொற்றிரளும், அழகு, வடிவம் முதலிய நல்ல தோற்றமும், சிறந்த நண்பர்களுமெல்லாம் செழுமையின் கூறுகளேயாம் என்று "மருவினிய சுற்றமும்" (செ. ௨௬) என்னுந் திருப்பாடலின் முகமாக அருளிச்செய்தார்.

இனி, அவ்வளங்களெல்லாம், அமையவேண்டுங் காலங்களிலேயே அமையவேண்டுமென்பதும் ஔவையின் கருத்து. இளமையில் வறுமை நேர்ந்தபின் முதுமையில் இனிய நுகர்பொருள்கள் அமைவதனால் என்ன பயன்? சூடிக்கொள்ளக் கூடாத காலத்தில் மலரும் நறுமலர்களைப்போலவும், கணவனில்லாத காலத்தில் விளங்கும் ஒரு மங்கையின் பேரெழிலைப் போலவும் துய்ப்பதற்கு வழியின்றி வீணே கழிந் தொழிதலால் நன்மை என்ன உண்டு? (௩). ஆதலால், உரிய காலங்களில் வளங்கள் அமைவது இன்றியமையாததாயிருக்கின்றது.

அங்ஙனம் அமைவதற்குத் திருமகள் நோக்கம் முதன்மை யானது. ஏனென்றால், அவை திருமடந்தை ஆம்போது அவ ளோடும் ஆகும்; அவள் பிரிந்து போம்போது அவளோடும் போகும் (உக). திருமகள் நோக்கத்தைப் பெறுவதற்கு முன்னைத் தவம் அமைந்திருக்க வேண்டுவதோடு, இப்போது முயற்சியும் சிறிது வேண்டும்; எடுக்கும் முயற்சியை எப்போ தும் திருத்தமாகச் செய்துகொண்டிருக்க வேண்டும். பயன் தானே விளையும். எப்பொழுதும் முயற்சி முன்னும் பயன் பின்னுமாகத்தான் நடைபெறும். பயன் உண்டாகும் நேரம் வாய்த்துவிட்டால் அது தானே உண்டாய்விடும். அது வாயாமுன் நாம் அடுத்தடுத்து முயன்றாலும் செயல் நிறை வேறிவிடாது. நாம் நமது தோட்டத்திற் சில பழ மரங்களை வைத்துப் பயிரிட்டால், அவை மிக நீண்டு உயர்ந்த மரங்க ளானபின்னும் பழுக்கும் பருவம் வந்தால்மட்டுமே பழுக் கின்றன. அன்றிப் பழா. அதுபோலத்தான் நம் முயற்சி களும் பயன்றரும் நேரம் வந்தால், தாமே பயனுண்டாக்கும். ஆகவே பயன்களில் முனைப்புக்கொள்ளாமல், முயற்சிகளில் திருந்திய எண்ணம் வைத்து ஒழுகுதலே, உரிய நேரங்களில் நல்ல வளங்கள் மிகுவதற்கு ஏற்றதாகும்.

> " அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
> எடுத்த கருமங்க ளாகா ;—தொடுத்த
> உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
> பருவத்தா லன்றிப் பழா "

என்று ஔவைப் பெருமாட்டியார் அருளிச்செய்த திருப் பாடலில் இவ்வுண்மைகள் விளங்குதல் காணலாம்.

இனி, முயற்சிசெய்யும் நல்லோர் இங்ஙனம் திண்ணிய திருந்திய உள்ளம் உள்ளவராய்த், தாம் செய்யும் வேலைத் துறையிற் பேராற்றலுடையவரா யிருந்தாலும், தக்க துணை வலியோடு அக் காரியங்களைச் செய்வது பின்னும் உறுதி யுடையதாயிருக்கும். தட்டாமல் நற்பயன் உண்டாவதற்கு ஏதுவாயிருக்கும். நெல்லிலுள்ள அரிசியிலேயே ஆற்றலோடு கூடிய முளை அமைந்திருந்தாலும், அவ்வரிசியைச் சூழ அமைந்துள்ள உமி விண்டுபோனால் முளைத்தல் என்னும்

செயல் நிகழாமற்போகின்றது; ஆதலால், நமது முயற்சிக்கு உறுதுணையா யிருக்கக்கூடிய தக்க துணைவர்களையும் உடன் அமைத்துக்கொண்டு, எம் முயற்சியையும் வலிமைபெறச் செய்ய மனங்கொள்ளவேண்டும்; (௧௧). அப்போது செல்வம் தக்கவாறு செழிப்பதற்கு இடமாகும்.

இனி, அங்ஙனந் துணைவலியாக அமைத்துக்கொள்ளத் தக்கவரைப்பற்றியும் ஔவையார் சில குறிப்புக்கள் தருகின்றார். துணைவலியாய் அமைவோர், காரியத் தகுதி யுடையவரா? நேரத்தில் தன்னை இழந்தாயினும் செயலை நிறைவேற்றுவோரா? கரவில்லாதவரா? என்பதுபற்றி ஆராய வேண்டுவது கட்டாயமாகும்.

உடன்பிறந்தார் முதலிய உறவினராய் அமைந்தார் சிலரைத் தாம் துவங்கிய பொருள் முயற்சியில் தமக்குத் துணைவராக அமைத்துக்கொள்ளலாமென்று சிலர்க்கு நினைவு தோன்றும். காரிய வெற்றிக்கு உறவு என்பது முதன்மையன்று. உண்மையோடு கூடிய திறமையே முதன்மையானது. இத் திறமையோடு உறவும் அமைந்திருந்தால் அமைந்திருக்கட்டும். அப்படியில்லாவிட்டால், அவர்போன்றாரைத் துணைவராகக் கொள்ளுதலிற் பயனில்லாமையோடு, அதனால் தீமை நேரினும் நேரும்; ஏனென்றால், உடம்பை மாய்க்கும் நோய் என்பது உடம்போடு உடன் பிறந்ததாகத்தான் இருக்கின்றது; இருந்தாலும் உடம்பை அது மாய்த்துவிடக் காண்கின்றோம்; ஆனால், அவ்வுடம்பை மாயவிடாமல் அதன் நோயைத் தீர்த்துப் பிழைப்பிக்கும் பச்சிலை முதலிய மருந்து வகைகளோ, அவ்வுடம்போடு உடன்பிறவாமல் எங்கோ தொலைவிலுள்ள மலைகளில் இருக்கக் காண்கின்றோம். அங்ஙனமே, உறவினரல்லாதவர்களிலும், உண்மைத் திறமையாளராயிருந்து பயன்படக்கூடியவர்கள் உலகத்தில் இல்லாமலில்லை. ஆதலால், உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிராமல், காரிய வெற்றியையே குறிக்கோளாகக் கொண்டு, அதற்குரிய திறமையாளரெவரோ அவரையே துணைவராகத்

தழுவி முயற்சிகளைப் பலமுகமாக நடத்திப் பொருளீட்டுதல் வேண்டும் (௨௦).

இனி, அத்துணைவலிக்குரியோர் ஒருகால் தக்க தோற்றமில்லாதவராகவும் இருக்கலாம்; ஆடம்பரமில்லாதவராகவுமிருக்கலாம்; காரியத் திறமைக்குமுன் இவையெல்லாம் அவ்வளவு பொருளல்ல; காரியத்திறமையோடு இவையுமிருப்பின் நன்றேயாம். திறமையையே முதன்மையாகக் கருதவேண்டும். தாழம்பூ இதழ் பெரியதுதான்; மகிழம்பூ இதழ் சிறியதுதான். ஆனால், மகிழம்பூவின் மணம் தாழம்பூவுக்கு இல்லையே! பெரிய தோற்றத்தோடு இருந்தமட்டும் என்ன பயன்? அகலமாகப் பரந்து தோன்றும் ஒரு பெரிய கடலையும் அதனருகே குறுகலாகக் குழிந்து தோன்றும் ஒரு சிறிய நீரூறலையும் நினைக்குமிடத்தும் இவ்வுண்மை விளங்குகின்றது. சிற்றாறலின் நீரோ உண்பதற்குப் பயன்படுகின்றது; கடல் நீரோ உடம்பைக் கழுவுவதற்கும் ஆகாததாயிருக்கின்றது; (௧௨). ஆதலால், உடல் சிறியரென்று கருதி அதனாலேயே காரியத்திறமையைப் போற்றிக் கொள்ளாமலிருப்பது ஆகாது. இங்ஙனமே ஆரவாரமில்லாமல் அடங்கியிருப்போரையும் உடனே எளியரென்று கருதி அவராலாந் திறமையை இழந்துவிடுதலுமாகாது. ஏனென்றால், நீர்க்காலில் ஓடு மீன் ஓடத், தனக்கு இரையாவதற்குரிய தகுதியான மீன் வருமளவும், கொக்கு அதன் மடைத்தலையில் மிக்க அடக்கமுடையதுபோல வாடியிருப்பது கண்டு, அதனைத் திறமையில்லாததென்று கருதிவிடுதலாகாதன்றோ? (௧௬). ஆதலால், துணைவலிக்குத் தெரிந்தெடுப்போரிடம் திறமையைக் கருதுதலொன்றே முதல் நோக்கமாக இருக்கவேண்டுமென்பது இக் குறிப்புக்களிலிருந்தெல்லாந் தெரிகின்றது.

இனி, நேரத்தில் தன்னை இழந்தாயினுஞ் செயலை நிறைவேற்றுவோரா என்பதுங் கருதுதல்வேண்டும்; ஏனென்றால், செயலைத் துறைபோக நிறைவேற்றுதற்கு, ஏற்ற நேரங்களில் அவ்வியல்பு இன்றியமையாததா யிருக்கின்றது. செயல் நன்கு நிறைவேறி அதனால் பலர்க்கும் நன்மைவருமாயின், ஒருவர்,

தன்னுடைய சிறு நலங்கள் சிலவற்றை இழந்துவிடுவதனாற் குறையில்லை. ஒருகால் உயிரையே இழக்க நேரினும், கடமையை நிறைவேற்றும்பொருட்டு அது செய்யத்தக்கது. நன்மையில் உள்ளூக்கம் உடையோர், கடமைகட்கு நேரும் எதிர்ப்புகட்கு அஞ்சார்; தளரவுந் தளரார். ஒரு கல்தூணின் மேல் பளுவு மிக ஏறித் தாக்குமாயின் அத் தூண் பிளந்து முறியுமேயல்லாமல் தளர்ந்து வளையாதன்றோ! (௬). முழுத் தன்னல இழப்பை இங்கே ஔவையார் எடுத்துக்காட்டினாராயினும், பொதுவில் அத்தகைய அன்புள்ளம் காரியஞ் செய்வோர்க்கு வேண்டும் என்பதே இங்குக் கருத்தாவதாம்.

துணைவலிக்கு உரியாரை இவ்வாறு தேர்ந்துகொள்ளுங்கால், அவர் கரவில்லாதவரா என்பதும் ஆய்ந்துகொள்ளுதல் வேண்டும். அதனைக் கண்டுகொள்ளும் வழி, அவரும் அவர் செய்கைகள் முதலானவையும் ஒளிவுமறைவு இன்றி நிகழ்கின்றனவா என்று ஆராய்தலாகும். நாகப்பாம்பு தன்பால் நஞ்சு இருப்பதனால், மறைந்து உறைகின்றது; நீர்ப்பாம்பு அஃதில்லாமையால் அஞ்சாமல் வெளியே கிடக்கின்றது. ஆதலின், கரவுஉடையோர் எப்போதும் மறைந்து மறைந்தே உறைவர். இங்கே கரவு என்பது உட்பகை; இத்தகைய உட்பகையுடையோரைத் துணைவராகக் கொண்டால், காரியங் கெடுவதோடு அனைவர்க்கும் பொல்லாங்குகள் நேரும்; (௨௫). ஆதலின், துணைவர்களைத் தெரிந்தெடுத்தலில், இங்ஙனமெல்லாம் பலவகைகளுங் கருதிக்கொள்ளுதல் இன்றியமையாததாயிருக்கின்றது.

இங்கெடுத்துக்காட்டிய கருத்துக்களைப் பொருள்முயற்சிகள் செய்யுங்காலங்களில் எங்கெங்கு எவ்வெவ்வாறு பயன்படுத்திக்கொள்ளவேண்டுமோ அவ்வவ்வாறு கொண்டு ஏற்றபடி நடந்துகொள்ளுதலும் வேண்டும்;

முன்னைத் தவமுடையோர்க்கு இவைபோல்வனவெல்லாம் எளிதின் இனிமையாக நடைபெற்றுச் செல்லும்; முயற்சி மிகுதியாக இராது.

செவ்வியில் செல்வம்பெற்று அனைவருந் தக்காங்கு இல் வாழ்வில் வாழ்ந்து இம்மை மறுமை நலங்களை அடைய வேண்டுமென்பதே ஔவைத் தாயின் கருத்து. இல்லாள் அகத்திருந்தால் தேடிய செல்வங்களும் வளம்பெறும்; அப் போது, இல்லாததென்பதே ஒன்றுமில்லை; எல்லாம் இருக் கும். இல்லாளும் துணைவருள் ஒருத்தியாவள்; அவளை 'வாழ்க்கைத்துணை' என்றன்றோ தெய்வப் புலவர் அழைத்தார்! இல்லாள் எப்போதும் பொருள்போற்றி இன்புறுத்தும் செந்தாமரையாள் ஆவள். அவள் தக்க நிலையில் இல்லா விட்டால், இவ்வளவெல்லாங் கருதிப் பொருளீட்டியும், அப் பொருள் குவிந்த வீடு ஒரு புலி கிடந்த தூறுதானே! அவள் தக்க நிலையில் இருந்தால், அவ்வில்லம் ஆ, ஓர் ஒளிவிளங்குந் திருக்கோயிலாய் மிளிரும்!

பொருள் முயற்சியின் தொடர்பாக ஔவைப் பெரு மாட்டியார் பின்னும் அருளிச்செய்யும் சில அறிவுரைகள் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாத பொருண் மொழி களாயிருக்கின்றன.

உலகத்தில் மக்கள் ஒருவரோடொருவர் தொடர்பின்றி வாழ்வது, என்றும் இயலாது. ஆதலின், எவ்வகை முயற்சிக் கும் 'நட்பு' இன்றியமையாததா யிருக்கின்றது. தக்கவர் பால், நட்பென்னும் அரும்பேறு ஒருவர்க்குக் கிட்டுமாயின், அதனடியாக அவருக்கு ஏனையெல்லா நலங்களும் படிப்படி யாக வந்தெய்தும். நலங்கள் எய்துதற்கு நட்பியல்பே சிறந்த அடிப்படையா யிருக்கின்றது.

கருத்துக்களை அவ்வவற்றின் அளவோடு மதித்து வரம்பு கோலி விளக்குதலில் மிகச் சிறந்த உலகப் பெரும்புலவரான ஆசிரியர் திருவள்ளுவனார், உலகத்தில் அறவொழுக்கங்கட்கும் பொருள் முயற்சிகட்கும் இன்பவாழ்க்கைகட்கும் நட் பியல்பே பேரடிப்படையாய் அமைந்துகிடக்கும் இயற்கை யுண்மையை நன்கறிந்துகொண்டு, தமது விழுமிய முப்பால் நூல் முழுமையும் அவ்வியல்பு தெற்றெனை விளங்குமாறு மிகத் திறமாக இயற்றியிருக்கும் பெற்றிமை, சாலவும் அறிந்து உணர்ந்து கனிந்து மகிழ்தற்குரியதா யிருக்கின்றது.

அறத்துப் பாலில் வருகின்ற இல்லறவியல் துறவறவியல் என்னும் இரண்டும் முறையே அன்பையும் அருளையும் அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன. அன்பென்பது மனைவி மக்கள் சுற்றம் விருந்து முதலிய தொடர்புடையோ ரனைவரையும் நேசிக்க இடந்தரும், அருளென்பது அத் தொடர்பு கருதாது மன்னுயிர் அனைத்தையும் நேசிக்க இடந் தரும் அறவாழ்வை விளங்கச் செய்கின்றன. அருளென் பதோ அன்பின் குழவி. ஆதலின், அறவாழ்வு என்பது முழுவதும் அன்பின் அடிப்படையிலேயே அடங்கிக் கிடக் கின்றமை பெறப்படும். அத்தகைய அன்பு இருப்பின், அஃது ஆர்வமாய் வயங்கி நண்பினைத் தந்து அறவாழ்வுகளை நன்கு நடைபெறச் செய்வது முறைமையாயிருக்கின்றது. இவ்வியல்பினை நாயனர்,

> " அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
> நண்பென்னும் நாடாச் சிறப்பு "

என்று விளங்க அருளிச் செய்து, அறவொழுக்கங்கள் முடிவாக நண்பின் விளைவிலிருந்து நடைபெறுகின்ற உண்மையினை இனிது புலப்படுத்துவா ராயினர்.

இனி, இன்ப வாழ்க்கைகட்கு நட்பியல்பு எத்துணை இன்றியமையாததென்பது, கூறுமலே அமைவதொன்றும். அன்பிற் சிறந்த தலைவனொருவனுந் தலைவி யொருத்தியுந் தம்முட் கொள்ளுங் கெழுதகை நட்பன்றோ அவர்தமக்குள் என்றும் மாருத இன்ப நல்வாழ்வை எந்நிலையிலும் இனி தமைந்து நிறுவுகின்றது. காதலின்ப வாழ்வை நட்புவாழ் வென்றே சொல்லலாம்.

> " உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
> மடந்தையொ டெம்மிடை நட்பு "

என்று திருவள்ளுவப் பெருமானே அவ்வியல்பினை 'நட்பு' என்று குறிப்பிடுவாராயினர். அன்றியும், பண்டைக் காலத் துச் செந்தமிழ் அகப்பொருள் நூல்கள் பலவற்றிலும் இக் காதற் பெருங்கிழமையினை ஆசிரியன்மார்பலரும் ஆங்காங்கு நட்பென்னுங் குறியிட்டால் உணர்த்துதலும் இங்கு நினைவு

கூர்தற் குரியதாகும். மேலே நாயனார் கூறிய உடம்புயிர் உவமையே கொண்டு,

"யாக்கைக்கு
உயிர்இயைந் தன்ன நட்பின் அவவுயிர்
வாழ்த லன்ன காதல்
சாத லன்ன பிரிவரி யோளே"

என ஓரிடத்தும், இன்னும் இந் நட்பியல்பினை நன்கு விளக்கி,

"யாமே, பிரிவின் றியைந்த துவரா நட்பின்
இருதலைப் புள்ளின ஓருயி ரம்மே"

என மற்றோரிடத்தும் வருகின்ற அகநானூற்றுச் செழுந்தமிழ்ச் செய்யுட்களும்,

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும நாடனொடு நட்பே"

என விளங்குகின்ற குறுந்தொகையின் நறுந்தமிழ்ச் செய்யுளும் இங்கே கருத்திருத்தி மகிழ்தற்குரியனவா யிருக்கின்றன. குறிஞ்சித்திணை யென்பதே நட்பொழுக்கமாகும். ஆதலின், உலகத்தில் இன்ப வாழ்க்கைதானும் நட்பின் கெழுதகைமையில் நின்றே சுவைத்து இன்புறுதற்குரியதாயிருக்கின்றமை ஐயுறவின்றித் தெளியப்படுகின்றது.

இனி, இவ்வறவொழுக்கங்களையும் இன்ப வாழ்க்கைகளையும் ஈனும் பொருண் முயற்சிகளோவெனின், அவை முற்றும் நட்பின் அடிப்படையினின்றே இயங்கிப் பயன்றருதற்குரியனவா யிருக்கின்றனவென்க. மேல் அறத்துப் பாலில் நாயனார் அருளிச்செய்ததெனக் காட்டிய "நண்பென்னும் நாடாச்சிறப்பு" என்னுந் தொடருக்குப் பரிமேலழகர் உரை கூறுமிடத்து, "பகையும் நொதுமலு மில்லையாய் யாவரும் நண்பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும்; யாவரும் நண்பாதல் எல்லாப் பொருளும் எய்துதற்கேதுவாகலின், அதனை 'நாடாச் சிறப்' பென்றார்" என்று விளக்கமுங் கூறுதலின், பொருட்செல்வம் பிறரோடு

நட்புக் கொண்டு அளவளாவி ஒழுகும் திறத்தினாலேயே வளமாக அடைவதற்குரியதென்பது தெற்றென விளங்கா நிற்கும். நாயனார் இக்கருத்தில் மிக்க உரமுடையவரென்பது, அவர் பொருட்பாலதிகாரங்களை நட்பின் அடிப்படை கொண்டே அமைத்திருக்கும் அமைப்பு முறை முதலிய பலவற்றாலும் நன்கு விளங்குகின்றது.

நாயனாரது பொருட்பாலில் அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூன்று இயல்கள் உள்ளன. இவற்றில் முதன்மையானவை அரசியல் அங்கவியல் என்னும் இரண்டுமேயாம். இவ்விருவகை இயல்களினும் அடங்காது நின்றனவே, ஒழிபியலில் பெரும்பாலும் ஒவ்வோரதிகாரத்தின் மட்டும் வைத்துப் பதின்மூன்று அதிகாரங்களால் உரைக்கப்படுகின்றன. ஆதலின் பொருட்பாலுக்குரிய முதன்மையானது அதன் முதலிரண்டு இயல்களிலேயே அமைந்திருக்கும் உண்மை கண்டுகொள்ளப்படும்.

இனி, அரசியல் இருபத்தைந்து அதிகாரங்கள் உடையது. அங்கவியல் முப்பத்திரண்டு அதிகாரங்கள் வாய்ந்தது. ஆக மொத்தம் பொருட்பால் எழுபது அதிகாரங்களாகும்.

பொருட்பாலில், அரசியலில், முதல் அதிகாரம் 'இறைமாட்சி' என்பது; அதன் முதற் குறளே,

> "படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு"

என்று அரசனது மாட்சிமை கூறப்புகுந்து, பொருள் முயற்சிகள் செய்தற்குரிய ஒருவன் இங்ஙனம் ஆறு அங்கங்களும் உடையவனாயிருப்பின் சிறக்கும் என்று அங்கங்களின் வகையினை வகுத்துத் தந்தது; இத் திருக்குறளின் உரையில் உரையாசிரியர், " அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும், ஈண்டுச் செய்யுள்நோக்கிப் பிறழ வைத்தார்" என்று அவற்றின் வரிசையை ஒரு முறைப்படுத்தி நிலையூட்டினார். ஏனென்றால், மேல் அங்கவியலில் இவ் வரிசைப்படியே ஆறங்கங்களையும்அமைத்து, அவற்றின் இயல்புகளை நாயனார் விளக்கிச் செல்கின்றார். இங்ஙனம்

இவ்வரிசை அமைந்த முறைமை, ஓர் அரசன், அமைச்சும் நாடும் அரணும் பொருளும் படையுங் கொண்டு, அவனவரோடும் நட்புக் கருவியாக அவ்வளவிப் பொருளீட்டுதல் வேண்டுமென்னும் உலகியல்பினை உட்கொண்டிருக்கின்றது. ஆதலின் அரசியலில் முதலிலேயே தோற்றுவாய் செய்துகொள்ளப்பட்ட 'நட்பு' என்பது, அதனை விளக்குதற்குரிய இடமாகிய அங்கவியலில் அதன் முதன்மை கருதி மிகவும் விரிவாகவே வைத்து இனிது விளக்கப்படுகிறது.

அங்கவியலில் 'அமைச்சு' என்னும் அங்கம் முதலிற் பத்து அதிகாரங்களால் விளக்கப்படுகின்றது. பின்பு 'குடி' என்னும் அங்கம் 'நாடு' என்னும் ஓரதிகாரத்தாலும், 'அரண்' என்னும் அங்கம் அப்பெயரையே உடைய ஓரதிகாரத்தாலும், 'கூழ்' என்னும் அங்கம் 'பொருள் செயல்வகை' என்னும் ஓரதிகாரத்தாலும், 'படை' என்னும் அங்கம் 'படைமாட்சி' 'படைச்செருக்கு' என்னும் இரண்டு அதிகாரங்களாலும் விளக்கப்பட்ட பின், 'நட்பு' என்னும் அங்கமோ ஏனைப் பதினேழு அதிகாரங்களாற் பற்பல வகையாக விளக்கி அறிவுறுத்தப்பட்டு, அங்கவியல் முடிக்கப்படுகின்றது. 'நட்பு' என்னும் அதிகாரத்தின் தலைப்பில் உரையாசிரியர் பரிமேலழகர் "வினையிடத்து உதவுவதாய நட்பினை ஐந்ததிகாரம் விதிமுகத்தாலும் பன்னிரண்டதிகாரம் எதிர்மறை முகத்தாலுங் கூறுவான்றொடங்கி, விதிமுக அதிகாரம் ஐந்தனுள்ளும் முதற்கண் நட்புக் கூறுகின்றார்" என்று உரைத்திருத்தல் இங்குப் பெரிதும் நினைவுகூர்ந்து தெளிதற்குரியது.

இனி, விதிமுகமாகக் கூறப்பட்ட அவ்வதிகாரங்கள் ஐந்துங்கூட 'நட்பு' 'நட்பாராய்தல்' 'பழைமை' 'தீ நட்பு' 'கூடா நட்பு' என நட்பின் பெயராலேயே அமைந்திருக்கின்றன.

நட்பியல்பு ஒன்றுக்கன்றி திருக்குறள் முழுவதிலுமே ஏனை எவ்வியல்புக்கும் இத்தனை மிகுதியான அதிகாரங்கள் அமைக்கப்படவில்லை. ஆதலாற், பொருள் முயற்சிகட்கு நட்பியல்பே மிகவும் முதன்மையாக வேண்டற்பால தென்பதில்

நாயனார் மிக்க கருத்துறுதியுடையவரா யிருக்கின்றாரென்பது, இவ்வகைகளாலெல்லாம் நன்கு விளங்கக் கூடியதே யாகும்.

அறம் பொருள் இன்பம் என்னும் உறுதிப் பொருள்கள் மூன்றிற்கே யன்றி, வீடுபேற்றிற்குங்கூட இந் நேய நெறியே இன்றியமையாததா யிருக்கின்றதென்பது,

> "பற்றுக பற்றற்றான் பற்றினை'
> 'சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின்"

என்னும் பெருநாவலரது திருமொழியானும்,

> "முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
> பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்"

என்னும் மணிவாசகரது திருவாசகத்தானும்,

> "முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான
> அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம் பொங்கி
> மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
> என்புநெக் குருகி உள்ளத் தெழுபெரு வேட்கையோடு".

என்னும் அருண்மொழித் தேவரது பொருண்மொழியானும் தெற்றென விளங்காநிற்கும்.

எல்லா வாழ்வுகட்கும் நட்பியல்பு இந்துணை அடிப்படையான பெருங்காரணமா யிருந்தலினாலன்றே,

> "நல்லா ரிணக்கமும் நின்பூசை நேசமும்—ஞானமுமே
> யல்லாது வேறு நிலையுளதோ"

என அருணேயப் பெருஞ்செல்வரான பட்டினத்தடிகளும் அதனை முதன்மையாக நிறுத்தி அருளிச்செய்வாராயினர்!

இதுவொன்றோ, மன்பதைகட்கு மிக்க ஆதரவோடு மூதுரையை அருளிச்செய்த ஔவைப் பிராட்டியாரே, ஒரு தனிப்பாடலில்,

> "நட்பும் தயையும் கொடையும் பிறவிக்குணம்"

என்று நட்பியல்பையே முதலில்நினைந்து இயற்கை யுண்மை தோன்ற இயற்றியருளுவராயின், நட்பின் முதன்மைக்கு இன்னும் வேறு சான்றுகளும் வேண்டுங்கொல்! பண்டைக் காலத்துச் செந்தமிழ்ப் புலவர்க்கும் புரவலர்க்கு மிடையில்

மிக வியக்கத்தக்க வகையில் இந் நட்பியல்பு யாண்டுங் கொழுந்தோடி வளர்ந்து நின்று தமிழகத்தைப் பெரிதும் மாட்சிமைப்படுத்தியது; பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழற்கும், பாரி கபிலர்க்கும், அதியமான் ஔவையார்க் கும் இடையே விளங்கிய நட்புத்தான் எத்தகையது! அதனால் இத் தமிழகத்துக்கு உண்டான பெருமை சிறிதேயோ!

இனி, இங்ஙனமெல்லாம் இந்நட்பியல்பு அறம்பொருள் இன்பம் வீடு என்னும் எவ்வகை வாழ்வுகட்கும் வெவ்வேறு நிலைகளில் இன்றியமையாததொன்று யிருப்பினும், நாயனார் அதனைப் பொருட்பாலின்கண் வைத்து விளக்கியிருத்தலால் ஏனை எல்லா வாழ்வுகளையும் ஈனும் அப் பொருள் முயற்சிக் கண் வைத்து அதனை ஆராய்தலே அதன் மாட்சி நன்கு விளங்குதற்கு இடனாகுமென்பதுந் தெளிந்துகொள்ளுதல் வேண்டும். ஆதலால், உலகியலிற் சிறக்க வேண்டுவோர் அனைவரும், அதனினுஞ் செல்வப்பேற்றில் திளைக்கவேண்டு வோர் ஒவ்வொருவரும் தமது வாழ்நாளில் இந் நட்பியல் பினைத் தக்கவாறு போற்றிக்கொண்டு ஒழுகுதல் மிகவும் இன்றியமையாததொன்று யிருக்கின்றது. பிராட்டியார் தமது அழகிய மூதுரையில் அவ்வியல்பினை ஓர் அருமையான திருப்பாடலில் நன்கு அருளிச்செய்திருக்கின்றார். அதன் வடிவம்,

> "அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
> உற்றுழித் தீர்வார் உறவலலர்—அக்குளத்திற்
> கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
> ஒட்டி யுறுவார் உறவு"

என்பது. குளத்தில் நீர் நிறைந்திருக்கும்போது நீர்ப்பறவை கள் குளத்தோடு உறவுகொண்டிருந்து அதன் நீரினால் நல மடைந்து வாழ்கின்றன; அவற்றைப் போலவே அக் குளத் தில் கொட்டி ஆம்பல் நெய்தல் முதலிய பூடுகளும் உறவு கொண்டிருந்து அந்நீரினால் நலமடைந்து உயிர்வாழ்கின்றன. ஆனால், நீர் அற்றபோது, இவற்றின் செயல்கள் வேறுபடு கின்றன. நீர்ப் பறவைகள், வற்றிய அக் குளத்தினின்றும் நீங்கி, நீருள்ள வேறிடங்களை நாடிச் செல்கின்றன. ஆனாற்

கொட்டி முதலிய பூடுகளோ அக் குளத்தில் நீரற்றபோதும் அதனோடு ஒட்டியிருந்தே தாமும் வாடி நிற்கின்றன.

இச் செயல் வேறுபாட்டுக்குக் காரணம் ஒன்று உண்டு. நீர்ப் பறவைகள் குளத்தோடு உறவு கொள்ளாமல் அக் குளத்தின் நீரோடு மட்டும் உறவு கொள்கின்றன. ஆனாற் கொட்டி முதலிய பூடுகளோ, தத்தம் கிழங்குகள் குளத்தின் மண்ணிலும் பதிந்து வேர் வீழ்த்து நின்று அக் குளத்தோடு உறவு கொள்கின்றன. குளத்தில் நீரிருந்தால் அக் கொட்டி முதலியவை தழைக்கும்; நீர் வறண்டால் தாமும் வறளும்; அங்ஙனம் வறளுமாயினும், அவற்றின் கிழங்கு முதலியவை என்றுங் குளத்தோடு உறவுகொண்டிருந்து பின்பு நீர் ஊறு கின்றபோது தாமுங் கிளர்ச்சியுற்று விளங்காநிற்கின்றன; இங்ஙனங் கிழங்கு முதலியவற்றின் அளவாகவேனும் உயிரை வைத்துக்கொண்டு அவை உறவுகொள்வது எவ் வளவு வியத்தற்குரியதா யிருக்கின்றது! ஈதன்றோ உயிர் நேயம் என்பது! குளத்தில் நீர் வறண்ட காலத்தில், பூடு களின் மேனி முதலியன வாடினும், கிழங்கு முதலியவற்றின் அளவாகவேனும் அவற்றின் உயிர்கள் தங்கி யிருக்குமல்லது அவ்வுயிர்கள்தாமும் நீங்கிவிடுமென்பது பெரும்பாலு மில்லை. "யானை படுத்தால் குதிரை மட்டமேனுந் தேறு" மென்னும் முதுமொழிப்படி குளத்தின் நீர் வறண்டாலும் அதன் ஈரம் முதலியனவேனும் அடியில் தங்கியிருந்து அக் கிழங்கு முதலியவற்றி னளவாகவேனும் அவற்றின் உயிர் களைப் பாதுகாத்து நிற்பது குளத்தின் இயல்பாகும். உயி ரிருந்தாற் போதும்; பின் வளங்காணும்போது தழைக்க லாம். இனிக், குளம் என்றும் வற்றியபடியே இருப்பதென் பதும் இயல்பாகாது; நீர் கட்டாயம் மீண்டும் நிறைதலும், கொட்டி முதலியன மீண்டும் தழைத்தலும் ஒருதலை. நட்புச் செய்வார் இவ் வியற்கை யுண்மைகளிலெல்லாம் கருத் தூன்றுவராயின், தமது வாழ்க்கையைத் தழைக்கச் செய் வதற்காக அவர் எவரும் தம் நட்பினைக் கெடுத்துக்கொண்டு யாண்டும் நீங்கிச் செல்வாரல்லர். ஒன்றியிருந்தே ஏற்ற முயற்சிகளைச் செய்து உரிய காலம் வரும்போது நலமுறுவர்.

குளம் என்பது நண்பர்க்கும், நீர் என்பது அவரது செல்வத்துக்கும், நீர்ப்பறவையும் கொட்டி முதலியவையும் அந் நண்பரோடு தொடர்பு கொள்வோர்க்கும் உவமை.

தீ நட்பை விடுக வென ஆன்றோர் யாண்டும் பணித்தனரல்லது, வளமிலோரை விடுக வென உரைத்தனரல்லர். ஆனல் அதற்கு மாருக எத்தனை இடர் வரினும் நட்பினை விடற்க எனவே அவர் அறிவுறுப்பாராயினர்.

" நிலம்புடை பெயரினும நீர்திப் பிறழினும்
இலங்குதிரைப் பெருங்கடற் கெல்லை தோன்றினும்...
கேடு எவன் உடைத்தோ? தோழி !...
ஓங்குமலை நாடனெடு அமைந்தநம் தொடர்பே."

—குறுந்தொகை, நஎஅ.

" சென்றோர் முகப்பப் பொருளுங் கிடவாது ;
ஒழிந்தவ ரெல்லாரும் உண்ணுதுஞ் செல்லார்...
ஒரோ ஒகை தம்முள் தழீஇ ஒரோஒகை
ஒன்றன் கூறுடை உடுப்பவரே யாயினும்
ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை "

—பாலைககலி, கஅ.

" எந்தை வாழி ஆதனுங்க! என்
நெஞ்சம் திறப்போர் நின்காண் குவரே ;
நின்னியான் மறப்பின் மறக்குங் காலை
என்னுயிர் யாக்கையின் பிரியும் பொழுதும்
எனனியான் மறப்பின் மறக்குவென் "

—புறநானூறு, கஎரு.

என்னும் பழந்தமிழ்ப் பொருளுரைகள் போல்வன இங்கு நினைவுகூரற்பாலனவாகும்.

நட்புக் கழன்றபின் முன்போற் கூடுதலென்பதோ அரிது.

" நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய் !
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற
புல்லினுந் திண்மைநிலை போம் "

என்னும் நன்னெறி இன்னுரையில் இவ்வியல்பு நன்கு விளக்கப்படுகின்றது. உண்மைகளெல்லாம் இவ்வாறு இருத்தலாலன்றே,

"போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை"

என்று கலித்தொகைச் செம்மொழி துணிபாகக் காட்டவிடுவதாயிற்று.

இனி, இடருறு நேரத்தும் ஒட்டியுறுவாரை ஆசிரியர் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் என முத்திறப்படுத்துதலும் உன்னற்பாலது. கொட்டி முதலிய பூடுகள் மூன்றும் குளத்து நிலத்தில் வேர் வீழ்த்து நிற்பனவாயினும், கொட்டிப் பூடு நீருற்றபோதும் பெரும்பாலும் நிலத்தினளவாகவே நின்று வளமுறுவதாகும். நெய்தல் பெரும்பாலுங் கரையோரங்களில் ஓரளவு வளர்ந்து வளமுறும். ஆனால் ஆம்பற் பூடுகளோவெனின் "நீரளவே யாகுமாம் நீராம்பல்" என்றபடி நீரினளவுக்கு ஏற்றபடி உயர்ந்து வளர்ந்து செழுமையுறுவதா யிருக்கின்றது. கொட்டியும் ஆம்பலும் நெய்தலு மென இம்மூன்றும் முறையே மனைவியும் மக்களும் சுற்றமும் போன்று விளங்குகின்றன. குடும்பத்திற் செழுமை எவ்வளவிருப்பினும் மக்கள் ஒக்கல் முதலியோர் நன்கு நுகர இடஞ் செய்து, மனைவி ஓரளவுக்கே வளமுற்றுத் திகழ்கின்றனள். மக்கள், செழுமையின் அளவுக்கேற்பத் தாமும் உயர்ந்து வளமுற்றுத் தழைத்து மலர்ந்து மணங்கமழ்ந்து விளங்குகின்றனர், ஒக்கல், சுற்றிலுமிருந்து ஓரளவு நலமுறுகின்றனர். இவரனைவரும் ஒருவர்க்கு நீங்கா உறவினரேயாவர்.' இனி, ஏனை நண்பர்களிலும் இவரனையர் உளர்; பொருண் முயற்சியிற் சிலர் ஓரளவே செல்வம் பெறுதலும், சிலர் சிறிது கூடப் பெறுதலும், மற்றுஞ் சிலர் மிகப் பெறுதலும், அவ்வவற்றிற்கேற்ப அவரவர் தழைத்தலும் நேரலாம். ஆயினும், மனைவிக்கு உரிய உறவின் அழுத்தம், மக்கள் ஒக்கல் முதலியோர்க்கு முறையே இல்லாமை போல, உறவென்பதைப் பொருள் பெற்றுத் தழைக்கும் அளவாகவே கொள்ளுதல் ஒவ்வாது; இங்ஙனமெல்லாமுள்ள இயற்கை நிலைகளை உன்னி ஆராய்ந்து, யாண்டும் எந் நிலையிலும் நட்புக் கெடாமல் நின்று 'உறுதிச் சுற்ற'மாய் ஒழுகுதலே பொருண் முயற்சி செய்வாரது முதற்கடமையாகும் என்பது.

குணம் :

ஔவைப் பிராட்டியார், மூதுரையின் கடவுள் வாழ்த்துச் செய்யுளில், 'நல்ல மனமுண்டாம்' எனக் குறித்தருளிய நற்குண நற்செயல்கள்பற்றியும் இனி ஆராய்ந்து தெளிதல் நமது கடமையாகும்.

ஊன்றி நோக்கினால், மக்கட்கு நற்குண நற்செயல்களே இயல்பானவை என்பது திட்டமாகத் தெரிகின்றது. "நல்லவை செய்யின் இயல்பாகும்" என்று நாலடியார்ச் செய்யுளும் ஒன்று உண்டு. மக்கள் இவ்வியல்பினைத் தாமே செயற்கையாக மாற்றிக்கொண்டு அவாக் காரணமாகத் தீயராய் ஒழிதல் மிகவும் இரங்குதற்குரியதாகும். உலகியற்கையில் தக்க தெளிவின்மையே இதற்குக் காரணம் என்று தெரிகின்றது. ஔவையார் எதனையுங் காரணங் கண்டு அறிவுரை பகரும் நுண்ணறிவினராதலின், உரிய அடிப்படையின்மேல் இரண்டு செய்யுட்கள் மூதுரையின்கண் அருளிச்செய்திருக்கின்றார். அவை :

> " ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
> நாழி முகவாது நானாழி — தோழி
> நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம்
> விதியின் பயனே பயன் "

என ஒன்றும்,

> " எழுதியவா றேகாண், இரங்குமட நெஞ்சே !
> கருதியவா றாமோ கருமம் — கருதிப்போய்க்
> கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்,
> முற்பவத்திற் செய்த வினை "

என மற்றொன்றுமாம்.

நீரின்வழியே தெப்பம் செல்வதுபோல மக்கள் வாழ்க்கை ஊழின் வழியே நடைபெறுதற்குரியது. உலகத்திற் பேறுகள், நிலைக்குமேற் கிடைக்கமாட்டா என்பதும்; பேறுகள் கிடைத்தாலும் மக்கள், நிலைக்குமேல் அவற்றின் நுகர்ச்சியினை எய்தப்பெறார் என்பதும் முதற் பாட்டின் முற்பகுதி பிற்பகுதிகளில் முறையே அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. ஆதலாற், கருதியவாறெல்லாம் கருமம் கைகூடு

வது அரிதாதலுடன், ஊழ் மக்கட்கு அவரது நன்முயற்சி
யின் வாயிலாகவே தீமை பயப்பித்தலும் உண்டு என்னும்
அறிவிப்பும் இரண்டாம் பாட்டின் முற்பகுதி பிற்பகுதிகளில்
நன்கு புலப்பட் டிருக்கின்றது.

இங்ஙனம், முற்பிறவியிற் செய்த வினையே எல்லாவற்
றிற்குங் காரணம் என்னும் அடிப்படையான உண்மையை
மக்கள் தெளிவாக அறிந்துகொண்டார்களானால், இப் பிறவி
யில் எதன்பொருட்டும் அவர், தமக்கு இயற்கையே உரிய
நற்குண நற்செயல்களினின்றும் மாறித் தீயன செய்ய
முற்படார்.

இதனை நன்கு வரையறுத்துக் கொண்டபின், மக்களிற்
பெரும்பாலார் இந் நிலையில் நில்லாமல் உலக வேட்கை ஏது
வாக வழீஇச் செல்லுதலால், அவர்பொருட்டு இரக்கம் மிக
உடையராய் ஔவையார், அவரை நல்லாரொடு கூட்டுதற்கு
விழைந்து, நல்லாரிணக்கத்தின் மேன்மையும், அவரியல்பும்,
அவர்க்கு உதவுதலும், அவரால் உலகுக்கு உண்டாகும் ஆக்க
மும் எனப் பலவும் விளக்கி யருளுகின்றார்.

நல்லாரைக் காண்டலளவானும் நன்மையுண்டு என்னும்
மேதக்க உண்மையை "நல்லாரைக் காண்பதுவும் நன்றே"
என்னுந் திருமொழியினாற், பெருமாட்டியார் அறிவுறுத்துத
லும் சாலப் பொருளாழ முடையதாகும். நல்லாருடம்பி
லிருந்து நாலாபக்கமும் ஊடுருவி விளங்கும் அருளொளி
யானது, கண்ணுக்கெட்டிய தொலைவில் நின்று காண்பார்தம்
உடம்பின்கண்ணும் சுவறி நலம் பயக்குமாதலின்,
வாளாக் காண்டலளவானும் நன்மை யுண்டு என்பது மிக்க
உரனுடைய அறிவுரையாகவே மிளிர்கின்றது. காண்டலின்
நன்மையே இங்ஙனமாதலின், அவர் சொற் கேட்டலும்,
அவர் குணங்கள் உரைத்தலும், அவரோடு இணங்கியிருத்த
லும் எத்துணையோ நலம் பயக்கு மென்பதை அதிலிருந்தே
எளிதின் விளங்குமாறு முறைமுறையே நிறுத்தி அவர் அறி
வுறுப்பாராயினர். தீயாரைக் காண்பது முதலாயின இதற்கு

நேர்மாறுய்த் தீமை பயப்பதாகும் என்பதும் அவரால் "தீயாரைக் காண்பதுவும் தீதே" என்னுஞ் செய்யுள் வாயிலாக உடன் எடுத்து விளக்கப்பட்டுள்ளது. இவ் விருவரையும்பற்றி நுவலுமிடத்துப் பிராட்டியார், 'நலமிக்க நல்லார்' எனவும் 'திருவற்ற தீயார்' எனவும் முறையே அருளிச் செய்து, நலமுடைமையும் திருவுடைமையும் நல்லாரிடமே உரிமையோடு விளங்குவன என்னும் உண்மையை நன்கினிது விளங்கச் செய்திருக்குந் திறமும் பெரிதும் நினைவுகூர்ந்து கருத்திருத்தி இன்புறுதற் குரியதாகும்.

இனி, இங்ஙனந் தீயோரை விலக்கி, நல்லவர்பால் இணக்கங் கொள்ள வேண்டும் என்றதற் கேற்ப, நல்லார் இயல்புகள் இத்தகைய வென்பது, 'அட்டாலும் பால் சுவையில்' 'சீரியர் கெட்டாலும்' 'சந்தன மென்குறடு' 'கற்பிளவோ டொப்பர்' 'சாந்தனையும் தீயனவே' என்னும் ஐந்து செய்யுட்களிற் பற்பல வகையில் வைத்து மிக அருமையாக அருளிச் செய்யப் படுகின்றது.

நல்லோரியல்புகளை முதன்மையாக மூவகைப்படுத்தி ஔவைச் செல்வியார் விளக்கியருளுவர். தம்மைப் பிறர் பகைத்து நெருக்கினாலும், கெடுத்தாலும், தாம் வறுமையுற்றாலும், நிலைகுலைந்து உயிர்துறக்கும்படி நேர்ந்தாலும் நல்லோர் தமது பெருந்தன்மையாகிய குணமாட்சிமையிற் சிறிதுங் குறையாதிருத்தல் ஒருவகை இயல்பு. தம்மைச் சூழ்ந்திருப்பவரான உலகமக்களின் அறியாமையினால் ஒரோவொருகால் நமக்குச் சிறிது சினம் எழுவதாயினும், அது பகைமைக்குச் சிறிதும் இடனின்றி அருள்காரணமாக அந்நொடியே முழுதும் மறைந்து மாறிவிடுதல் மற்றொருவகை நல்லியல்பு. இனி, உலகத்திற் சிலர் தந்நலக் கருத்தால் நேருக்குநேராகவே தமக்குத் தீங்கு செய்தாலும், அதனை அவர் தாம் இறக்குந்தனையுஞ் செய்தாலும், தமது உயிர்க்கே ஊறுசெய்தாலும் தாம் திருப்பி ஊறு செய்யாமையோடு, தாம் உயிர் விடுந்தனையும் அவர்க்கு ஆதரவும் உதவியுமாயிருந்து நலமே புரிந்துவருதல் இன்னொரு வகையான தலைசிறந்த நல்லியல்பாகும்.

குணம் குறையாமை, செற்றம் நிகழாமை, ஆதரவு கெடாமை என மேற்காட்டிய இம் மூவகை நல்லியல்புகளுள் முதல் வகையினை ஔவைச் செல்வியார்,

"அட்டாலும் பால்சுவையிற் குன்றாது ; அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர் ;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்"

"சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடாது ; ஆதலால், — தம்தம்
தனம்சிறிய ராயினும் தார்வேந்தர் கேட்டால்
மனம்சிறிய ராவரோ மற்று"

"சீரியர் கெட்டாலும் சீரியரே ; சீரியர் மற்று
அல்லாதார் கெட்டால்அங்கு என்னாகும் ? — சீரிய
பொன்னின் குடம்உடைந்தால் பொன்னாகும்; என்னாகும்
மண்ணின் குடம்உடைந்தக் கால்"

என்னும் இன்சுவைப் பாக்களால் இனிதெடுத்து ஓதுவர். இரண்டாம் வகையினைக்,

"கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே — விற்பிடித்து
நீர்க்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்"

என்னும் பொருண்மொழிச் செய்யுளாலும்,
மூன்றாம் வகையினைச்,

"சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம்அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் — மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்"

என்னும் அருஞ்செயற் செய்யுளாலும் விளக்கி அறிவுறுப்பர்.

முதல் வகையாகிய நல்லியல்புக்குப் பிராட்டியார் மூன்று திருப்பாட்டுகள் அருளிச் செய்தது அதன் முதன்மையினை நன்கு வற்புறுத்திக் காட்டுவதா யிருக்கின்றது.

பாலைக் காய்ச்சுதலாவது, அது தனது துணையாகிய நீரைப் பிரிந்து கொதிப்புக்கொள்ளும்படி அதன் பகை

யாகிய தீயினால் நெருக்கப்படுதலாகும். நல்லோரைப்*பிறர் பகைத்து நெருக்குதற்கு இஃது எடுத்துக்காட் டாயிற்று. நட்புக்கு உரியரல்லாதார் அளவளாய் மனங்கலந்து பழகினாலும் நண்பராகார்; ஆனால், பகைத்து நெருக்கினாலும் நல்லோர் தமது இனிமையிற் குறையார் என்று விளக்கிய படியாகும்.

'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே' என்ற விடத்தும், 'சீரியர் கெட்டாலும்' என்றவிடத்தும் கெடுதல் உயிரை இழத்தல் என்னும் பொருட்டாகும். அவற்றிற்கு இப் பொருட்பேறு, அவற்றை அடுத்துவரும் உவமங்களாலும் இனிது விளங்குகின்றது; இவை, பிறர் பகைத்துக் கெடுத்தாலும், அல்லது தாம் நிலைகுலைந்து உயிர் துறக்கும் படி நேர்ந்தாலும், நல்லோர், தம் மாட்சி குறையாமைக்கும். பயன் குறையாமைக்கும் காட்டாயின.

'சந்தன மென்குறடு' என்னுஞ் செய்யுளால், அளவு தேயினும் இயல்பு தேயாத வறுமையிற் செம்மை இனிது விளக்கப்பட்டிருக்கின்றது.

இனி, இரண்டாம் வகையினை விளக்குவதாகிய 'கற் பிளவோ டொப்பர்' என்னுஞ் செய்யுள், பொதுவாக மக்களைத் தலைமக்கள் இடைமக்கள் கடைமக்கள் என மூவகையிற் பாகுபடுத்திக் கொண்டு, அவருள், கடைமக்களானோர் கடுஞ்சினங் கொள்ளுமிடத்து, ஒரு கல் இரண்டாகப் பிளந்து மீண்டும் கூடாமைபோலப் பகைத்து வேறு வேறாவர் எனவும், இடைமக்கள் அங்ஙனங் கடுஞ்சினங் கொண்டனராயினும், ஒரு பொன் துண்டு இரண்டாகப் பிளந்து பின் உருக்கிக் கூட்டுமிடத்துக் கூடிவிடுதல் ஒப்பச் சினம் மறந்து திரும்பவுங் கூடும் இயல்பினர் எனவும், தலைமக்களானார் ஒரோவொருகாற் சிறிது சினம் எழப் பெறுவராயினும், ஒரு வில்லைக் கையிற் பிடித்து நீரைக் கிழிக்க உடனே அதன் வடுத் தெரியாது மாறிவிடுதல்போல உடனே அச் சினம் மாறி அமைதியும் அருளுங் கொள்ளு நிலையினர் எனவும் அவரவரியல்பினை விளக்கிச், செற்றம்

சிறிதும் நிகழாத நல்லோர் மாட்சியினை இணையற்ற நிலையின் வைத்துத் தெளிவாக அறிவுறுத்திற்று.

'சாந்தனையும்' என்னுஞ் செய்யுளில், 'ஆந்தனையும்' 'குளிர் நிழல்' 'மறைக்கும்' என்னுஞ் சொற்கள் பொருளூற்றுடையவை. 'மறைக்கும்' என்னுஞ் சொற்குறிப்பினால் தமக்குப் பிறர் செய்யுந் தீமைக்கு வருந்தாது பொறுத்து அவர்க்கு ஆந்தனையும் சாந்தனையு நன்மைபுரிந்து காத்தலோடு, அவருடைய தீச் செயல்களைப் புறத்தார்க்குப் புலப்படுத்தாது மறைத்து மறந்துவிடுதலாகிய இணையற்ற பெரும்போக்கும் பைய வெளிப்படுகின்றது.

ஔவைப் பெருமாட்டியார் நல்லோரியல்புகளை விளக்கும் இச் செய்யுட்களில், அந்நல்லோரை 'மேன்மக்கள்' 'தார்வேந்தர்' 'சீரியர்' 'சான்றோர்' 'அறிவுடையோர்' எனப் பலவகையாகப் பொருட்குறியீடு தந்து பாராட்டி அவர் அறிவும், அமைதியும், ஒழுங்கும், வளமும், பெருந்தன்மையும் உடையாரென்னும் உண்மையை இனிது விளக்கி, அம் மேன்மைப் பண்புகளே அவர் இங்ஙனமெல்லாம் நன்முறைமையில் ஒழுகுதற்கு ஏது எனப் புலப்படவைத்தருளிய திறனும் கண்டுப் பெரிதும் அறிந்து இன்புறுதற்குரியது ஆம்.

இனி, அத்தகைய மேலோர்க்கு ஒன்று உதவுதல்பற்றியும் மூதுரையில் இனிய விளக்கங்கள் தரப்படுகின்றன. ஔவையார் தருங் கருத்துக்கள் பின்வருமாறு :

பொதுவாக நன்மை செய்தல் என்பது எஞ்ஞான்றும் வீண் போகாது. செய்த நன்மை, பயன் தருதற்குரிய காலத்தில் மிக்க தகுதியோடும் பின்னும் மாட்சிமையோடும் வந்தெய்துதலே இயல்பானது. தென்னங் கன்றின் தாளில் விட்ட நீர் சிலகாலத்தில் தூய இன்னீராய் அதன் தலையிலிருந்து கிடைத்துவிடுகின்றது. இதனை இயற்கையில் யாவரும் அறிவர்; ஆதலால், நன்றியொருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி என்று தருங்கொல் எனக் கவலை கொள்ளுதலே வேண்டாம்; கிடைத்தல் திண்ணம்.

அதுவும், நல்லாரொருவர்க்குச் செய்த நன்றியாயின் கன்மேல் எழுத்துப்போல் என்ஞான்றும் அழியாமல் விளங்கிக்கொண்டிருந்து தக்க காலத்தில் தக்க பயனைக் கட்டாயம் தருமென்று இன்னும் உறுதியாக நம்பலாம்.

உலகத்திலுள்ள மக்களை. நல்லோர் என்றும், தீயோர் என்றும், பொதுமக்களென்றும் மூன்று வகையாகப் பகுத்தறியலாம். நண்பர், பகைவர், அயலார் என்னும் பாகுபாடும் இம் மூன்றுவகையிலும் முறையே அடங்கும். பொதுவாக நல்லோரும் தீயோருமல்லாத பொதுமக்களுக்கே ஒருதவி செய்யினும், அதுமட்டும் நற்செயலாயிருக்குமாறால், அது தன் பயனை என்றேனும் மாட்சிமையோடு தருதல் உறுதி. இவ்வுண்மையே முதற்கண் விளக்கிக்கொள்ளப்பட்டது. அந் நன்றி, நல்லோர்க்குச் செய்வதாயிருந்தால் அஃது இன்னும் உறுதியாய்க் கன்மேல் எழுத்துப்போற் காணும் என அடுத்து அறிவுறுத்தப்பட்டது. ஆனால், தீயோர்க்குத் தீமையன்றி நன்மையே செய்யினும், அது நீர் மேல் எழுத்துக்கு நேராய் வீணாய் விடுகின்றது; வீணுதல் மட்டுமன்றி, அந் நன்மையே தீமையுருவாய்த் திரும்பி, வேங்கை வரிப்புலியின் நோய்தீர்த்த நச்சு மருத்துவன் அவ் வரிப்புலிக்கே இரையானாற் போலவும், கல்லின்மேல் இட்ட மட்கலம் உடைந்து உருக்குலைந்து போனாற்போலவும் உயிர்க்கே ஊறுதருவதாய் முடிந்துவிடுகின்றது. (கரு). ஆதலால், ஏதானும் நன்றி செய்வதாயின் அந் நன்றியினை நல்லராயினாரைத் தெரிந்து அவர்க்குச் செய்தலே உலகுக்கும் தமக்கும் நலம் பயப்பதாயிருக்கும் என்பது.

ஔவைச் செல்வியார், முடிந்த பொருளாக உலகவர்க்கு நல்லோரைப்பற்றி அறிவுறுக்கும் மெய்ப்பேருண்மை, என்ஞான்றும் நினைந்து நினைந்து காத்துப் போற்றுதற்குரிய பெருமைப்பாடுடையது. நல்லோர் இங்ஙனமெல்லாம் இணக்கத்திற்கு உரியவராய் ஏற்ற மேன்மைப் பண்புகள் வாய்ந்து ஏனையோரால் போற்றி நன்றி செயப்பெறுதற்குரிய தகுதியிற் றிகழ்தலின், அத்தகைய நல்லோரே எல்லா

உலகமக்களின் நல்வாழ்வுக்குங் காரணராயிருக்கின்றனர் என்பது.

> "நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
> புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்லுலகில்
> நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
> எல்லார்க்கும் பெய்யும் மழை."

உண்மை இங்ஙனமிருத்தலின், கல்வியும்பொருளும் உலகில் நற்குண நற்செயல்கள் பெருகித் தழைத்தற்குக் கருவியாதலின், அவ்வாற்றால் நல்லுணர்வுகளை யாண்டும்விளைத்து நிலைபெறச் செய்யுஞ் சான்றோர்களை, நாட்டில் அங்கங்கும் இருத்திப் போற்றிக்கொண்டு உலகவர் நலம்பெறல் வேண்டுமென்பது இனிது விளங்குகின்றது.

# ௪. நல்வழி

தமிழ்நாட்டின் இயற்கை அறிவுநலம், அதன் தமிழ் மொழியினாலும் அம்மொழியின்கண் இயற்றப்பட்டுள்ள பல வேறு வகையான அறிவுநூல்களாலும், பழக்கவழக்கங்களாலும் இனிது புலனாகின்றது. மொழியின் இயல்பினையும் பழக்கவழக்கங்களையும் நூல்கள் ஏற்று விளங்குதலால், அவை யொன்றேயும் நாட்டின் நலத்தினைப் புலப்படுத்துதற்குப் போதியவாய், இறவாத அடையாளங்களாய்த் திகழ்ந்து வருகின்றன. அவ்வகைப்பட்ட இறவாத அடையாளங்களுள், ஔவைச் செல்வியின் அழகிளம் நூல்கள், துவக்கத்திலேயே காட்சியளித்து மிளிர்தல் சாலவும் அறிந்து இன்புறுதற்குரியதாகும்.

'ஆத்தி சூடி.' 'கொன்றை வேந்தன்' என்னும் இரு நூல்களும் சிறிய சிறிய தொடர்களாலானவை; 'மூதுரை'யும் 'நல்வழி'யும் வெண்பா என்னும் செய்யுட்களாலானவை. 'ஆத்தி சூடி'யிற் குறித்த அறிவுரைகளைக் 'கொன்றைவேந்தனி'ற் காரணங்களுடன் விளக்கி அம்மையார் பின்னும் மாட்சிமைப்படுத்தி யிருக்கின்றனர். 'மூதுரை'யிற் குறித்த பொருண்மொழிகளை 'நல்வழி'யில் அருட்போக்குடன் விளக்கி மிகவும் நுட்பதிட்பமாக்கி யிருக்கின்றனர். ஆதலின், இந் நான்கு நூல்களுள், முன்னிரண்டும் ஓரினமும் பின்னிரண்டும் வேறோரினமுமாகக் காணப்படும்.

இவைதம்மில் மற்றோருண்மையும் அறிந்துகொள்ளல் வேண்டும். அது; ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்னும் அமிழ்த நூல்கள் நான்கும் முறையே குழந்தைப் பருவம், இளந்தைப் பருவம், காளைப் பருவம், மூப்புப் பருவம் என்னும் நால்வகைப் பருவங்களின் சிறப்பியல்களை உட்கொண்டு அவ்வவற்றிற்கேற்ப எழுந்துள்ளன என்பது.

முறைமுறையே உயர்ந்த வகுப்புக்களிற் பயிலும் பள்ளிப் பிள்ளைகளின் தகுதிக்கேற்ப அவர்கள் மனப்பாடஞ்

செய்து பயிலும் வகையில், முறையே சிறுமையும் பெருமையும் பருமையும் நுட்பமுமான தொடர்களாலும் செய்யுட்களாலும் இவற்றை ஔவையார் அருளிச்செய்திருக்கும் வகையிலேயே, மேற்காட்டியபடி, பருவத்திற்கேற்ற சிறப்பமைப்புக்களும் பொருந்திநிற்றல் ஓர் அருந்திறன் ஆகும்.

'நல்வழி' என்பது முற்றிலும் அருளியல் தழீஇய உண்மை மறைநூல். அருள்நெறி, திருநெறி, பெருநெறி, ஒருநெறி, மறைநெறி, சிவநெறி முதலிய குறியீடுகளாலும், 'சன்மார்க்கம், நன்மார்க்கம்' முதலிய பிற குறியீடுகளாலும் உணர்த்தப்படும் உண்மை வழியையே, 'நல்வழி' என்னுந் திருப்பெயரால், தெய்வப்புலமை ஔவையார் இச்சிறு முதுநூலாக அருளிச்செய்திருக்கின்றனர். 'சன்மார்க்கம்' அல்லது 'உண்மைநெறி' என்னும் அரும்பெயர் அருணெறியை 'நல்வழி' என்னும் விளங்கிய குறியீட்டினுற் பிராட்டியார் அருளிச்செய்கின்ற இத் தெய்வத் திருநூலின் முகப்பினில்,

> " பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
> நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலம்செய்
> துங்கக் கரிமுகத்துத் தூமணியே ! நீஎனக்குச்
> சங்கத் தமிழ்மூன்றும் தா "

என்னும் அழகிய கடவுள் வாழ்த்துச் செய்யுள் விளங்கிக் கொண்டிருக்கின்றது. அருணெறியை விளக்கிச் செல்லும் இந்நூலின் முகத்தில், "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்னும் வேண்டுகோளினை அம்மையார் விரும்பி நிறுத்துதலால், அருணெறிக்கும் சங்கத் தமிழ்க்கும் நிரம்ப இயைபுண்டென்பது நன்கு விளங்குகின்றது. மேலும், உடம்பு உயிர் வாழ்க்கைக்குப் பயன்படக்கூடியமிக்க இனிப்பும்உய்வுறைக் கருக்களும் நிரம்பிய பாலையும் தேனையும் பாகையும் பருப்பையுங் கலந்து கொடுத்துவிட்டு, அதற்கு ஈடாகச் சங்கத் தமிழினைப் பெற ஔவையார் விரும்புவதிலிருந்தே, அந்தத் தமிழ், ஞானவாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய மிக்க இனிமையும் உறுதிப் பொருள்களும் உடையதென்பது பெறப்படும். சங்கத் தமிழ் நூல்கள் என்பன. இதனால்,

நமது செந்தமிழ்த் திருநாட்டின் மறைஞான முதல் நூல்கள் என்பதும் விளக்கமாம். அத்தெய்வச் சங்கநூல்களை அடிப்படையாகக் கொண்டு, அவற்றின் மெய்க்கருத்துக்களைப் பிழிசாறாகப் பிழிந்தெடுத்து அம்மையார், 'நல்வழி' என்னும் நாற்பதே செய்யுட்களுடைய இவ் வருணூலினை நமக்கு வழங்கியிருக்கின்றனர்.

சங்க நூல்கள் மிகப் பெரிய தமிழ்க்கடல். அதனி லிருந்து பிற்காலப் புலனெறி வழக்குகளாகிய பற்பல கருமுகில்கள் மேலெழுந்து, காலந்தோறும் இனிய உலகியல் வழக்குகளாகிய இன்னீர் பெய்து, பற்பல நறுநூல்களாகிய நீர்நிலைகளாய் ஒழுகி, இத் தென்னாட்டு நன்மக்களின் வாழ்க்கைப் பைங்கூழை வளர்த்துவந்திருக்கின்றன. நல்வழியும் அவ் வகையினில் அமைந்த ஓரினிய சிற்றாறலாகும்.

ஔவைப் பிராட்டியார்க்கு இங்ஙனங் கருத்துண்மை, அவர் இந்நூலின் இறுதிச் செய்யுளிலும்,

> "தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
> மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
> திருவா சகமும் திருமூலர் சொலலும்
> ஒருவா சகம்என்று உணர்"

எனச் சங்கத் தமிழ் முதல் பிற்காலத் தமிழ்கள் பலவும் ஓரியைபுடையனவே எனக் கட்டளையிட்டு அருளிச்செய்திருத்தலினின்று தெற்றெனப் புலனாகின்றது. இங்ஙனம் 'நல்வழி' என்னும் இந்நூலின் முதலிலும் முடிவிலும் பிராட்டியார் சங்கத் தமிழ்க்கு ஒரு முதன்மை தந்து அமைத்துக்கொள்ளுதலாலும், தேவார திருவாசக முதலிய திருநெறித் தமிழ்களோடு அதனை இயைத்து மொழிதலாலும், 'நல்வழி'யின் இடைப்பகுதியில் அவர் விளக்கி அறிவுறுத்துதற்கு எடுத்துக்கொண்ட பொருளும் சங்கத் தமிழின் வழியவான ஞான உண்மைகளேயாதல் ஐயுறவின்றி இனிது தெளிந்துகொள்ளப்படும்.

தமிழ்நாட்டின் அமிழ்த உள்ளம், தக்க தமிழ் நூல்களிலெல்லாம் நன்கு விளங்கித் தெரிகின்றமைபோலவே,

அம்மையார் நூல்களிலும் அது மிக அழகாக நிழலாடித் தெரிகின்றது. தமிழ்மக்கள் மிகப் பழமையதான நாகரிக நலம் உடையவர்கள். காலந்தோறும் வளமுடையராய் வாழ்ந்து உலகியலினை நன்கறிந்தவர்கள். பல தலையான கடலூழிகள், அரசு வேறுபாடுகள், நாட்டின் பெருக்க சுருக்கங்கள், பன்னாட்டு மக்களின் இணைவு பிரிவுகள், அவ்வந் நிலைக்கேற்ற பழக்க வழக்க வாழ்க்கை மாறுபாடுகள் முதலிய இயற்கை செயற்கை நிலையாமைகளையும், அதனால் வளர்ந்துவந்த திருவருட் பேறுகளாகிய ஞான உண்மைகளையும் நிலையிட்டுக் கண்ட மெய்யுணர்வுடையோர். ஆதலால் அவர்கள் திருவுள்ளம், உலகவர்க்கே மெய்வாழ்க்கை பயப்பிக்கும் அருட்பேரமிழ்தமாம் என்க. அஃது ஔவை நல்வழியிற் பின்வருமாறு ஒளிமெருகு பெற்று மிளிராநிற்கின்றது.

உலகியலும் அருளியலும்:

மக்கள் முதல் எல்லா உயிரினங்களும், உலகத்திற் பிறந்து அதன் இயற்கை நிகழ்ச்சிகளிற் படிந்தே தத்தம் வாழ்க்கை முன்னேற்றங்களை அடைந்துவரக் காண்கின்றனம். ஆதலால், உலகியற்கை என்பது, உயிர்களின் முன்னேற்றத்திற்குரிய நெறியாகவே தோற்றுகின்றது. தோன்றவே, உலகியலும் அருளியலும் தம்முள் ஒற்றுமையும் தொடர்பும் உடையன வென்பதும் இதுகொண்டு துணியப்படும். அருளியலின் மறுவடிவமே உலகியலும் உலகாட்சியும் என்க.

உலகியற்போக்கின் மறைபொருளுண்மை இங்ஙனமாதலின், இந் நுண்பொருளுணர்ந்தோர் அருளியன் முறையாகவே உலகியலையுங் கண்டு ஒழுகிப் பயனுறுவர். அல்லாதார் உலகியலின் அருளியல் தேறாது வெற்று உலகியலாளராய் வீண்படுவர்.

உலகத்தில், உயிர்களின் அறியாமை தேய்ந்து அறிவு துலங்குதற்குப் பசி, காமம் என்னும் இருவகை உந்துதல்

இயற்கையில் உள்ளன. இவ் விருவகை உந்துதலாகிய இயற்கைச் சூழலில் உயிர்கள் அலைக்கப்பட்டுப் பலவேறு வகையாக உலகில் உயிர்வாழ்ந்து வருகின்றன. அப்போது அவ்வுயிர்களின் அறிவும், அவ்வுயிர்களை இயற்கையே பற்றிய அறியாமையும், இறைவன் அருளும் ஒருங்கே கிளர்ந்தெழுந்து தத்தம் ஆற்றல் தோன்ற ஒன்றோடொன்று உரைசி நிற்கின்றன. அந் நிலையில், உயிர்களின் அறிவு மிகுதியாக விளங்காதிருக்குமாயின் அறியாமையிற் சிக்கி உழலும்; மிகுதியாக விளங்கிவிட்டதாயின் அருளிற் றொடர்ந்து மிளிரும். அறியாமையிற் சிக்கியுழலும் நெறியே வெற்று உலகியல் எனவும், அருளிற் றொடர்ந்து மிளிரும் நெறியே அருள் உலகியல் எனவும் நுவலப்படும். உயிர்களின் அறிவு நன்கு விளக்கமுற்று அருளிற் பிறங்கும் திருநெறியே 'அருளியல்' என்னும் பெயர்க்கு முற்றும் உரித்தாகும். ஔவையார் இங்ஙனம் உலகியலை அருளியலாகக் காணும் நன்னெறியையே 'நல்வழி' எனக் குறியீடு தந்து இச் சிறுபெரு நூலில் நன்கு விளக்கியருளுவர்.

உலகியலின் அடிப்படை யுந்துதல் பசியுங் காமமுமாதலின், அவ் விரண்டையும் பற்றி அம்மையார் தக்க கருத்துக்களையும் நெறிமுறைமைகளையும் இதன்கண் திறமாக வழங்குகின்றனர். காமம் பசிவந்திடப் பறந்துபோம் இயல்பினதாகலின், அதைப்பற்றி இரண்டொரு குறிப்புகளே அவர் தந்து செல்லுதலின், அதனை முதற்கண் விளக்கிக் கொண்டு மேற்செல்லுவோம்.

காமம் என்பது காதற்காமம் எனவும் காமக்காமம் எனவும் இருவகைப்படும். காதற்காமமாவது, ஆண்மை பெண்மையையும் பெண்மை ஆண்மையையும் ஒத்த உள்ளத்துடன் விரும்பி அன்பினால் இன்பமுறுவதாகும். அங்ஙனம் இன்பமுறுவோரே கணவனும் மனைவியும் எனப்படுவர். இவ் வின்பமுறை முதன்மையாக உயிர்த்தொடர்புடையதாகலின், இது, கணவன் மனைவி என்னும் இருவரது உயிர் வாழ்க்கை வளர்ச்சிக்கும், அவ்விருவர் வழியாகத் தோன்றும்

அரும்பெறல் மதலைகளின் உயிர்வாழ்க்கை வளர்ச்சிக்கும் பெரிதும் ஆக்கமுடையதாய்ப் பயன்படும். ஔவையார் இதனுன்,

"மடக்கொடி இல்லா மனை பாழ்" (உ௩)

என்று விளக்கியருளினர். இங்ஙனமாகிய காதற்காமத்தின் முதன்மையெல்லாம், கணவன் மனைவியரின் ஒற்றுமைக் கற்பொழுக்க அன்பினில் நிலைபெற்றிருத்தலாலும்; பெண்டிர் மென்னீரராதலின் அவரே தற்காத்துத் தற்கொண்டாரையும் பேணுந் தகவுடையாராதலாலும்,

"பெண்ணீர்மை கற்பழியாவாற்றல வையகத்துள் அற்புதம்ஆம்" (க௬)

என உடன்பாட்டால் ஒரு செய்யுளும்,

"பழிக்கஞ்சாத் தாரத்தின நன்று தனி" (௩க).

என எதிர்மறையால் ஒரு செய்யுளும் நல்வழியில் வந்து இக் கருத்தைப் பெரிதும் வற்புறுத்தாநின்றன.

இங்ஙனம் உயிர்நேயம் அமையாத நிலையே காமக் காமம் எனப்பட்டு அவா மிக்கு, வெற்றுடம்பு வாழ்க்கையில் மக்களை நிறுத்திவிடுகின்றது. நாளடைவில், இக் காமக்காமம், 'அம்பிதுணையாக ஆறு இழிந்தவாறு' ஒத்துப் பரத்தையர் நடமாட்டமாகி, வெறுமைக்கு வித்தாக்கி விடுகின்றது. (உ0) அம்மையார் இவ்விரங்கத் தகுந்த நிலைமையை,

" இம்மை மறுமைக்கு நன்றன்று "

என இரங்கி அறிவுறுத்தருளுவார். காமக் காமத்துக்கு இடமாகிய நிலை இவ்வளவின் நில்லாது, அயல் மாதர்மேல் மனம் வைத்தலாகிய மிகக் கொடிய தீவினைக்குஞ் சிலரை ஏவுதல் வல்லது. அந்நிலைக்கு ஒருவன் வருகுவனாயின் அவன்,

" நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்தில்
கொண்ட கருவளிக்குங் கொள்கைபோல் "

அடியோடு கெடுதலே நேரும் (௩௬). ஆதலாற், காமத்தின் இயற்கை உந்துதலைக் காதற் காமமாகிய அன்பின் நேயத்துக்கு இடமாக்கிக்கொண்டு, வாழ்க்கை மாட்சியும் இன்பமும் உற்று, அதன் கடைக்கோட் காலை அறம் உணரும் அரு

ளியல் முகமாகச் செல்லுதல், மக்கட்கு இன்றியமையாத தாகும்.

இனிப், பசி என்னும் இயற்கை உந்துதலால் அமையும் உலகியல் அருளியல் வகைகளைப்பற்றி ஔவையார் கூறுவன அறிந்து இன்புறற்பாலன.

பசிக்குமுன் எவ்வகையான தகுதியும் நிலைக்காது என்பது ஔவைப் பிராட்டியின் கருத்து. மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, காமுறுதல் ஆகிய பத்தும் பசிவந்திடப் பறந்துபோம் (உ௬) என்று, தகுதிகளைப் பல முகமாக அவர் விளக்கிப், 'பறந்துபோம்' என்னும் ஆற்றல் மிகுந்த மொழியி னாலும் முடித்துக் கூறுவதிலிருந்து அது தெரிகின்றது. இந்தப் பசிக்குத் தேவையானது, மிகுதியானதொன்றுமில்லை; ஒரு நாளைக்கு நாழி அரிசி இருந்தால் வெள்ளம். உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் (உஅ). ஆனால், இதற்கு மக்கள் எண்ணுவனவோ கோடி கோடி; சாந்துணையும் சஞ்சலம். இவ்வளவு கவலைக்குங் காரணம், வயிற்றில் ஒத்துழை யாமையே என்று பிராட்டியார் சற்று நகைச்சுவையோடு ஒரு செய்யுள் அருளிச்செய்கின்றனர்.

"ஒருநாள் உணவை ஒழிஎன்றால் ஒழியாய் ;
இருநாளைக்கு ஏலஎன்றால ஏலாய் ;—ஒருநாளும்
என்நோவு அறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது"

என்பது அச் செய்யுள்.

வயிற்றின் கொடுமை இங்ஙனம் இருப்பதனால், மக்கள், உணவின் பொருட்டுப் பலதலையாக முயற்சிகள் செய்கின்றனர். கைப்பொருள் இன்றியமையாததா யிருக்கின்றது. கல்லானே யானாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின் எல்லாரும் சென்று அங்கு எதிர்கொள்வர் (௩௩). முயற்சி யின் வெற்றி, மென்மை ஆற்றலில் அடங்கிக்கிடப்பது உலகியற்கையா யிருக்கின்றது. வெட்டெனவை மெத்தெனவை வெல்லா; வேழத்தில் பட்டு உருவும் கோல், பஞ்சில்

பாயாது ; நெடிய கடப்பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசு மரத்தின் வேருக்கு நெக்குவிடும் (௩௩). இவ்வியல்பறிந்து முயற்சிகளைச் செய்யவேண்டும்.

முயற்சிகளிற் சில, மக்கள் நினைத்த நேரத்திலேயே பயன்படாமற் போதலும் உலகியற்கையாகும். அடியோடு அழிந்தே போதலும் உண்டு. அல்லது முயற்சிகள் தொடங்கின உடனே பயன்கள் எதிர்ந்து பெருகிவருதலும் உண்டு. உலகத்திற் காரணங்கள் பலதலையாக இருத்தலும் இவற்றிற்கு ஏதுவாகும். முயற்சி செய்வோர் தகுதியாக இருந்தாலும், சூழ உள்ள மக்கள் தகுதியற்றவராக இருத்தலும் நேர்கின்றது. பேதைக்கு உரைத்தாலுந் தோன்றாது உணர்வு (௩௫). மேலும், இவ்வெல்லாவற்றிற்கும் மேல், மக்களை ஊழின்வழியே நடத்தி உய்விக்கும் இறைவன் திருவுளமும் ஒன்றிருக்கின்றது.

> "ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட்டு ஒன்றாகும் ;
> அன்றி அதுவரினும் வந்தெய்தும் ;—ஒன்றை
> நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும் ;
> எனையாளும் ஈசன் செயல்."

இறைவன் அருளுணர்வோடு முயற்சிகளைச் செய்யின் ஊழின் வலி மெலிந்து, மக்கட்கு நன்மை உண்டாகும். மக்கள் தகுதி என்று ஒன்றை நினைத்துச் செய்வர் ; உண்மையில் அது தகுதியற்றதாய் அவர்க்கும் பிறர்க்கும் ஊறு விளைத்தற்குரியதாய் இருத்தலுங் கூடும். அதனால், இறைவன் அருளுணர்வு உடையார்க்கு அவ்வருள் அதனை ஒழித்திட்டு வேறொரு முகமாக அவர் முயற்சிகளைத் திருப்புதல் நேரும். ஆதலால், ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு வேறொன்றாதலை உலகியற்கையிற் காண்கின்றோம்.

இக் காரணங்களெல்லாம் ஒருங்குணர்ந்து, அருளியல் முனைப்புடன் இவ்வுலகியன் முயற்சிகளைச் செய்து வருவார்க்கு எவ்வகையாலேனும் நலமே உண்டாகும் என்பது ஒருதலையேயாம். அங்ஙனம் அருளியல் முனைப்பிருப்பின், முயற்சிகளின் பயன்மேல் நிரம்பக் கருத்து அழுந்தாமல்

முயற்சிகளைத் திருத்தச் செய்வதிலேயே எண்ணம் நிலை பெறும். முயற்சிகள் செய்யும்போதே உலக நுகர்ச்சி களிலும் எண்ணம் மிக அழுந்தாமல், முயற்சிகளிலேயே அது முனைப்புக்கொள்ளும். இதனால், பொருளின் செலவும் வர வும் ஒழுங்குபடும். இன்றேல், மேற்குறித்த இருவகைப் பட்ட மிக்க அவாவினால் தொழிலுக்குத் துவக்கமான முதலி லேயே மிகுதியாகச் செலவாகி, அதனால் மானம் அழிந்து மதிகெட்டு எல்லார்க்கும் கள்ளனாய்த் தீயனாய் நல்லார்க் கும் பொல்லன் ஆகும் மிக இரங்கத்தக்க நிலை வந்து விடும் (உரு).

உலகியலில் இங்ஙனம் செய்யும் முயற்சிகளில் தலை சிறந்த முயற்சியாக ஔவைப் பிராட்டியார் மதித்து உரைப் பது உழவுதொழின் முயற்சியேயாகும். நமது நாட்டின் இயற்கைக்கும் இது பெரிதும் ஒத்திருக்கின்றது. உழவு தொழின் முயற்சி சிறந்ததென்பதற்கு அவர் கூறுங் காரணம், அஃது என்றும் நிலையான உரிமையுடையது என்பது. வேறு அரசுறிய வீற்றிருந்த வாழ்வும் விழும் என் கின்றார். ஆதலால்,

> "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
> பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என அவர் அருளோடு தெரிந்தெடுத்து அறிவுறுத்தருளுவா ராயினர். இங்ஙனம் 'உழுது வரும் பொருள்களே பொருள்; அதனாற் கொடுக்குங் கொடையே கொடை; அதனாற் பெரு கும் பேரும் புகழும் பெருவாழ்வும் ஊரும் திருவும் வாழ் நாளுமே உயிர்வாழ்க்கை; அதுவே தாமும் பிறரும் பசி தணிந்து விளங்கும் நல்வாழ்வு' என அம்மையார் கருதியிருக் கின்றனரென்பது.

> "பெருமை நிமுலும் சீலம்பொதியும் நெறகட்டும்
> பேரும் புகழும் பெருவாழ்வும் — ஊரும்
> வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க்கு என்றும்
> தரும்சிவந்த தாமரையாள் தான"

என விளக்கமாக இயைபுபடுத்தி அவர் அருளிச் செய்வதி னின்றுந் தெரிகின்றது.

உலகியலின் அருளியல் இங்ஙனமாக, அவ்வருளியலுக்கு மாருன வெற்று உலகியலாக, மக்கள் ஒரு நாழி அரிசிக்காகச் சேவித்தலும் சென்றிரத்தலுமான முறையல்லா முயற்சிகளைச் செய்து நிலைகுலைந்து நிற்கின்றனர் என்பர்,

"சேவித்தும் சென்றிரந்தும் தெள்நீர்க் கடலகடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டுஇசைத்தும—போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால
நாழி அரிசிககே நாம"

என்று ஔவையார் மிக்க உருக்கத்துடன் எடுத்துக்காட்டுகின்றனர். பார் ஆளுதலும் தெள்நீர்க் கடல்கடந்து பொருளீட்டுதலும் உலகப் பொதுநன்மைக்காக வன்றித், தமது வயிற்று வாழ்க்கைக்காக மக்கள் செய்வராயின், அது தவறுடையதென்னும் அரும்பெருங் கருத்தும் இச் செய்யுளாற் பைய வெளிப்படுதல் பெரிதுங் கருத்திருத்தற்பாலதாகும். இங்ஙனம் முறையல்லா முயற்சிகளே பொருந்தாவாயின், சென்றிரந்து பிச்சையெடுத்தலையும், அப் பிச்சைக்கும் மூத்த குடிவாழ்க்கையாகிய இச்சகம் பேசி உயிர்பிழைத்தலையும், மன்றில் ஓரஞ் சொல்லி உயிர்வாழ்தலையும் ஔவையார் எங்ஙனம் ஒப்புக்கொள்வர்? அதனால் அவர்,

"சிசீ! வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர்விடுகை சால உறும்"

என வருந்தியும்,

"வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்று ஓரம் சொன்னார் மனை"

என வெறுத்தும் உரைப்பாராயினர்.

ஆதலால், உயிர்களின் அறிவு அன்பு முதலியவற்றின் விளக்கத்துக்கு ஏதுவாக இயற்கையில் அமைந்த பசி காமம் என்னும் உலகியல் உந்துதலை, அவ்வுயிர்களில் உயர்ந்தோரெனப்படுவோரான மக்களேனும் தக்காங்கு பயன்படுத்திக் கொண்டு அருளியல் நெறியினராய் வாழ்வு ஓங்கிச் சிறத்தல்

வேண்டும் என்பது, இவ்வாற்றால் இனிது விளங்காநிற்கின்றதென்க.

திருநெறி :

அருளியல் நெறிக்கு மாறாகாது இங்ஙனம் உலகியல் வாழ்க்கை நடத்த நடத்த, மேன்மேலும் வாழ்க்கை எளிமையுடையதாய்ப் பேரின்ப ஆற்றலுடையதாய் உலக நிலையாமை அறிந்து, பற்றற்றுத், தெளிந்து, அவா நீங்கிப், பேராவியற்கையில் மிளிரும். ஆசிரியர் திருவள்ளுவர், தாம் வகுத்த அறத்துப்பாலில் 'ஞானம்' என்னும் பகுதியில் நிலையாமையும் துறவும் மெய்யுணர்வும் அவாவறுத்தலும்பற்றி முறையே அறிவுறுத்தியிருத்தலைப்போல, ஔவைப் பிராட்டியாரும், நிலையாமை உணர்ந்து துறவுகொள்ளுதலை.

"எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை — நல்லார்
அறிந்திருப்பா ராதலினால் ஆங்கமல நீர்போற்
பிறிந்திருப்பார் பேசார் பிறர்க்கு"

என்னும் அருமைத் திருச்செய்யுளிலும், மெய்யுணர்வு நிலையினை.

"நன்றென்றும் தீதென்றும் நான்என்றும் தான்என்றும்
அன்றென்றும் ஆம்என்றும் ஆகாதே—நின்றநிலை
தானதுஆம் தத்துவமாம்; சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்"

என்னும் மிக நுட்பமான திருச்செய்யுளிலும், அவாவறுத்தலை,

"முப்பதாம் ஆண்டளவில் மூன்றற்று ஒருபொருளைத்
தப்பாமே தன்னுட் பெறானாயின்—செப்பும்
கலையளவே யாகுமாம் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமாம் மூப்பு"

என்னும் அரும் பெறற் றிருச்செய்யுளிலும் நன்கமைத்து விளக்கியிருக்கின்றனர்.

இச் செய்யுட்களில் அமைந்துள்ள கருத்தழகுகள் வாழ்க்கைக்கே வற்றாத் திருப் பெருகும் ஞானவூற்றுக்களா

கும். உலகம், அருளும் பொருளுங் கலந்து உயிர்களின் உயிர் வாழ்க்கைக்கு ஏற்ற கருவியாய் இருந்து வருகின்றது. உடம்பும் ஒரு சிறிய உலகமே என்பது பொருந்தும். ஊனுடம்பும் மண்ணுலகும் என்னும் இவ்வுலகப் பகுதிகளெல்லாம், அருள் பொருள் என்னும் இருவகைப் பகுப்பிற் பிரிவுண்டு இயங்கிச் செல்லுதலை மக்கள் தெளிவாக அறிந்து அதற்கேற்றபடி நடந்துகொள்ளுதல் இன்றியமையாததா யிருக்கின்றது. பொருள் என்பது பண்டங்கள்; அருள் என்பது அப்பண்டங்கள் உயிர்களின் வாழ்க்கைக்காக இயங்கி மேற்கொள்ளும் இயலுண்மை அறிவின்பத் தகுதிகள்.

பண்ட மென்பது கருவி; அதன்கண் விளங்குந் தகுதியென்பது, பயன் விளைக்குங் காரணம். உலகத்தின் ஒவ்வொரு கூறிலும் இக் கருவிப் பொருளும் தகுதிப்பாடும் அமைந்துள்ளன. பொருளையும் அருளையும் இங்ஙனம் பகுத்தறிந்து, பொருளியல்புகளில் உள்ளம் அழுந்தாமல், அவற்றின் அருளியல்புகளில் உள்ளம் அழுந்தி நிற்றல் வாய்க்குமாயின், அந்நிலை உயர்ந்த நிலையாய்ப், பேரின்பம் பயப்பதற்கு ஏதுவா யிருக்கும்.

பொருள்கள் நிலையாயிருப்பன அல்ல; அருள் அங்ஙனமன்று; பொருள் அழியினும், அதனில் அமைந்த தகுதிப்பாடு என்னும் அருள் என்றும் அழியாதிருப்ப தொன்றாகும்.

ஆசிரியர் திருவள்ளுவர், திருக்குறள் என்னும் ஓர் அரிய நூலினை இயற்றியிருக்கின்றார். நூல் என்னும் அத் தகுதிப்பாடு, அதாவது அவ் வாசிரியரது அருட்டிறம், அழியாதது; ஆனால், அத் தகுதியினைத் தன்கட் கொண்டு எல்லாரும் எடுக்கவும் பிடிக்கவும் பயன்படுத்தவும் உதவும் ஏட்டுப்படிகளோ அவ்வப்போதும் அழிந்துபோம் இயல்பினவா யிருக்கின்றன. ஏட்டுப்படிகள் என்பது பண்டம். அவற்றில் அமைந்த நூல் என்பது இயலுண்மை அறிவின்பத் தகுதியாகும். பண்டம் என்பது பொருள்; அதாவது கருவி. தகுதி என்பது அருள்; அதாவது இன்பப் பயன் நல்குங் காரணம்.

ஆதலால், திருக்குறள் நூலைக் கையிலெடுத்தால், அதில் ஏடு என்னும் பொருளும், நூல் என்னும் அருளும் ஒருங்கு கலந்து, நமது வாழ்க்கைக்கு உற்ற கருவியாய் அது விளங்குதலைக் காணலாம். அங்ஙனமே இவ்வுலகமும், பொருளும் அருளும் கலந்துள்ள கருவியாக, நுணுகி நோக்கி உணர்ந்து கொள்ளப்படும்.

மண் நீர் முதலிய பொருள்களும் திண்மை, சுவை முதலிய அவற்றின் இயல்புகளும் முறையே பொருளும் பொருளியல்புகளும் எனப்படும். அவை அழிந்து நிலைமாறுவன. அவற்றிற் படிந்திருக்கும் இறைவனுடைய ஆற்றலும், அந்த ஆற்றலால் அவற்றின்கண் உண்டாகும் ஒழுங்கான அமைப்பியல்புகள், இயக்கமுறைமைகள், கவர்ச்சித் திறங்கள் முதலியனவும் முறையே அருளும் அருளியல்புகளும் எனப்படும். இவை அழியாது நிலைபெற்றிருப்பனவாகும்.

பொருளினும் பொருளியல்புகளினும் எண்ணம் வைத்து ஒழுகுவது 'பற்று' எனப்படும். அதனைத் தீயது என்று ஆன்றோர் ஒதுக்குவர். இனி, அப் பொருளும் பொருளியல்புகளும் நிலையாதன என்று அவற்றின் நிலையாமையுணர்ந்து, அப் பொருள் பொருளியல்புகளூடு விளங்குகின்ற அருள் அருளியல்புகளில் நாட்டம் வைத்து, அப்பொருள் பொருளியல்புகளிற் பற்றுவிடுதலே துறவு எனப்படும். அருள் அருளியல்புகளில் நாட்டமில்லாதபோது, பொருள் பொருளியல்புகளிற் பற்று நீங்காது.

இவ்வுண்மையை விளக்குதற்கே நாயனார்,

“ பற்றுக பற்றற்றான் பற்றினை ; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு ”

எனத் தெளிவாக ஒரு திருக்குறள் அருளிச்செய்திருக்கின்றனர். இதன்கண், அப் பெருநாவலர், 'ஆண்டவனது பற்றைப் பற்றுக; பொருள்களின் பற்றை விடுவதற்கு' என்று அருளிச் செய்திருக்கின்றனரே யல்லாமல் ஆண்டவனையே பற்றிக் கொள்க என்றாவது, 'பொருள்களையே விட்டுவிடுக' என்று ஒரு கட்டளை யிடவில்லை. 'பற்றற்றான் பற்றினை' என்னும்

போது 'பற்றினை' என்றது, அவன் அருளை என்னும் பொருட்டு. 'அப் பற்றினைப் பற்றுக' என்னும்போது 'அப் பற்றினை' என்றது, அந்த அருள், உலகத்திற் கலந்து தாக்கற்று இயங்குகின்ற முறைமையினை என்னும்பொருட்டு. 'இறைவன் உலகுயிர்களோடு கலந்திருந்தும், அவற்றாற் சிறிதுந் தாக்குதலின்றி எங்ஙனம் விடுதலையாய் விளங்குகின்றனனோ அம் முறைமையைப் பற்றுக பற்று விடற்கு' என்பது பொருள்.

பொருள்களையே துறந்துவிட்டால் பொருள்களிலிருந்து அருட்பயன் கொள்ளல் இயலாது; துறவென்பது அஃதன்று. பொருள்களைத் துறவாமல் அருட்பயன் கருதி அவற்றை நன்முகமாக இயக்கிக்கொண்டு, ஆனால், அப் பொருள்களின் நிலையாமையும் தீதுங் கருதி அவற்றிற் பற்று நீங்கியொழுகுதலே துறவு என்பதாகும். உண்மை இங்ஙனமெல்லாம் இருத்தலால், இதனை விளக்கும்பொருட்டு 'உள்ளத் துறவு' எனவும், 'மெய்த் துறவு' எனவும், 'உள்ளந் துறந்தோன் சதகோடி மடங்கு உயர்ந்தோன்' எனவும் ஆன்றோர் அங்கங்கும் பேசுவாராயினர். ஔவைச் செல்வியார் இவ்வியல்புகளையெல்லாம் நன்கு தேற்றி நிலையாமையையுந் துறவையுந் தெளிய அறிவுறுத்தும்பொருட்டே, 'எல்லாப் படியாலும் எண்ணினால் இவ்வுடம்பு பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை, நல்லார் அறிந்திருப்பாராதலினால் ஆங்கமல நீர்போல பிரிந்திருப்பார் பேசார் பிறர்க்கு' என்னுந் திருவெண்பாவினை அருளிச்செய்தனர். 'புன்குரம்பை' என்றதனால் நிலையாமையும், 'பொல்லாப் புழுமலிநோய்க் குரம்பை' என்றதனால், அங்ஙனம் நிலையாமை யுண்டாவதற்குரிய தீய இயல்பும் புலப்படுத்தினர். உடம்பு முதலிய உலகியற் பொருள்கள் இங்ஙனம் நிலையாமை யுடையவாதலை நல்லோர் அறிந்திருப்பாராதலினால், அவர் அவற்றின் அருட்பயன் கருதித் தொடர்புகொண்டிருந்தனராயினும், அவற்றிற் பற்று நீங்கித் துறவொழுக்க முடையராகவே இருப்பர் என்பதற்கு, நீர் தாமரை யிலையோடு கூடியிருப்பினும் இலையோடு

ஒட்டாமல் அது பிறிதுபட்டிருப்பதுபோலவே இவரும் பிறிதுபட்டிருப்பர் என்னும் பொருள்தோன்றக் 'கமலநீர் போற் பிறிந்திருப்பர்' எனவும், பொருளைத் துறவாது அவற்றின் பற்றைத் துறத்தல் என்னும் இவ்வுள்ளொழுக்கம் புறத்தே விளங்கித் தெரிவதன்று, தெரியவேண்டுவதும் அன்றாதலின், இத்தகைய உள்ளத்துறவின் மேன்மை புலப்படும்படி, 'பேசார் பிறர்க்கு' எனவும் அருளிச்செய்து துறவியல்பினையும் அவர் நன்கு தெருட்டினார்.

இனிப், பொருள்களிலும் பொருளியல்புகளிலும் உள்ளத் துறவு நேர்ந்தது, ஆண்டவன்றன் அருளின் நாட்டத்தாலாதலின், அவ் வருளின் இயல்பைத் தெளிய உணர்ந்து நிற்றல் மெய்யுணர்வு எனப்படும். இதனியல்பினைப் பிராட்டியார் 'நன்றென்றும் தீதென்றும் நான் என்றும், தான் என்றும் அன்றென்றும் ஆம் என்றும் ஆகாதே நின்றநிலைதான் அது ஆம் தத்துவம்' என்று மிகவும் நுட்பதிட்பமாக அருளிச்செய்திருக்கின்றார். கடைந்தெடுத்துக் காட்டுவதுபோல, இச் செய்யுட் கருத்து விழுப்பந் தோன்ற அமைந்துள்ளது.

இறைவன் திருவருள் என்பது, உடம்பு உலகம் என்னும் அறியாமைப் பொருள்களில் மட்டுங் கலந்திருப்பதென்பது இல்லை. சிறிது அறிவு உடைய உயிர்ப்பொருள்களிலுங் கலந்து தனது அருளியல்பைப் புலப்படுத்திக்கொண்டிருக்கின்றது. திருவருள் யாண்டுங் கலந்து விளங்குவதேயாயினும், உயிர்களிடத்திற் பின்னும் முனைப்புடன் விளங்கித் தெரிகின்றது. அறியாமையும் அழுக்கும் மிக்க உயிரில்லாப் பொருள்களைவிடச், சிற்றளவேனும் அறிவும் அன்பும் உடைய உயிர்ப்பொருள்களில் ஆண்டவன் முனைத்து விளங்குவன் என்பதே பொருத்தமாகவும் இருக்கின்றது. ஆதலால், ஆண்டவனைக் காண விரும்புவோர் மெய்யன்பு மிக்க அடியார்களின் வாயிலாகக் கண்டு வழிபடுவதே எளிய வழியென்று அறிதல்வேண்டும்.

இவ்வுண்மையினைத் தெளிய விளக்க விரும்பிய திருவெண்காடர் என்னும் பட்டினத்தடிகள்,

"சொல்லிலும் சொல்லின் முடிவிலும் வேதச் சுருதியிலும
அல்லிலும் மாசற்ற ஆகாயந் தன்னிலும ஆய்ந்து, விட்டோர்
இல்லிலும் அன்பர் இடத்திலும் ஈசன் இருக்குமிடம் ;
கல்லிலும் செம்பிலு மோ இருப்பான எங்கள் கண்ணுதலே."

என்று அருளிச்செய்தனர். இந்த அருளுரையில், 'விட்டோர் இல்லிலும்' என்றது, 'பற்றுவிட்ட ஞானிகளின் இதயத்திலும்' என்னும் பொருட்டு.

ஆதலால், மெய்யன்பர்களான ஞானிகள், தம் உள்ளத்திலேயே இறைவன் அறிவு அன்பு வடிவமாக நிறைந்து விளங்குதல் கண்டு, அவன் வழியராய் ஒழுகி, ஆற்றலுற்றும் இன்புற்றும் நிற்பர். இறைவனுடைய பேரறிவு பேரன்பு பேரருளே, தம்முடைய சிற்றறிவு சிற்றன்பு முதலியவற்றை விழுங்கி, அதாவது அச்சிற்றறிவு முதலியவற்றின் முனைப்பை அடக்கிக்கொண்டு விளங்குதலை ஞானிகள் உணர்வர்.

தமக்கு அகத்தில் இங்ஙனம் இறைவனது அருள் தோன்றுதலைப்போலவே, தமக்குப் புறத்திலுள்ள உயிரில்லாப் பொருள்களிலும் அவ்வருள் யாண்டுங் கலந்து தோன்றுதலையும், அவ் வருளுக்கு முன் ஏனை எவ்வியல்பும் நிலையற்று அடங்கி ஒன்றிப்போக அவ்வருள் ஒன்றே நன்கு விளங்கி இயங்குதலையும் அவர் கண்டு இன்புறுவர். இந் நிலையினை அருட்பெருஞ் செல்வராகிய தாயுமான அடிகள்,

"பார்க்குமிடம் எங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே"

என்று தெளிவாக விளக்கியருளினர்.

உலகத்தில் இங்ஙனம் உயிரில்லாத பொருள்களெல்லாம் நிலையில்லாதனவாய், உயிர்களெல்லாம் தம் முனைப்பு அடங்கினவாய்த் தாம் இருக்குமிடம் தெரியாமல் ஆற்றல் மடங்கி ஒன்றிப்போக, இறைவன் திருவருள் ஒன்றே எப் பொருள்களிலும் எவ்வுயிர்களிலும் அவற்றின் உள்ளும் புறம்புங் கலந்து, தான் ஒன்றேயாய் நிறைந்து, உள்ள பொருளாக விளங்கித் தோன்றி, எஞ்ஞான்றும் அறிவும்

இன்பமும் விளைத்து உதவிபுரிந்து வருதலை நாம் காண்கின்றோம். பிற்காலத்துச் சான்றோரான இராமலிங்க அடிகள், யாண்டும் முளைத்து விளங்கித் தானென்றே உள்ளதாய், அறிவின்ப வடிவமாய்த் தோன்றும் இவ் வருளியல்பினை,

"எப்பொருட்கும் எவ்வுயிர்க்கும் உள்ளகத்தும் புறத்தும்
இயலுண்மை அறிவின்ப வடிவாகி நடிக்கும்
மெய்ப்பொருளாம் சிவம்"

என்று தெள்ளிய நல்ல தமிழில் விளக்கமாக எடுத்துக் காட்டியருளுவர்.

ஆதலால், 'உள்ளது' 'இருந்த இருப்பு' 'நின்ற நிலை' என்று, இயல்பாக முளைத்து விளங்கித் தெரியுந் தன்மையினைப் பாராட்டிப், பற்பல வகையாகக் கூறப்படுவதெல்லாம், அம் மெய்ப்பொருளாகிய சிவத்திருவருள் ஒன்றையே என்க.

இறைவன் இங்ஙனம் உலகத்தில் அகத்தும் புறத்தும் யாண்டும் முளைத்து விளங்கிநிற்றலால், அவனைத் தேடிக்கொண்டு யாரும் எங்குஞ் செல்லவேண்டுவதில்லை. பொருளியல்பாகிய உலகியல்பை மறந்து தம்முள்ளும் புறத்தும் விளங்கும் அருளியல்பாகிய இறைவன் விளக்கத்தில் இருந்தபடியே படிந்திருத்தலே, உள்ளதாகிய அவ் வறிவின்பப் பொருளை உணரும் முறையாகும். 'நின்ற நிலையிலேயே தான அது ஆகும் தத்துவம்' இது. சங்க காலத்து மெய்ஞ் ஞானப் பெருஞ் செல்வராகிய திருவள்ளுவப் பெருந்தகையார், 'மெய்யுணர்வு' என்னும் அதிகாரத்தில்,

"ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒருதலையாப்
பேர்த்து உள்ளவேண்டா பிறப்பு"

என்று மிகச் சிறப்பாக இதனைத் திருவாய்மலர்ந்தருளுவோராயினர்.

பரிமேலழகர் இத் திருக்குறளின் உரையில் 'உள்ளது' என்பதற்கு 'முதற்பொருள்' என்று உரைத்து, 'முதற்பொருளாகிய அவ்விறைவனை ஒருவன் உள்ளம் உணருமாயின் அவனுக்கு மாறிப் பிறப்புளதாக நினைக்கவேண்டா' என விளக்

கிச் செல்லுவர். உரையாசிரியர் இறைவனை முதற்பொருள் என்று விதந்து விளக்குதலால், ஏனை உயிர்களும் உலகும் உள்ள பொருள்களேயாயினும் அவை இரண்டாம்படியாகக் கருதப்படுமேயல்லது முதற்பொருளென்று முதற்படியாகக் கருதப்படா என்பதும் அறியப்படும். ஆதலால், உள்ளது என்று சிறந்தெடுத்துப் பேசுவதற்கும், உணர்வதற்கும் சிறப்பாக உள்ளது, சிவந் திருவருள் ஒன்றேயாகும், நாயனார் இதன் அடுத்த குறளிலும் இவ்வுண்மையினைச்,

> “ சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு ”

எனக் கிளந்தோதி விளக்கிச் செல்வர். இங்ஙனம் உள்ள தெனப்படும் முதற்பொருளாகிய இறைவனது திருவருள் விளக்கத்தில் உயிர்கள் அன்பினால் தம் முனைப்பு முற்றும் அடங்கி யொன்றி அதுவாகும் இயல்பினைப், பெருநாவலர் இவ்வதிகாரம் முழுமையும், ‘பொருளுணர்வு’ ‘மாசறு காட்சி’ ‘தெளிவு’ ‘மெய்யுணர்வு’ ‘மெய்ப்பொருள் காண்பது’ ‘கற்றுணர்வது’ ‘உள்ளதுணர்வது’, ‘சிறப்பென்னும் செம்பொருள் காண்பது’ ‘சார்புணர்ந்து ஒழுகுவது’ எனப் பற்பல வகையாகத் தெளித்துரைத்து, மேலுமேலுந் தெளிவு உண்டாக விளக்கிச் செல்வர்.

இங்ஙனம், நின்றநிலையே தான் அதுவாகி நிற்கும் உணர் விறந்த மெய்ந்நிலையில், நான் என்னும் நினைவும், அது என் னும் நினைவும், உலகு என்னும் நினைவும், அது இது என்னும் நினைவும், பிறவும் உண்டாக இடமேது? சுட்டிறந்து இயல் பாக நிற்கும் அருளின்ப நிலையன்றோ அது! பேராவியற்கை யாகிய இப் பெருநிலையில், ஆண்டு விளங்கும் அருளின்பப் பெருக்கினை **வடலூர் வள்ளலார்,**

> “ தற்போத ஒழிவினிடை நிறைந்து பொங்கித்
> ததும்பிவழிந்து ஓங்கியெலாம் தானே யாகிச்
> சிற்போதத்து அகம்புறமுங் கோத்து நின்ற
> சிவானந்தப் பெருக்கேஎன் செல்வத் தேவே ”

எனவும், **தாயுமானார்,**

"காகமுறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகார சிவ
போகமெனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பி
ஏக வுருவாய்க் கிடக்குதந்தோ"

எனவும் எவ்வளவு நிறைவாக, எவ்வளவு தெள்ளத் தெளிவாகத், திரட்டியெடுத்து வழங்கியிருக்கின்றனர்! இங்ஙனம் 'ஏக வுருவாய்த்' தேக்குற்றிருக்கும் பெருநிலையில், 'நன்றென்றும் தீதென்றும் நானென்றும் தானென்றும் அன்றென்றும் ஆம் என்றும்' சுட்டி நிற்கின்ற வேறுபாட்டு நிலை சிறிதேனுந் தலையெடுக்குமா? ஆகாதன்றோ! அங்ஙனம் ஆகாதே நின்றநிலை, தான் அது ஆகும் தத்துவம் ஆகின்றது.

மெய்ஞ்ஞானப் பெருஞ்செல்வியாரான ஔவைப் பிராட்டியார் இங்ஙனம், மெய்யுணர்வு நூலும் முற்செய்யுளில்,'தான் அது ஆம் தத்துவம்' என்னும் ஒருமொழி யுண்மையினை நன்கு விளக்கி, இரண்டறக் கலந்து நிற்றலாகிய 'அத்துவித முத்தி' நிலை தேற்றியிருப்பதும், தன்னுள்ளேயே இறைவனைக் கண்டு கலந்திருத்தலாகிய இயற்கைக் காட்சியினைச் 'சம்பறுத்தார் யாக்கைக்குப் போனவா தேடும் பொருள்' என்னும் உவமை முகத்தால் விளக்கித் துணிவுறுத்தியிருப்பதும் பெரிதும் ஆழ்ந்தறிந்து உண்மை தெளிதற்குரியனவாகும். சம்பு என்பது ஒருவகைப் புல்; தனக்கு வேறாகக் கடவுளைத் தேடுவதென்பது, அப் புல்லை அறுத்தவர்கள் அதனைக் கட்டுதற்கு அதனையே கயிறாகப் பயன்படுத்திக் கொள்ளமாட்டாது வேறு கயிறு தேடிப் போனதுபோலும் என்பது அவ்வுவமையின் பொருளாகும்.

"தேடிக் கண்டுகொண்டேன்—திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டுகொண்டேன்"

என்று அப்பரடிகள் அருளிச்செய் திருத்தலும் இங்கு நினைவு கூரற்குரியது.

விதியும் மதியும் :

திருநெறி உண்மையை மேற்காட்டியவாறு நன்கு விளக்கித் தெளிவுறுத்திய ஔவையார், வாழ்க்கையில் அங்ஙனம் உறுதிகொண்டு ஒழுகுமிடத்து மக்கட்கு இயல்பாக உண்டாதற்குரிய ஓர் அரிய ஐயத்தினையும் அறத் தீர்த்துவைத்துப் பேருதவி புரிந்திருக்கின்றனர்.

வாழ்க்கை ஊழின்வழியே நடைபெறும் இயல்பினதென்பதை ஔவையார், 'புண்ணியமாம் பாவம்போம்' 'எண்ணியொரு கருமம்' 'வருந்தி யழைத்தாலும்' 'உள்ளதொழிய' 'ஈட்டும் பொருண்முயற்சி' 'ஆவாரை யாரே' 'தாந்தாம் முன் செய்தவினை' 'வினைப் பயனை வெல்வதற்கு' என்னும் முதற் குறிப்புடைய செய்யுட்கள் பலவற்றால் தெளிய அறிவுறுத்தியருளுவர். இங்ஙனம் அருளியவர் இந்த ஊழை நல்லூழாக அமைத்துக்கொள்ளுதற் கேற்ற ஓர் இனிய வழியையும் 'சாதி இரண்டொழிய' 'இடும்பைக் கிடும்பை' 'ஆற்றுப் பெருக்கற்று' 'ஆண்டாண்டு தோறும்' 'செய்தீவினை யிருக்க' 'பெற்றார் பிறந்தார்' 'பாடுபட்டுத் தேடி' 'மரம் பழுத்தால் வௌவாலை' 'ஆறிடுமேடு மடுவும்போல்' என்னும் முதற் றலைப்புடைய செய்யுட்களாற் பற்பல வகையாக நன்கு வலியுறுத்திக் காட்டுகின்றனர். அவ் வழியாவது, இயன்ற உதவியைப் பிறர்க்கு அவ்வப்போதுஞ் செய்துவருதலே யாகும். இங்ஙனஞ் செய்து வந்தால் ஊழ் நல்லூழ் ஆகும்.

> "செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
> எய்த வருமோ இருநிதியம்—வையத்து
> அறும்பாவம் என்ன அறிந்து அன்றிடார்க்கு இன்று
> வெறும்பானை பொங்குமோ மேல்"

என்னும் உண்மைச் செய்யுளில் ஆசிரியர் இக் கருத்தை ஓர் எளிய உவமையின் வாயிலாக வெளிப்படுத்தி யிருக்கின்றனர். கொடையைப்பற்றி நுவன்ற மேற் செய்யுட்கள் பலவற்றிலும், 'உண்மை நூலில் உள்ளபடி, உலகத்தில் ஒருவர்க்கு ஒன்று உதவினவரே உயர்குலத்தார்;' 'நல்கூர்ந்தா

ராலும் இல்லையென மாட்டாராதலின், அவரே நல்ல குடிப் பிறந்தார்;' 'அவர்க்கே உலகத்தார் உற்றார்;' 'இத் தகைய கொடைப் பண்பின் காரணமாகவே உள்ளத்தில் தூய தன்மை ஓங்கி விளங்கும்;' 'இம் முறைமையால் வீடு பேறும் கிடைக்கும்;' எனக் காரணகாரிய முறைமையுடன் சிறந்த கருத்துக்களையெல்லாம் பிராட்டியார் அருளிச் செய்திருக்கின்றனர். தூய தன்மை ஓங்கி விளங்குதலும், வீடுபேறு கிடைத்தலுமாகிய உண்மைகள்,

"............................சோறு இடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உள்நீரும் வீறும் உயர்ந்து"

எனவும்,

"........................இடும்கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழிறபெரு வலிநோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு"

எனவும் அவர் அருளிச் செய்துள்ளவாற்றால் உணர்ந்து கொள்ளப்படும்.

இங்ஙனம் விதியைத் தம் மதிவலத்தால் நன்முகமாகத் திருப்பிக்கொண்டு வெற்றியுடன் வாழும் உரிமை, மக்கட்குத் திண்ணமாக உண்டு; அருளியல் உணர்வுடையோர்க்கு அஃது எளிது என்னும் பெருந்துணிபினை ஔவைப் பெருமாட்டியார்,

"வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை;—நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லால் கவலைபடேல் நெஞ்சேமெய்
விண்ணுறுவார்க்கு இல்லை விதி"

என ஓர் அரிய செய்யுளின் தெளிவாக விளக்கியருளுகின்றமை பெரிதுங் கருத்திருத்தற்பாலதாகும். அருளியல் உணர்வுடையோர்க்கு அஃதிங்ஙனம் எளிதாதலின், அதற்கேற்ற நெறிமுறைமையில் நிற்றற்குரிய முடிந்த வாயிலினையும் வகுத்துரைக்க விரும்பி அம்மையார்,

" சிவாயநம என்று சிந்தித் திருப்பார்க்கு
அபாயம் ஒருநாளும் இல்லை—உபாயம்
இதுவே மதியாகும் ; அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும் "

என இறுதியாக ஓர் அரும்பெறல் அருட்செய்யுளினையும் வழங்கியருளி, மக்களினத்தை உரிய தெளிவின்கண் நிறுத்தி உய்விக்கின்றனர். இதன்கண், 'இதுவே மதியாகும்;' இன்றேல், விதியே மதியாய் விடும்' எனத் தீர்ந்த அறிவிப்பினை முன்னறிந்து அறிவித்திருக்கும் மாட்சி, உலகுக்கு ஓர் அரும்பெரும் உய்வொளிச் செல்வமாகும் என்க.

---

# کتب خانہ

## جامعہ عثمانیہ

۱- اراکین مجلس اعلیٰ، مجلس [illegible]، مجلس انتظامی، جامعہ [illegible] ایک وقت میں پانچ کتابیں لے سکیں گے۔

مجالس شعبہ جات و نصاب، [illegible] اساتذہ ریڈرس [illegible] ایک وقت میں [illegible] لے سکیں گے۔

۲- اساتذہ جامعہ عثمانیہ و کلیات [illegible] ایک وقت میں چار کتابیں لے سکیں گے۔

اور اراکین و [illegible] کتابیں [illegible] ایم۔اے اور [illegible] ایل ایل بی اور تحقیقاتی جماعتوں کے

۳- طلبائے ایم۔اے، ایل ایل بی [illegible] ایک وقت میں تین کتابیں لے سکیں گے۔

کے طلبہ تین کتابیں دو ہفتہ کے لیے [illegible] واپس نہ ہوں تو طلبہ [illegible]

طلبہ پانچ کتابیں [illegible] کتابیں واپس لیا جائیگا۔ [illegible] رکھ سکیں گے۔

۴- مدت مقررہ پر کتاب واپس نہ کرنے پر [illegible] جاری کی جائیگی [illegible]

ایک آنہ یومیہ فی کتاب جرمانہ لازم ہے۔

۵- [illegible] کتاب کا لانا لازم ہے [illegible]

کتب خانہ میں کتاب خراب ہو جائے یا گم ہو جائے [illegible]

کرے گا۔ کتابیں [illegible]

۶- [illegible] کتابوں پر کسی قسم کا نشان

عائد ہوگا۔

نہ لگایا جائے۔

கழக வெளியீடு—

# ஔவையார்
# திருவுள்ளம்

❋

இளவழகனார்
எழுதியது

❋

திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
௧, பவழக்காரத் தெரு, சென்னை.

விலை அணா